Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C) ராம்கோ சீமெந்து
(C/1283)


முரசு – 02 திருவள்ளுவர் ஆண்டு 2042 மாசி 13 சனிக்கிழமை (25.02.2012) பக்கங்கள் 16 ஓசை – 147



கடன் சுமையால் தற்கொலை (13)



நடிப்பால் மணவாழ்வு இல்லை (12)



இவருக்கு நேரமில்லையாம் (06)



5 ரூபா அதிகம் (09)

# ஐ.நா.வுடன் இணைந்து செயற்பட வலியுறுத்துகிறது ஐரோப்பிய ஒன்றியம்

(ஜெனிவா)

ஐ.நா. நிபுணர் குழு அறிக்கை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கை ஆகியன தொடர்பாக ஐ.நா பொதுச்செயலர், மற்றும் பொருத்தமான ஐ.நா. அமைப்புகளுடன் இணங்கிச் செயற்பட ஐரோப்பிய ஒன்றியம் தொடர்ந்தும் இலங்கை அரசை ஊக்குவிக்கும். அனைத்துலக சமூகத்தில் இலங்கை ஒரு செயல் நிலையான நாடு, உண்மையான நல்லிணக்கத்தை நோக்கி உறுதியான அர்த்தமுள்ள நடவடிக்கைகளை நடைமுறைப் படுத்துவதற்கான அதன் திட்டத்தை உலகிற்கு காட்டுவதற்கு ஒரு வாய்ப்புக் கிடைத்துள்ளது என்று ஐரோப்பிய ஒன்றியம் கூறியுள்ளது.

ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிரான தீர்மானம் சமர்ப்பிக்கப்படுவதற்கு இன்னமும் சில நாட்களே உள்ள நிலையில், நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை விரைவாக நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஐரோப்பிய ஒன்றியம் கோரியுள்ளது.

இதுதொடர்பாக ஐரோப்பிய ஒன்றியம் நேற்று முன்தினம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளை திறம்பட நடைமுறைப்படுத்தினால், தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கையில் முக்கியமான பங்களிப்பைச் செய்ய முடியும்.

இலங்கையில் இனமுரண்பாட்டுக்கு மூலகாரணமான தமிழ்மக்களின் உண்மையான குறைகளை தீர்ப்பதில் கடந்தகால அரசாங்கங்கள் தவறியுள்ளன என்ற நல்லிணக்க ஆணைக்குழுவின் கருத்தை ஐரோப்பிய ஒன்றியம் ஏற்றுக் கொள்கிறது. எல்லா குழுக்கள், மற்றும் சமூகங்களிடையேயும் உண்மையான நல்லிணக்கம் அவசியம். அதை அடைவதற்கு கடந்தகால சம்பவங்கள் குறித்த நீதி விசாரணையும், பொறுப்புக் கூறுவதும் முக்கியம். (15 ஆம் பக்கம் பார்க்க)

## பால்மா விலை அதிகரிக்கும்?

(கொழும்பு)

450 கிராம் பால்மாவின் விலையை 15 ரூபாவினால் அதிகரிப்பதற்கு நுகர்வோர் விவகார அதிகாரசபை அனுமதியளிக்காவிட்டால், இறக்குமதியை நிறுத்தப்போவதாக பால்மா இறக்குமதியாளர்கள் எச்சரித்துள்ளனர்.

உள்ளூர் பால் மா சந்தையில் 95 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் இறக்குமதியாளர்கள், நட்டத்தை எதிர்கொள்வதால் பால்மா வர்த்தகத்தில் ஈடுபடுவதில் நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளதாக கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாடொன்றில் உரையாற்றிய மெலிபன் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி லக்ஷ்மன் வீரசூரிய (15 ஆம் பக்கம் பார்க்க)

## அதிகாரப் பகிர்வு அவசியம் வலியுறுத்துகிறது ஐ.தே.க.


(கொழும்பு)

நாட்டில் அதிகாரப் பகிர்வை முன்னெடுப்பது அவசியமாகும் என்று ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது. நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் கலந்துகொண்ட ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல இந்தக் கருத்தினைக் கூறினார்.

ஐக்கிய தேசியக் கட்சி மீது எத்தகைய குறைகளைக் கூறிய போதிலும், இந்தக் கட்சியினர் நாட்டை நேசிப்பதாக அவர் குறிப்பிட்டார். இலங்கையை ஒரே நாடாக வைத்துக்கொள்ள வேண்டிய தேவை தமது கட்சிக்கு உள்ளதாகவும், அதற்கு அதிகாரப் பகிர்வு அவசியமாகும் என்றும் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

இது குறித்த கருத்துக்களை (15 ஆம் பக்கம் பார்க்க)

## அழகியல் வளாகம் புதிய கட்டடம் தெல்லிப்பளை மகாஜனாவில் திறப்பு





(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரிக்கான புதிய அழகியல் வளாகத்துக்குரிய புதிய கட்டடத் தொகுதி நேற்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷவால் திறந்து வைக்கப்பட்டிருக்கிறது.

30 மில்லியன் ரூபாவிற்கு மேலதிகமாக செலவிடப்படவிருந்த தெல்லிப்பளை மகாஜனா கல்லூரிக்கான இக்கட்டடத் தொகுதி இராணுவத்தினரின் மனிதவலுவின் உதவியோடு 21.9 மில்லியன் ரூபாவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.

தெல்லிப்பளை மகாஜனா கல்லூரிக்கான 3 மாடிகளைக் கொண்ட கட்டடத் தொகுதியை பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ நேற்று பிற்பகல் திரைநீக்கம் செய்து வைத்தார். அதன்பின்னர் இடம்பெற்ற நிகழ்வில் உரையாற்றியபோதே கோத்தாபய இவ்வாறு புகழாரம் சூடினார்.

அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய பாதுகாப்புச் செயலாளர், (15 ஆம் பக்கம் பார்க்க)

## தூக்கில் தொங்கிய பெண்ணின் சடலம்

(யாழ்ப்பாணம்)

சீரணிப் பகுதியில் நேற்று தூக்கில் தொங்கிய நிலையில் மூதாட்டியின் சடலம் மானிப்பாய் பொலிஸாரினால் மீட்கப்பட்டுள்ளது. ஜெகதீசன் பத்மரஞ்சினி (வயது - 71)என்ற மூதாட்டியின் சடலமே இவ்வாறு மீட்கப்பட்டு பிரேத பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (எஸ்)

## பதவி வெற்றிடங்களை அறிய விரைவில் ஒன்லைன் சேவை

(கொழும்பு)

அரச மற்றும் தனியார் துறைகளிலுள்ள பதவி வெற்றிடங்களை பொதுமக்கள் அறிந்து கொள்ள வகை செய்யும் "ரெகியா பியச" ஒன்லைன் சேவை விரைவில் ஆரம்பிக்கப்படும் என திறன் அபிவிருத்தி அமைச்சர் லக்ஷ்மன் செனவிரத்ன நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் புத்திக பதிரன வாய்மூல பதிலை எதிர்பார்த்து கேட்ட கேள்விக்கு பதில் அளிக்கும் வகையில் அமைச்சர் இதனைத் தெரிவித்தார். குறிப்பிட்ட இணையத்தள சேவை மூலம் அரச மற்றும் தனியார் துறைகளில் உள்ள பதவி வெற்றிடங்களை பொது மக்கள் இலகுவாக அறிந்துகொள்ள உதவியாக இருக்கும் என்று அமைச்சர் கூறினார்.

## வடக்கின் அபிவிருத்திக்கு முக்கூட்டு உதவித் திட்டம்


(கொழும்பு)

சர்வதேச மனிதாபிமான சமூகத்தினதும் ஐக்கிய நாடுகள் சபை மற்றும் இலங்கை அரசாங்கத் தரப்பு ஆகிய மும்முனைப் பங்களிப்புடன் வடபகுதிக்கான முக்கூட்டு உதவித் திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

கடந்த செவ்வாய்க்கிழமை கொழும்பில் இடம்பெற்ற இந் நிகழ்வில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ பிரதம விருந்தினராக கலந்து கொண்டார்.

வடமாகாண ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறியும் இவ்விழாவில் கலந்து சிறப்பித்தார். வடக்கிற்கான மீள்குடியேற்றம், அபிவிருத்தி மற்றும் பாதுகாப்பிற்கான ஜனாதிபதியின் விசேட செயலணியின் செயலாளர் எஸ்.பி.திவாரத்ன, ஐக்கிய நாடுகள் சபையின் பிரதிநிதி சுபினே நான்டீ மற்றும் கர்ஷா குமார நவரட்ண மற்றும் சேவா லங்கா நிலையத்தின் தலைவர் ஆகியோர் உள்நாட்டு மற்றும் சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் சார்பாகக் கலந்து கொண்டனர். அரசாங்க அதிபர்கள், அமைச்சு செயலாளர்கள், மாகாண சபையின் செயலாளர்கள் மற்றும் ஜனாதிபதியின் விசேட செயலணியின் உத்தியோகத்தர்கள், ஐக்கிய நாடுகள் சபையின் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்து சிறப்பித்தனர்.

## அரசியல் கட்சிக்கான கட்டமைப்பு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு இல்லை



(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஒரு சரியான ஜனநாயக ரீதியான கட்டமைப்பு உருவாக்கப்படுவது மிகவும் அவசியம் என்றும் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் படைத்த மத்திய குழு ஒன்று அமைக்கப்படவேண்டும் என்றும் புளொட் அமைப்பின் தலைவர் த.சித்தார்த்தன் தெரிவித்துள்ளார்.

கூட்டமைப்பின் எதிர்காலம் குறித்தும் கூட்டமைப்பின் அடுத்த தலைமைத்துவம் குறித்தும் கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வவுனியா கூட்டத்தின்போது தனக்குப் பிறகு கூட்டமைப்பின் தலைமைப் பொறுப்பை தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரி எடுத்துக்கொள்ளலாம் என்று இரா.சம்பந்தன் கூறியிருந்தாரே, இது எந்தளவு நடைமுறைச் சாத்தியமானது என்ற கேள்விக்கு (15 ஆம் பக்கம் பார்க்க)

# "யாழ்ப்பாணத்தின் பெருமை" கண்காட்சி நேற்று ஆரம்பம்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திற்கு நேற்று விஜயம் செய்திருந்த பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ யாழ். நூல் நிலையத்தின் கேட்போர் கூடத்தில் "யாழ்ப்பாணத்தின் பெருமை" எனும் தொனிப்பொருளிலான மூன்று நாள் கண்காட்சியினை ஆரம்பித்து வைத்துள்ளார்.

யாழ். பாதுகாப்புப் படைகளின் தலைமையகத்தின் ஏற்பாட்டில் ஒழுங்கமைக்கப்பட்டிருந்த இக் கண்காட்சியானது இன்றும் நாளையும் தொடர்ந்து நடைபெறவுள்ளது.

நேற்று முற்பகல் 11.00 மணியளவில் விமானப்படை உலங்கு வானூர்தியின் மூலமாக யாழ். துரையப்பா விளையாட்டரங்கிற்கு வருகைதந்திருந்த பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு யாழ். நூல் நிலையத்தில் சிறப்பான வரவேற்பு வழங்கப்பட்டது.

மாணவர்களால் மாலை அணிவிக்கப்பட்டு பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் யாழ் நூல்நிலைய கேடபோர் கூடத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார். அங்கு மங்கள விளக்கேற்றல் நிகழ்வினை அடுத்து கண்காட்சிக் கூடத்தைப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் நாடாவை வெட்டித் திறந்துவைத்தார்.

இந் நிகழ்வில் இராணுவத் தளபதி லெப்ரினட் ஜெனரல் ஜகத் ஜயசூரிய, யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி மகிந்த ஹத்துருசிங்க, ஆளும்கட்சி உறுப்பினர் மிலிந்த மொறகொட, யாழ் சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆகேதீஸ்வரன் ஆகியோரும் பிரதம அதிதிகளாகக் கலந்துகொண்டனர்.

இதன்போது பாதுகாப்பு அமைச்சின் செயலாளருடன் ஏனைய அதிகாரிகளும் கண்காட்சியில் வைக்கப்பட்டிருந்த யாழ்ப்பாணத்தின் பெருமை சேர்க்கும் புகைப்படங்களைப் பார்வையிட்டனர். தொடர்ந்து அரச அதிகாரிகள், மதகுருமார், மாணவர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கண்காட்சியினைப் பார்வையிட்டனர். நிகழ்வின் இறுதியில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கும், இராணுவத் தளபதிக்கும் யாழ் பாதுகாப்புப் படைகளின் தலைமையகத்தால் நினைவுப் பரிசில் ஒன்றும் வழங்கப்பட்டுள்ளது.

தொடர்ந்து இக்கண்காட்சியினை பெருமளவு பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள் பார்வையிட்டு வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (பா)

## இல்ல மெய்வல்லுநர் போட்டிகள்

வேம்படி மகளிர் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பி.ப. 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் இடம்பெறவுள்ளது. இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வட மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி, கௌரவ விருந்தினராக வட மாகாண கல்வி, கலாசார அலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

** ** ** **

யாழ். புங்குடுதீவு கமலாம்பிகை வித்தியாலய இல்ல மெய்வல்லுநர திறனாய்வுப் போட்டி இன்று பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது. வித்தியாலய முதல்வர் நா.நாகராஜா தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக ஈ.பி.டி.பி.யின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின், சிறப்பு விருந்தினராக தீவக வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் பொ.அருணகிரிநாதன், வேலணைப் பிரதேச சபை தவிசாளர் சி.சிவராசா, வேலணை கோட்டக்கல்வி அதிகாரி கு.சரவணபவானந்தன், தீவக கல்வி வலய வழிகாட்டல் ஆலோசனை அதிகாரி திருமதி ஏ.குமாரதாஸ் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். கௌரவ விருந்தினராக ஈ.பி.டி.பி.யின் புங்குடுதீவு அமைப்பாளர் எஸ்.சிவனேசன் கலந்துகொள்ளவுள்ளனர். (69)

## காணியற்றவர்களுடன் விசேட கலந்துரையாடல்

(கோப்பாய்)

நிலாவரை ஜே/275 கிராம சேவகர் பிரிவிலுள்ள அரச காணியில் குடியிருக்கும் 28 குடும்பங்களின் காணிப்பத்திரம் பெறுவது தொடர்பாக கோப்பாய் பிரதேச ஈ.பி.டி.பி.யின் அமைப்பாளரும், வலி. கிழக்கு பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவருமான ஐங்கரனிடம் அப்பிரதேச மக்கள் முன்வைத்த கோரிக்கைக்கு இணங்க கடந்த புதன்கிழமை மாலை 3.00 மணியளவில் அப்பிரதேசத்திற்கு விஜயம் செய்த ஐங்கரனும், கோப்பாய்ப் பிரதேச செயலர் ம.பிரதீபனும், கோப்பாய் பிரதேச செயலக காணி உத்தியோகத்தரும் ஜே/275 கிராம சேவகரும் அப்பிரதேச மக்களுடன் கலந்துரையாடியதுடன் காணிப்பத்திரத்தைப் பெற்றுத்தருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்தனர்.

## மக்கள் வங்கி அறிவித்தல்

மக்கள் வங்கியின் பின்வரும் கிளைகளிலும் சேவை நிலையங்களிலும் 31.01.2011 வரை அடகு வைத்து இதுவரை மீட்கப்படாத நகைகள் 24.03.2012 (சனிக்கிழமை) மு.ப. 8.30மணிக்கு மக்கள் வங்கி, யாழ். ஸ்ரான்லி வீதிக் கிளையில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

| கிளைகள் | சேவை நிலையம் |
|---|---|
| யாழ். ஸ்ரான்லி வீதி | நாவலர் வீதி |
| காங்கசேன்துறை | மானிப்பாய் |
| யாழ். பிரதான வீதி | மல்லாகம் |
| ஊர்காவற்றுறை | உரும்பிராய் |
| நெல்லியடி | புத்தூர் |
| அச்சுவேலி | பண்டத்தரிப்பு |
| சங்கானை | கோப்பாய் |
| சுன்னாகம் | கொடிகாமம் |
| சாவகச்சேரி | உடுப்பிட்டி |
| வல்வெட்டித்துறை | திருநெல்வேலி |
| யாழ். பல்கலைக்கழகம் | கல்வியங்காடு |
| யாழ். கன்னாதிட்டி | இணுவில் |
| பருத்தித்துறை | புலோலி |

அறிவித்தலின்றி திகதியை ஒத்திப்போடுவதற்கும் ஏலம் விடப்படும் இடத்தினை மாற்றுவதற்கும் உரிமை வங்கிக்கு உள்ளது. பிராந்திய முகாமையாளர், மக்கள் வங்கி, பிரதேச காரியாலயம், கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.

23.02.2012 (C/1309)

## சிறு விளம்பரம்

### டயானா பிளாஸ்ரிக் தொழிலகம்

சகல விதமான மோட்டார் சைக்கிள், வாகனங்கள் என்பவற்றின் உடைந்த பிளாஸ்ரிக் பொருட்கள் உத்தரவாதத்துடன் ஒட்டித்தரப்படும். உற்பத்திகளும் உண்டு.

கனகசபை லேன், சிவலிங்கபபுளியடி, யாழ்ப்பாணம். Tel:- 021 222 8680, 0775925088 (C/1285)

### கணினி திருத்தம் (Computer Repair)

உங்கள் கணினிகள் பழுதடைந்து விட்டனவா? உடன் உங்களது வீடுகளுக்கே வந்து உரிய முறையில் திருத்தித் தருகிறோம். அழகான கணினி மேசைகளும் விற்பனைக்கு உள்ளன. அழையுங்கள் 0779086737 (C/1305)

## கலைநிலா அரங்கில் இன்று 'அனைத்தும் அவரே' நாட்டுக்கூத்து

(யாழ்ப்பாணம்)

யாழ். திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது அழகியல் கல்லூரியில் பயில்கின்ற மாணவர்களின் கலைத்திறன்களை வெளிக்கொணரும் முகமாக அக் கல்லூரியினால் மாதந்தோறும் நடத்தப்பட்டு வருகின்ற கலைநிலா அரங்க நிகழ்வுகள் இன்று மாலை 5.30 மணிக்கு 286, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கலைத்தூது கலையகத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் கல்லூரி மாணவர்களின் நடனங்கள், பாட்டு, ஓர்கன் இசை போன்றவற்றுடன் சிறப்பு நிகழ்ச்சியாக திருமறைக் கலா மன்றத்தின் நாட்டுக்கூத்துப் பிரிவின் தயாரிப்பில் 'அனைத்தும் அவரே' என்ற தென்மோடி நாட்டுக்கூத்து மேடையேற்றப்படவுள்ளது.

வேதாகமத்திலுள்ள நீதித் தலைவராகிய 'யோபு'வின் வரலாற்றை அடிப்படையாகக் கொண்ட இக் கூத்தை அண்ணாவியார் அ.பாலதாஸ் எழுதியுள்ளார். நெறியாள்கையை அண்ணாவியார் அ.பேக்மன் ஜெயராசா மேற்கொண்டுள்ளார். (52)

## அரச நடன விருது வழங்கல் விழா - 2011

அரச நடன விருது வழங்கல் விழா 2011. எதிர்வரும் 26 ஆம் திகதி மாலை கொழும்பு ஜோன் த சில்வா ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெறவுள்ளது. கலாசார மற்றும் கலை அலுவல்கள் அமைச்சர் ரி.பி.ஏக்கநாயக்க தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் நடனத் துறையில் பெரும் பங்காற்றிய கலாசூரி பியசார சில்பாதிபதி நடன திலகம் விருது வழங்கி கௌரவிக்கப்படவுள்ளார். இதன்போது 20 முதலாம் இடங்களையும் 15 இரண்டாம் இடங்களையும 10 மூன்றாம் இடங்களையும் மற்றும் தமிழ் மொழிமூலம் 8 முதலாம் இடங்களையும் 4 இரண்டாமிடங்களையும் மற்றும் ஒரு மூன்றாமிடத்தையும் பெற்றவர்களுக்கான விருது மற்றும் சான்றிதழ்கள் பணப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

கலாசார மற்றும் கலை அலுவல்கள் அமைச்சின் வழிகாட்டலில் கலாசார அலுவல்கள் திணைக்களம் மற்றும் இலங்கை கலைக் கழகத்தின் அரச நடன மற்றும் நாட்டிய நாடகக் குழுவினரின் ஏற்பாட்டில் இந்நிகழ்வு இடம்பெறவுள்ளது.

## நடவடிக்கை எடுப்பார்களா?




கோப்பாய் தெற்கு இருபாலை பழைய வீதியில் வலி. கிழக்கு பிரதேச சபைக்குச் சொந்தமான பொது மலசலகூடமும், கேணியும் அமைந்துள்ள காணியில் குப்பை கொட்டப்பட்டு துர்நாற்றம் வீசுகிறது. அப்பிரதேச மக்களும் வீதியால் பயணம் செய்யும் மக்களும் பிரதேசசபையின் செயற்பாடுகள் குறித்து அதிருப்தி தெரிவித்துள்ளனர். இதேவேளையில் இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பார்களா? என்ற கேள்வியையும் எழுப்பியுள்ளனர். (137)

## வீதியைப் பாதுகாக்க தடுப்புச் சுவர்

பருத்தித்துறை நகரசபை பிரதேசத்தில் 2 ஆம் குறுக்குத் தெருவில் இருந்து 4 ஆம் குறுக்குத் தெரு வரையான கடற்கரை வீதியைப் பாதுகாக்கும் வகையிலான தடுப்புச் சுவர் அமைக்கப்படவுள்ளது. பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் 6.3 மில்லியன் ரூபா நிதியுதவியுடன் இத் தடுப்புச் சுவர் அமைக்கப்படவுள்ளது. அடுத்த மாதமளவில் இப்புனரமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்படும் என தெரிவிக்கப்படுகிறது. (100)

## எரிபொருள் மானியம் காரைநகரில் விநியோகம்



சமுர்த்தி பயனாளிகளுக்கான மண்ணெண்ணெய் முத்திரை வழங்கும் நிகழ்வு காரைநகர் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் காலை 10.30 மணிக்கு இடம்பெற்றது.

பிரதேச செயலர் திருமதி தெய்வநந்தினி தலைமையில் இந்நிகழ்வு இடம்பெற்றது. முத்திரைகளைக் ஈ.பி.டி.பி. காரைநகர் பிரதேச அமைப்பாளரும், காரைநகர் பிரதேச சபையின் எதிர்க்கட்சித் தலைவருமான வி.கண்ணன், பிரதேச செயலர், சமுர்த்தி உத்தியோகத்தர் மற்றும் அதிகாரிகள் வழங்கிவைத்தனர்.

யாரையும் தீயவன் என்று கூற வேண்டாம்; நீ நல்லவன், இன்னும் நல்லவனாய் இரு என்று சொல்லுங்கள்.

- விவேகானந்தர்.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com

## தமிழ் சமூக உள்ளக்கிடக்கை!

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்குள் முன்னாள் அகிம்சைக் குழு மற்றும் முன்னாள் ஆயுதக் குழு என்று இரு பிரிவாகத்தான் உள் மோதல்கள் இடம்பெற்று வருகின்றன என்று நம்மில் பலர் நினைத்துக் கொண்டிருக்கிறோம்.

மாவையார் தலைமையிலான தமிழரசுக் கட்சியினரும், சுரேஷ் தலைமையிலான முன்பு "கையில் ஆயுதமேந்திய இயக்கக்காரர்களும்" அவர்களது எதிர் அரசியல் அமைப்புகளைச் சேர்ந்தவர்களுடன் மோதுவதை விட, தங்களுக்குள் மோசமான வார்த்தைப் பிரயோகங்களோடு இணையதளங்களிலும் அவரவர்க்குச் சார்பான கூட்டங்களிலும் சண்டையிட்டு வருவது ஊரறிந்ததே!

சமீபத்தில் கூட தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த திரு. சுமந்திரன், "தி ஐலண்ட்" பத்திரிகைக்கு அளித்த செவ்வியில், இயக்கப் பெடியளைப் பற்றிக் கூறும்போது, "வேலைவெட்டியற்ற, மடமைக் கோபம் கொண்ட, நிதான புத்தியற்ற..." என்ற அடைமொழிகளையே பயன்படுத்தியிருந்ததைப் பலரும் கண்டிருக்கலாம்.

பேச்சுவன்மையிலும், தந்திரபூர்வமான அணுகுமுறைகளிலும் கூட்டமைப்புக்குள் மாவையைவிட கெட்டித்தனமானவராகக் கருதப்படும் சுரேஷ், த.தே.கூ. வின் தலைமையிடத்தைக் குறிவைத்திருப்பதனால் உள்ளுக்குள் ஏற்பட்டிருக்கும் பதற்றம் ஒன்றும் இரகசியமானதல்ல. அதன்விளைவே அவர்கள் வெளிவிஷயங்களைக் கவனிக்க முடியாதளவுக்கு உள்பிரச்சினைகளில் மும்முரமாக மூழ்கியிருப்பது!

ஆனால், இந்த அகிம்சை – ஆயுதப் பிரச்சினையைவிட தீவிரமான முரண்பாடு ஒன்றும் அவர்களுக்குள் இருப்பதை இப்போது அறிய முடிகிறது. நேற்றுமுன்தினம் கொழும்பில் சகல தரப்பையும் பிரதிநிதித்துவப்படுத்தும் புத்திஜீவிகள் மட்டத்திலான கலந்துரையாடல் ஒன்றில் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனும், எம்.ஏ.சுமந்திரனும் பங்குபற்றியிருந்தார்கள்.

அங்கு, ஜெனீவா மகாநாட்டிற்கு கூட்டமைப்பினர் செல்வதற்கு இருக்கிறார்களா என்ற கேள்வி எழுந்தபோது, அதை ஆவேசமான முறையில் சம்பந்தன் அவர்கள் மறுத்துரைத்தார். எவ்வாறான அழுத்தங்கள் தரப்பட்டாலும், நாட்டைக் காட்டிக்கொடுக்கும் நடவடிக்கைகளைக் கூட்டமைப்பு மேற்கொள்ளப் போவதில்லை என்று கூடியிருந்த புத்திஜீவிகள் மத்தியில் அழுத்தியுரைத்திருக்கிறார் அவர்.

இலங்கை அரசை மாட்டுவதற்கு இதுதான் கடைசி சந்தர்ப்பம்; ஜெனீவா மாநாட்டை அனைத்துலகத் தமிழர்களின் பலத்தோடு எதிர்கொள்ள வேண்டும் என புலம்பெயர் ஆவேசத் தமிழர்களும், தமிழகத் தீவிரவாதத் தமிழர்களும் அறிக்கைகளை வெளியிட்டு வரும் நேரம் இது. தமிழ் தேசியக் கூட்டமைப்பும் ஜெனீவா சென்று இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி, இலங்கை அரசை மீளமுடியாதவாறு அமுக்கிவிட வேண்டும் என்ற நெருக்குதல்கள் உலகெங்குமிருந்தும் மட்டுமல்ல, கூட்டமைப்புக்குள்ளிருந்தும் கூட தீவிரத் தேசியர்களால் வற்புறுத்தப்பட்டு வருகிறது.

இவ்வாறான தமிழ்த் தேசியர்களின் நெருக்குதல்களுக்குத் தாங்கள் அடிபணிய முடியாது என்றிருக்கிறார்கள் சம்பந்தனும் சுமந்திரனும். இந்த சந்தர்ப்பத்தில் நாட்டைக் காட்டிக் கொடுக்கும் விதமாகச் செயற்படுவது சிங்களப் பெரும்பான்மை மக்களை மேலும் விரோதிப்பதாகும்; அது தீர்வு முயற்சிகளுக்கும் குந்தகமாகும் என்ற ஐக்கிய தேசியக் கட்சியின் நிலைப்பாட்டை ஒட்டியே கூட்டமைப்பின் நிலைப்பாட்டையும் முன்வைத்திருக்கிறார்கள்.

எப்படியிருந்த போதும், சம்பந்தனும் சுமந்திரனும் நடைமுறைச் சாத்தியம் எது என்பதை உணர்ந்து கருத்துரைப்பவர்களாகவே தங்களைக் காட்டி வருகிறார்கள். சிங்களப் பெரும்பான்மையின் இணக்கமின்றி இந்த நாட்டின் பிரச்சினைக்குத் தீர்வை ஏற்படுத்திவிட முடியாது என்று லண்டனிலும், 13 ஆவது திருத்தச் சட்டத்தின் குறைபாடுகளையும் தெரிந்து கொண்டுதான் அதுபற்றிப் பேசுகிறோம் என்று கிளிநொச்சிக் கருத்தரங்கிலும் திரு. சுமந்திரன் தெரிவித்திருப்பதான செய்திகள் எல்லாம் இதன் பகுதிதான்!

இந்த யதார்த்தம் உணர்ந்து பேசுகிறவர்களுக்கும் உணர மறுப்பவர்களுக்குமான முரண்பாடுதான் கூட்டமைப்புக்குள் தற்போது மேலெழுந்து வரும் முரண்பாடாகத் தெரிகிறது.

யதார்த்தத்தை நேர் நோக்கப் பஞ்சிப்பட்டு, எந்தத் துரும்பையும் அசைக்க முடியாமல் வெறும் தீவிரப் பேச்சுக்களில் திருப்தியடைபவர்கள், மனதுக்குள் தனிநாட்டை வைத்திருக்கிறார்களா அல்லது சிங்களவரின் சங்காத்தமே இல்லாமல் தனித்து வாழ, யாராவது வந்து ஏற்பாடு செய்துவிட்டுப் போவார்கள் என்று நினைக்கிறார்களா? தமிழ் சமூக உள்ளக்கிடக்கை மகாவிநோதமானதுதான்!

- ஆசிரியர்

# கொண்டச்சிகுடா கிராம மக்கள் அரச அதிபருக்கு மகஜர் கையளிப்பு

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தின் முசலி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கொண்டச்சிகுடா கிராம மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து முசலி பிரதேச பிரஜைகள் ஒன்றியம், மன்னார் மாவட்ட அரசாங்க அதிபருக்கு கையளிப்பதற்கான மகஜரை முசலி பிரதேச செயலர் ஊடாக நேற்று முன்தினம் புதன்கிழமை கையளித்துள்ளது.

அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, யுத்தம் காரணமாக கடந்த 2007ஆம் ஆண்டில் இடம்பெயர்ந்த கொண்டச்சிகுடா மக்கள், யுத்தம் முடிவடைந்த நிலையிலும் கூட தங்களது சொந்தக் காணிகளில் குடியமர முடியாத நிலை ஏற்பட்டுள்ளதுடன், தங்களது மீன்பிடித் துறைமுகத்தில் தொழில் செய்ய முடியாத நிலையிலும் உள்ளனர்.

இந்நிலையில் எமக்குச் சொந்தமான காணியில் குடியமர்வதற்கு ஏற்ற ஏற்பாடுகளை அரசாங்க பிரதிநிதிகள் செய்து தர வேண்டும்.

சிறு மீனவர்களாகிய நாங்கள் பரம்பரை பரம்பரையாக மீன்பிடித்து வந்த துறைமுகத்தில் கடற்படை இருந்தாலும் பறவாயில்லை. மீண்டும் அவ்விடத்தில் தொழில் செய்வதற்கு ஏற்ற ஒழுங்குகளை செய்து தர வேண்டும்.

முதலில் மக்களாகிய நாங்கள் குடியமர்ந்த இடத்துக்குள் (எமக்குச் சொந்தமான குடியிருப்புக்குள்) சிலாவத்துறை கடற்படை முகாமின் கழிவுப் பொருட்களும் அழுக்குகளும் கொட்டப்படுகின்றன.

இவ்வாறு வீசப்படுவது ஒரு பக்கத்தில் சரியாக இருந்தாலும் மறுபக்கத்தில் பார்க்கும்போது காற்றடிக்கும் நேரங்களில் வீசும் துர்நாற்றங்களினால் மக்கள் பல நோய்களுக்கும் வருத்தங்களுக்கும் ஆளாவதோடு நுளம்புகள் பரவக்கூடிய அபாயம் உள்ளது.

அங்கு காணப்படும் மிதிவெடிகளை அகற்றி மக்கள் சுதந்திரமாகவும் நிம்மதியாகவும் தங்களுடைய சொந்த கிராமத்தில் வாழ்வதற்கு ஏற்ற ஏற்பாடுகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டும்.

ஒட்டுமொத்தமாக மக்களை தங்களுடைய சொந்தக் காணிகளில் குடியமர்த்தி மக்கள் சுதந்திரமாகவும் நிம்மதியாகவும் வாழ்வதற்கான உரிமைகளை மக்களுக்கு பெற்றுக் கொடுக்கும்படி முசலி பிரதேச பிரஜைகள் ஒன்றியம், அரசாங்க பிரதிநிதிகளிடம் வேண்டுகோள் விடுத்து நிற்கின்றோம் என அந்த மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# போதைப்பொருள், மது தொடர்பாக மதுவரி நிலைய அதிகாரிகளுக்கு பயிற்சி

(யாழ்ப்பாணம்)

போதைப் பொருள் மற்றும் சட்டவிரோத மது உற்பத்தியில் ஈடுபடுபவர்களை அச்செயற்பாடுகளில் இருந்து தடுப்பதற்குரிய நடவடிக்கையை மேற்கொள்ளும் முகமாக வடகிழக்கு மதுவரி நிலைய அதிகாரிகளுக்கு பயிற்சிப் பட்டறை ஒன்று நடத்தப்பட்டுள்ளது.

வடமாகாண மதுவரி நிலைய ஆணையாளர் பி.கிறிஸ்ரி ஜோசப் தலைமையில் யாழ். மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற 4 நாள் பயிற்சிப் பட்டறையில் குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் விளக்கமளிக்கப்பட்டது.

யாழ். குடாநாட்டில் யாழ். மதுவரி நிலையத்திற்கு உட்பட்ட சட்டவிரோதமான மது உறபத்தி மற்றும் விற்பனை செய்யும் கிராமங்களைத் தெரிவு செய்து அப்பகுதி மக்களுக்கு விழிப்புணர்வு மூலம் எவ்வாறு மது உற்பத்தியை முற்றாக ஒழிக்க முடியும் என விளக்கமளிக்கும் நோக்கத்துடன் இப்பயிற்சிப் பட்டறை மேற்கொள்ளப்பட்டன.

சட்டவிரோத மது உற்பத்தி கிராமங்களான நாவாந்துறை, பாசையூர், கோண்டாவில், குமரகோட்டம், வடமேற்கு அரியாலை ஆகிய 5 கிராமங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இப்பகுதியில் மது ஒழிப்பு மேற்கொள்வதற்கான விழிப்புணர்வு வழங்கப்பட்டு எதிர்கால சந்ததியினரை மது வழங்கலில் இருந்து மீட்டெடுக்கும் நோக்கத்துடன் இப் பயிற்சிப் பட்டறை நடத்தப்பட்டுள்ளது.

(எஸ்)

# பாடசாலைகளின் விபரங்களை இற்றை படுத்தும் செயலமர்வு

(பருத்தித்துறை)

வடமாகணத்திலுள்ள 6 கல்வி வலயங்களிலும் உள்ள பாடசாலைகளிலுள்ள ஆசிரிய ஆளணி, கல்விசாரா ஊழியர் விபரம், மாணவர் விபரம், பாடசாலை அடிப்படைத் தரவுகளை இற்றை படுத்துவது தொடர்பான செயலமர்வு எதிர்வரும் 25 ஆம் திகதி காலை 8 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இச்செயலமர்வில் யாழ்ப்பாணம், வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி, தீவகம், கிளிநொச்சி ஆகிய கல்வி வலயங்களிலுள்ள பாடசாலைகளின் விபரங்கள் இற்றை படுத்தப்படவுள்ளது.

இச் செயலமர்வில் வலயத் திட்டமிடல் பிரதிக் கல்விப் பணிப்பாளர், கோட்டக்கல்வி அலுவலர்கள், முகாமைத்துவ உதவியாளர்கள் இச்செயலமர்வுக்கு வருகை தருவதுடன் மாகாண கல்வித் திணைக்கள வலயத்திட்டமிடல் பிரிவினூடாக கோட்டக்கல்விப் பணிப்பாளருக்கு வழங்கப்பட்ட படிவங்களை பூரணப்படுத்தி கொண்டு வருமாறு அறிவிககப்பட்டுள்ளது.

ஒவ்வொரு பாடசாலையிலும் சம்பளம் பெறும் அதிபர் ஆசிரியர்களின் விபரங்களை வலயக் கணக்காளருடன் உறுதிப்படுத்திய பிரதியை கொண்டு வருமாறும் மடிக்கணினி வழங்கப்பட்ட கோட்டக்கல்வி அதிகாரிகள் தங்களது மடிக்கணினி மற்றும் மின் இணைப்பு வயர்களையும் கொண்டு வருமாறு வடமாகாண கல்விப்பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார்.

(109)

# அபிவிருத்திக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

சித்தங்கேணி ஜனசக்தி சனசமூக நிலையத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

நிலையத்தலைவர் வெ.தேவராசா தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில் வலி.மேற்கு சனசமூக நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர் ஜே/157 வட்டு கிழக்கு கிராம சேவகர் க.சிறிதரன், வலிகாமம் வலய ஈ.பி.டி.பி. அமைப்பாளரும், வலிமேற்கு பிரதேச சபை எதிர்க்கட்சித் தலை வருமான சி.பாலகிருஷ்ணன் ஆகியோர் கலந்து கொண்டு இக்கிராமத்தின் 2012 ஆம் ஆண்டுக் கான அபிவிருத்தி குறித்து கலந்துரையாடவுள்ளதாகவும், இதில் சகல அங்கத்தவர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு நிலைய செயலாளர் அறிவித்துள்ளார்.

# கச்சதீவு உற்சவத்திற்கான விசேட படகுச் சேவை

(யாழ்ப்பாணம்)

இவ் வருடம் இடம்பெறும் கச்சதீவு உற்சவத்தினை முன்னிட்டு பின்வரும் படகுச் சேவைகள் நெடுந்தீவில் இருந்து மேற்கொள்ளப்படவுள்ளதாக நெடுந்தீவுப் பிரதேச செயலர் ஆ.சிறி தெரிவித்துள்ளார்.

நெடுந்தீவு பிரதேசத்தில் கடந்த 22 ஆம் திகதி அன்று நடத்தப்பட்ட கலந்துரையாடலுக்கு அமைவாகவே இவ் விசேட படகுச் சேவை நடாத்தப்படவுள்ளது.

இதன்படி எதிர்வரும் 3 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு நெடுந்தீவு ப.நோ.கூ.சங்க படகுச் சேவையும், காலை 10.30 மணிக்கு நெடுந்தீவு அக்குவாட்டி படகுச் சேவையும், காலை 11.30 மணிக்கு நெடுந்தீவு கடற்றொழிலாளர் சங்க படகுச் சேவையும், பிற்பகல் 12.30 மணிக்கு நெடுந்தீவு சென். அன்ரனிஸ் படகுச் சேவையும் இடம்பெறவுள்ளதுடன், 4 ஆம் திகதி அதிகாலை 4.30 மணிக்கு நெடுந்தீவு ப.நோ.கூ.சங்க படகுச் சேவையும் இடம்பெறவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

# இனப்பிரச்சினைக்கு சமூகத் தீர்வு ஜனாதிபதி தலைமையில் விசேட மாநாடு

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்கு தீர்வுகாணும் முயற்சியாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் கடந்த புதன்கிழமை அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகள் கலந்து கொள்ளும் விசேட மாநாடு நடைபெற்றது. இம்மாநாட்டில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி சார்பில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் பிரத்தியேக செயலாளர் கே.தயானந்தா தலைமையில் கட்சியின் முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

இம்மாநாட்டில் கலந்து கொண்ட ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் பிரதிநிதிகள் தமிழ் பேசும் மக்களின் அரசியலுரிமைப் பிரச்சினை குறித்து தமது நிலைப்பாட்டை வலியுறுத்தியிருந்தனர்.

தமிழ்பேசும் மக்களின் அரசியலுரிமைப் பிரச்சினையை தீராப் பிரச்சினையாக்கி அதன் மூலம் அரசாங்கத்துடன் வெறும் பகமையுணர்வை வளர்த்துக் கொள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் விரும்புகிறார்கள் என்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் எமது மக்களின் அரசியலுரிமைப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் முயற்சிகளைக் கைவிட்டு காலம் கடத்தும் செயல்களில் ஈடுபட்டு வருகிறார்கள் என்றும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் பிரதிநிதிகளால் விளக்கப்பட்டது.

மேற்கூறிய காரணங்களால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்காகக் காத்திருப்பது காலத்தை விரயமாக்கும் செயல் என்றும் ஆகவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தவிர்ந்த ஏனைய தமிழ்க் கட்சிகளின் ஒத்துழைப்போடு அரசியலுரிமைப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும் என்றும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி தரப்பால் வலியுறுத்தப்பட்டது.

இதன்போது கருத்துத் தெரிவித்திருந்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, இக்கருத்தை தாம் ஏற்றுக் கொள்வதாகவும் அதேவேளை நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் ஊடாக பிரச்சினைக்குத் தீர்வு காணும்போது சகல கட்சிகளின் ஒத்துழைப்பு கிடைக்க வாய்ப்புக்கள் உள்ளதாகவும் தெரிவித்திருந்தார்.

இக்கூட்டத்தில் ஆராயப்பட்ட கருத்துக்களின் படி ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியால் வலியுறுத்தப்பட்டு வரும் கருத்துக்கு சாதகமான நிலைமை தோன்றியிருப்பதோடு நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் ஊடாக அரசியலுரிமைப் பிரச்சினைக்குத் தீர்வு காண்கின்ற அதேவேளை, நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்காத தமிழ்க் கட்சிகளின் ஆலோசனைகளும் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் முன்பாக தெரிவிப்பதற்கான சந்தர்ப்பம் உருவாக வாய்ப்புள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தடைசெய்யப்பட்ட தொழில் முறைமை கச்சதீவில் இருதரப்பு பேச்சுக்கு ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

கச்சதீவில் எதிர்வரும் 4 ஆம் திகதி கச்சதீவு அந்தோனியார் உற்சவத்தின்போது இந்திய ம்னவர்களுக்கும் இலங்கை மீனவர்களுக்கும் இடையில் நடைபெறவுள்ள இரு நாட்டுக் கடற்றொழிலாளர்களது பிரச்சினைகள் குறித்த பேச்சுக்களில் வடபகுதிக் கடற்றொழிலாளர் பிரதிநிதிகளும் கலந்து கொள்ளவுள்ளதாக யாழ். மாவட்ட கடற்றொழில் கூட்டுறவு சங்கங்களின் சம்மேளனத் தலைவர் என். தவரட்ணம் நேற்றுமுன்தினம் தெரிவித்தார்.

இவ்வாறு இரு நாட்டு மீனவர்களும் கச்சதீவில் கூடி தமது பிரச்சினைகள் குறித்து பேச்சு வார்த்தையில் ஈடுபடுவதற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளார் என்பது தெரிந்ததே.

இப்பேச்சு வார்த்தைகளில் கலந்து கொள்வதற்கு வருகை தரும்படி கிளிநொச்சி, மன்னார் மாவட்ட கடற்றொழில் சங்க பிரதிநிதிகளுக்கு அழைபபு விடுக்கப்பட்டுள்ளதாகவும் முல்லைத்தீவு மாவட்ட பிரதி நிதிகள் குறிப்பிட்டார்.

எமது அரசாங்கத்தால் தடைசெய்யப்பட்ட தொழில் முறைகளைப் பயன்படுத்தி மீன் பிடிப்பது நிறுத்தப்பட வேண்டும் என்பதே தமது நோக்கங்களின் முக்கிய விடயம் எனவும் என். தவரட்ணம் மேலும் தெரிவித்தார். .(பா)

# போதையில் மிதந்த சாரதிகள் சட்டத்தின் பிடியில் சிக்கினர்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் பகுதியில் மது போதையில் தொலைபேசியில் உரையாடிக்கொண்டு வாகனம் செலுத்திய 4 நபர்களுக்கு 12 ஆயிரம் ரூபா அபராதம் யாழ். நீதவான் நீதிமன்றம் விதித்துள்ளது.

கோப்பாய் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட வழக்கில் குறித்த நால்வரும் கைது செய்யப்பட்டு நேற்றுமுன்தினம் யாழ். நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

மேற்படி வழக்கினை விசாரணை மேற்கொண்ட யாழ். நீதவான் நீதிமன்ற நீதிபதி மா. கணேசராசா குற்றவாளிகள் குற்றத்தை ஒப்புக் கொண்டதற்கு இணங்க ஒவ்வொரு ஆட்களும் தலா 3 ஆயிரம் ரூபா தண்டம் செலுத்துமாறு உத்தரவிட்டு தீர்ப்பளித்தார். (எஸ்)

# 'பூத்திடும் பனந்தோப்பு' நூல் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

வேதநாயகம் தபேந்திரனின் 'பூத்திடும் பனந்தோப்பு' நூல் வெளியீட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு நாவலர் வீதியில் அமைந்துள்ள சொர்ணாம்பிகை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

ஆறுதல் இயக்குநர் சு.டிவகலாலா தலைமையில் .நடைபெறறும் இந்நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக வணிக முகாமைத்துவ கற்கைகள் பீட பீடாதிபதி பேராசிரியர் தி.வேல்நம்பி பிரதம விருந்தினராகவும், யாழ். இந்துக் கல்லூரி அதிபர் வீ.கணேசராசா, சென். சாள்ஸ் மகா வித்தியாலய அதிபர் மா.ஞானப்பிரகாசம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்ளவுள்ளனர். இந்நிகழ்வில் நூல் வெளியீட்டுரையை யாழ். வலய உ[illegible]கல்விப் பணிப்பாளர் மு.இராசநாயகம் வழங்கவுள்ளதுடன், . நூலின் முதற்பிரதியை என்.கே.துரைசிங்கம் பெறவுள்ளார்.

# ஒட்டுசுட்டான் பிரதேச சபையை தனியாக இயக்கக் கோரிக்கை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச சபை புதுக குடியிருப்பு பிரதேச சபையுடன் இணைக்கப்பட்டுள்ளதால் ஒட்டுசுட்டான் பிரதேச சபையின் அபிவிருத்திகள் முன்னெடுக்கப் பட முடியாதநிலை காணப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

விசுவமடு ரெட்பானாவில் புதுக்குடியிருப்பு பிரதேச சபையுடன் ஒட்டுசுட்டான் பிரதேச சபை இணைந்து செயற்படுகின்றது. இதன் உப அலுவலகம் ஒட்டுசுட்டானில் அமைந்துள்ளது.

இந்நிலையில் கடந்த 35 வருடங்களுக்கு மேலாக புதுக்குடியிருப்புப் பிரதேச சபையுடன் ஒட்டுசுட்டான் பிரதேச சபை இணைக்கப்பட்டுள்ள நிலையில், போருக்கு முன்னர் தனியாக இயக்க முடியாத சூழ்நிலை காணப்பட்டதாகவும், தற்போது மக்கள் மீள் குடியேறி வாழ்ந்து வரும் நிலையில் இவ்வாறு இரு சபைகளும் இணைக்கப்பட்டுள்ளதால், அபிவிருத்தி நடவடிக்கைகள் பாதிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக ஒட்டுசுட்டான் பிரதேச சபை ஈட்டிவரும் வருமானம் முழுவதும் புதுக்குடியிருப்பு பிரதேச சபைக்கே கிடைத்து வருவதால், ஒட்டுசுட்டான் பிரதேச சபையினால் பாலப்புனரமைப்பு, நகர அபிவிருத்தி, வீதிப் புனரமைப்பு உள்ளிட்ட அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ள முடியாதுள்ளது.

இப்பிரதேச சபை 27 கிராம சேவையாளர் பிரிவுகளைக் கொண்டமைந்ததுடன் 5 ஆயிரத்து 298 குடும்பங்களைச் சேர்ந்த 17 ஆயிரம் பேர் மீள்குடியேறி வாழ்ந்து வருகின்றனர்.

ஒட்டுசுட்டான் புதுக்குடியிருப்பு பிரதேச சபைகளை இரண்டாகப் பிரித்து ஒவ்வொரு பிரதேச சபையினால் ஈட்டப்படும் வருமானத்தின் மூலம அவ்வவ் பிரதேச சபையின் அபிவிருத்தி நடவடிக்கை களை மேறகொள்ள மாகாண அமைசசர் ஆவண செய்யுமாறு மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (04)

# முல்லைத்தீவு நகரப்பகுதிகளில் பல குறைபாடுகள் நிலவுகிறது

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு நகரம் பல்வேறுபட்ட குறைபாடுகளுடன் இயங்கிவருவதாக பொதுமக்களால் விசனம் தெரிவிக்கப்படுகிறது.

இப்பகுதியில் 1000 குடும்பங்கள் வாழ்ந்து வரும் நிலையில் இப்பகுதிக்கு ஒழுங்கான முறையில் வீதி மின் விளக்குகள் பொருத்தப்படாமையால் இரவு நேரப்போக்குவரத்துகள் பெரும் சிரமத்தின் மத்தியில் இடம் பெறுவதாக தெரிவிக்கப் படுகின்றது.

குண்டும் குழியுமாக இருக்கும் வீதிகள் காபற் வதியாக மாற்றும் வரை கிரவல் மண் கொண்டு பரபப்படாமையால் வாகனங்கள் மற்றும் துவிச்சக்கர வண்டிகளில் செல்வோர் பெரும் துன்பங்களை அனுபவிப்பதாகச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

இதைவிட இரவுவேளைகளில் வீதிகளில் நித்திரை செய்யும் கட்டாக்காலி கால்நடைகளால் போக்குவரத்தை மேற்கொள்ளும் மக்கள் விபத்துகளை எதிர்கொள்ள வேண்டியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இப்பகுதியிலுள்ள சின்னாத்துப்பாலமும் சேதமடைந்துள்ளதுடன் கழிவுநீர் வாய்க்கால்களும் இதுவரை புனரமைக்கப்படாத நிலையில் இருந்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

நகரத்திலுள்ள சந்தைப் பகுதியிலும் வியாபாரிகளும், நுகர்வோரும் சைக்கிள் நிறுத்துவதற்கு தனியாக இடம் அல்லாது வீதியின் இருமருங்கிலும் நிறுத்துவதாகவும். நிலையான சைக்கில் தரிப்பிடம் இல்லாது அச்சத்துடன் நுகர்வோர் வீதிகளில் சைக்கிளை நிறுத்தவேண்டிய நிலை காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறான குறைபாடுகள் நிலைவிவரும் நிலையில் மக்களின் தேவைகளை இனங் கண்டு அத்தியாவசிய செயற்பாடுகள் மேற் கொள்ளப் பட வேண்டும் என ரொபாதுமக்கள் தரப்பினால் சுட்டிக் காட்டப்படுகிறது. (04)

# கூட்டம்

(பருத்தித்துறை)

வடமராட்சி கல்வி வலயத்தில் ஆங்கிலபாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான கூட்டம் இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு புலோலி மெ.மி. த.க பாடசாலையில் நடைபெறவுள்ளது. (100)



அல்வாய் சாமணந்தறை ஆலடிப் பிள்ளையார் கோவிலில் சிவராத்திரி தினத்தன்று சின்னராஜா விமலன் அவர்களின் நெறியாள்கையில் "சங்கரதாஸ் சுவாமிகள் நாடக சபா" வழங்கிய "பவளக்கொடி" இசை நாடகத்தின் சில காட்சிகளைக் காணலாம்.

# நாவலரது வாழ்வியல் சிந்தனைகள் சிறுவர்களை நல்வழிப்படுத்துகிறது

**விரிவுரையாளர் ச.லலீசன்**



(யாழ் நிருபர்)

நாவலரது வாழ்வியல் நம் ஒவ்வொரு வருடைய உள்ளத்திலும் உள்வாங்கப்பட வேண்டும். நாவலர் எங்கள் காவலர் என்ற உணர்வு நம்மில் ஏற்படுதல் காலத்தின் தேவையாகவும் அமைந்திருக்கிறது என்று தெரிவித்தார் கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் ச.லலீசன்.

கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் எழுதிய ஆறுமுக நாவலர் என்ற சிறுவர்களுக்கான நூலின் வெளியீட்டு விழா கடந்த சிவராத்திரி தினத்தன்று மாலை யாழ். இந்துக் கல்லூரிக்கு அருகில் உள்ள அன்பொளி கல்வியகத்தில் யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை ஆசிரியர் வே. அன்பழகன் தலைமையில் இடம்பெற்றது.

இந்த வெளியீட்டு விழாவில் நூலுக்கான வெளியீட்டுரையை ஆற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

பத்தொன்பதாம் நூற்றாண்டில் அந்நியரின் ஆதிக்கத்தின் கீழ் எங்கள் மக்களின் உரிமைகளைக் காப்பாற்றுவதற்காக நாவலர் பெருமான் ஒரு தர்மப் போராட்டத்தை நடத்தினார். இன்றைய வாழ்வியலிலும் அவரது தர்மப் போராட்டத்தின் உணர்வுகள் எமக்குத் தேவைப் படுகின்றன. இந்த உணர்வுகள் சிறுவயதிலேயே ஊட்டப்பட வேண்டும். சிறுவர்களுக்காக கலாநிதி மனோன்மணி சண்முகதாஸினால் எழுதப்பட்ட இந்த நூல் இந்தத் தேவையை நிச்சயம் நிறைவேற்றும்.

எங்கள் மண் மாண்புற உழைத்த பெரியோர்களுடைய வாழ்க்கை வரலாறுகளை சிறுவர்கள் அறிந்துகொள்ள வேண்டும். இதற்கேற்ற வகையில் நூல் வெளியீடுகள் இடம்பெற வேண்டும் என்றார்.

நூல் வெளியீட்டின்போது ஏற்புரை வழங்கிய நூலாசிரியர் கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் எனது வாழ்க்கைக் காலத்தில் 20 இற்கும் மேற்பட்ட நூல்களை எழுதி வெளியிட்டிருக்கிறேன். ஆனால் இன்று சிறுவர்கள் மத்தியில் நடைபெறும் இந்த நூல் வெளியீட்டு விழாவே எனக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்திய நிகழ்வாக அமைந்திருக்கிறது. சமயம் மீதும் சமூகம் மீதும் சிறுவயதிலேயே நாவலருக்குப் பற்றுதல் ஏற்பட்டுவிட்டது. அந்த உணர்வை மனதில் இருத்தியே இந்த நூலை எழுதியுள்ளேன் என்றார்.

நூலின் முதற்பிரதியை பேராசிரியர் அ.சண்முகதாஸ், கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் ஆகியோர் இணைந்து வெளியிட்டு வைக்க யாழ். உச்ச நீதிமன்றக் கணக்காளர் வே.கலைச் செல்வன் பெற்றுக்கொண்டார். (10)



யாழ். பொலிஸ் போக்குவரத்து பிரிவைச் சேர்ந்த சார்ஜன்ட் யு.டி.டபிள்யூ ஜயதிலக யாழ். ஒஸ்மானியாக் கல்லூரி மாணவர்களுக்கு வீதியில் நடந்து செல்வது எப்படி என்ற வகையில் விளக்கமளிப்பதையும் அருகில் அதிபர் எம். எஸ். ஏ.எம்.முபாரக் நிற்பதையும் காணலாம். (105)

## வடமராட்சி கல்வி வலய செயலமர்வு

(பருத்தித்துறை)

வடமராட்சி கல்வி வலயத்துக்குட்பட்ட ஆரம்பப் பிரிவு ஆசிரியர்களுக்கான கற்பித்தல் தொடர்பான நுட்பங்களை அறிமுகம் செய்தல் என்னும் விடயம் பற்றிய செயலமர்வு இன்று சனிக்கிழமை காலை 8 மணிமுதல் புலோலி மெ.மி.த.க. பாடசாலை ஆசிரிய வள நிலையத்தில் நடைபெறவுள்ளது.

ஆசிரியர்கள் தரம் 3 - 5 வரையான ஆசிரிய அறிவுரைக்கு வழிகாட்டியையும் தவறாது கொண்டு வருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (109)

## தரம் 10 மாணவர்களுக்கான "உங்களுக்குத் தெரியுமா?" போட்டி

(பருத்தித்துறை)

மத்திய கல்வி அமைச்சின் தீர்மானத்துக்கமைய உங்களுக்குத் தெரியுமா? போட்டியானது பாடசாலை வலய மாகாண தேசிய மட்டங்களில் நடைபெறவுள்ளது.

இதற்கமைவாக பாடசாலை மட்டத்தில் வடமராட்சி வலய சகல பாடசாலைகளிலும் தரம் 10 இல் கல்விபயிலும் மாணவர்களுக்கு கட்டம் கட்டமாக எழுத்துப பரீட்சை நடைபெறவுள்ளது.

இந்தப் பரீட்சை நாளைமறு தினம் திங்கட்கிழமை நடத்தப்படுவதுடன் சுகாதாரம், குடிநீர், போஷாக்கு, எச்.ஐ.வி (எயிட்ஸ்) போன்ற விடயங்கள் உள்ளடங்கலாக பரீட்சை வினாத்தாள்கள் அமையவுள்ளன.

இதற்கான வினாத்தாள்கள் மாகாணக் கல்வித் திணைக்களத தினால் வழங்கப்படவுள்ளது.

மாகாணக் கல்வித் திணைக்களத்தினால் வழங்கப்படும் புள்ளித் திட்டத்துக்கு அமைவாக இந்தப் பரீட்சை வினாத்தாள்கள் திருத்தப்பட்டு மாணவர்கள் பெற்ற புள்ளிகளுக்கு ஏற்ப பாடசாலை ரீதியாக உரிய ஒழுங்கில் மாணவர்கள் புள்ளி விபரங்கள் அட்டவணைப்படுத்தப்பட்டு எதிர்வரும் 21 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்க வேண்டும்.

இதில் 50 இற்கும் குறைந்த மாணவர்களைக் கொண்ட பாடசாலை 5 பேரையும் 50 இற்கும் 100 இடைப்பட்ட மாணவர்களாயின் 7 பேரையும், 101 - 200 வரையான மாணவர்களாயின் 10 பேரையும் 200 இற்கு மேற்பட்ட மாணவர்களாயின் 15 பேரையும் தெரிவு செய்து விபரங்களை வலயக் கல்வி அபிவிருத்திப் பிரிவுக்கு அனுப்பி வைக்குமாறு வடமராட்சி வலய திட்டமிடல் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி வி.சுகுமாரன் அறிவித்துள்ளார். (109)

## சமாசத்தின் பொதுச் சபைக்கூட்டம்


(வடமராட்சி)

வடமராட்சி வடக்கு கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் பொதுச் சபைக்கூட்டம் எதிர்வரும் 2ஆம் திகதி காலை 10 மணிக்கு சக்கோட்டை பொதுநோக்கு மண்டபத்தில் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் வி.சிவகுமார் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தின் பிரதம விருந்தினராக யாழ். கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.கே. அருந்தவநாதன் மற்றும் சிறப்பு விருந்தினராக யாழ். கடற்றொழில் நீரியல் வளத்திணைக்கள உதவிப் பணிப்பாளர் இ.ரவீந்திரன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்தக் கூட்டத்துக்கு உரியவர்கள் அனைவரையும் தவறாது சமுகமளிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (100)

## பரமர் சங்கமம்



முள்ளிவாய்க்கால் நிகழ்வுகள் 2009 ஆம் ஆண்டு நடுப்பகுதியில் நடந்து முடிந்தன. அதற்கு முன்பாக 1990 ஆம் ஆண்டு முற்பகுதியில் கொழும்புத்துறைச் சந்திக்கும், மணியம் தோட்டத்துக்கும் இடைப்பட்ட வசந்தபுரம் பகுதியில் முகாமிட்டிருந்த சகோதர அமைப்பின் முகாமமொன்றை இரவோடிரவாகப் புலிகள் தாக்கி அழித்ததில் பலர் கொல்லப்பட்டனர்.

இந்திய சமாதானப் படையினர் இங்கே இருந்த காலம். அதனைத் தொடர்ந்து புலிகள் மேலும் முன்னேறி வந்தால் முள்ளி வாய்க்காலை விடவும் அதிகமாக மக்கள் அழிந்திருப்பார்கள்.

அந்தக் காலங்களில் குடாநாட்டில் வாழ்ந்துகொண்டிருந்த ஒவ்வொரு பிரஜைகளின் எண்ணங்களிலும் எந்தநேரமும் எதுவும் நடக்கலாமென்னும் பயப்பீதிதான்.

அப்போது பிரதமராக இருந்த பிரேமதாஸாவின் விருப்பப்படி இந்திய சமாதானப்படையை இங்கிருந்து விலகிக் கொள்ள சிறிது காலம் இந்தியப் பிரதமாராக விளங்கிய வி.பி. சிங் இணங்கியதால் யாழ்ப்பாணத்துச் சனங்களின் உயிர்கள் காப்பாற்றப்பட்டதைப் பரமர் நினைத்துப் பார்க்கையில் இந்திய இராணுவம் படைகளை மெல்ல மெல்ல நகர்த்தி யாழ். காங்கேசன்துறை வீதியால் போய்க் கொண்டிருந்த காட்சிகள் நினைவுக்கு வருகின்றன.

யாழ். கோட்டையில் இருந்த இந்தியப் படை பேருந்து நிலையத்துக்கு நகர்த்தப்பட்டதும் திறந்த வெளியரங்கில் புலிகளின் எழுச்சிப் பாடல்கள், கவிதைகள் ஒலிக்கத் தொடங்கின.

யாழ். மனோகராச் சந்திக்குச் சென்றதும் திறந்த வெளி நடவடிக்கைகள் பேருந்து நிலையத்துக்குச் சென்றன. பன்றிக்கோட்டுப் பிள்ளையார் ஆலயத்தைத்தாண்டி யாழ். இந்துக் கல்லூரிக்குச் சென்றதும் இவர்கள் மனோகராச் சந்திக்கு...

இப்படியே தட்டாத்தெருச் சந்தி நாச்சிமார் கோயிலடி, பூநாறி மரத்தடி ... என நகர்த்தப்பட்டுக்கொண்டிருக்கையில், பூநாறி மரத்தடியில் வாழைக்குலை கட்டிக்கொண்டு போன அப்பாவி வியாபாரி ஒருவர் இவர்களுக்கு இடையில் ஏற்பட்ட முறுகல் நிலையில் துப்பாக்கிச் சூடு பட்டு இறந்த சம்பவம் ஒன்றும் நிகழ்ந்தது.

இவ்விதமாகக் குடாநாட்டைக் கையகப் படுத்திக்கொண்ட புலிகளின் கட்டுப்பாடு 1995 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 30 ஆம் திகதி இரவு பகலாக செம்மணி நாவற்குழிப் பாலங்கள் ஊடாக குடாநாட்டு மக்கள் மழையிலும், வெய்யிலிலும் நகர்ந்து சென்ற பாரிய இடம்பெயர்வு வரை நீடித்தது.

அதற்கிடைப்பட்ட ஐந்தாண்டுக் காலங்களில் எத்தனை எத்தனையோ புதுமைகள் நிகழந்துபோயின. அதுகளில் சிலவற்றைப் பரமரும் இரை மீட்டிப் பார்க்கலாமென்று நினைக்கின்றன்.

அதனில் ஏவ்வித வீக்க தாக்கமும் இல்லாமல் பார்வையைச் செலுத்துவதுதான் என்னுடைய பெரும் பணியாக இருக்கும் பாருங்கோ...

## முரசின் இன்றைய பலன்

(25.02.2012 –சனிக்கிழமை)

கர வருஷம் மாசி மாதம் 13 ஆம் திகதி. திருதியை காலை 7.58 வரை. நட்சத்திரம் ரேவதி முழுவதும் மரணயோகம். இராகுகாலம், 9.29 - 10.59 வரை. சுபநேரம் 3.29 - 4.59 வரை. எமகண்டம் 1.59 - 3.29 வரை. குளிகைகாலம் 6.29 - 7.59 வரை. சதுர்த்தி விரதம்.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | ஆதாயம், பணிமுன்னேற்றம், வாக்குவசீகரம், கடன் தொல்லை. |
| ரிஷபம் | பொறுமை, மனோதிடம், வெளியூர்வாய்ப்புகள், கடன் சுமை அகலும், |
| மிதுனம் | திடீர் நன்மை, நண்பர் உதவி, செலவு அதிகரிப்பு, புத்திரபாக்கியம். |
| கடகம் | நல்ல முயற்சி, வாக்குறுதி தவிர், அரச உதவிகள், நினைத்தது நிறைவேறும். |
| சிம்மம் | நன்மை, தீமை இல்லை. உறவினரால் செலவு, தொழில் மந்தம். |
| கன்னி | பொன்பொருள்சேரும், வெற்றி, புத்திரரால் சஞ்சலம், மருத்துவச் செலவு. |
| துலாம் | சுகவாழ்வு, எச்சரிக்கை, குடும்ப முரண்பாடு, பணவரவில் மந்தம். |
| விருச்சிகம் | குடும்பசுகம், கல்வியில் மந்தம், உறவினர் ஆதரவு, தொழில் போட்டி, |
| தனுசு | காரிய சித்தி, வீடு, மனைவாங்க யோகம், பணமாற்றத்தில் கவனம், சேமிப்பு உயரும். |
| மகரம் | காரியானுகூலம், எதிர்ப்புத்தணியும், வேலை வாய்ப்பு, நிம்மதிக்குறைவு. |
| கும்பம் | சுபநாள், இலட்சுமிகரம், அனாவசியச் செலவு, நிதானம் தேவை. |
| மீனம் | புகழ்கிடைக்கும் நிம்மதிக்குறைவு, உடல் உபாதை, பொருட் செலவு. |

# மீள்குடியேற்ற நிகழ்வில் கலந்து கொள்ள இரா.சம்பந்தனுக்கு நேரம் இல்லை!

உள்நாட்டில் இடம்பெயர்ந்து வவுனியா மெனிக்.ஃபாம் முகாமில் தங்க வைக்கப்பட்டிருந்த முல்லைத் தீவு முள்ளிவாய்க்கால் பிரதேச மக்களை, புதுக்குடியிருப்பு கோம்பா வில் பகுதியில் மீள் குடியேற்றும் நிகழ்வு பெப்ரவரி 07ஆம் திகதி நடைபெற்றது. இந்நிகழ்வில் மீள்குடியேற்ற அமைச்சர் குணரட்ன வீரக்கோன், பிரதி அமைச்சர் விநாயக மூர்த்தி முரளிதரன் மற்றும் அரச உயரதிகாரிகள் கலந்துகொண்டனர்.

இதில் கலந்துகொண்ட அமைச்சர் குணரட்ன பேசுகையில், இந்த நிகழ்வில் கலந்து கொள்ளும்படி தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக்குழுத் தலைவர் இரா.சம்பந்தன் அவர்களுக்கு தொலைபேசி மூலம் அழைப்பு விடுத்தும், அவர் அதில் கலந்து கொள்ளவில்லை என மிகவும் கவலையுடன் குறிப்பிட்டார்.

மேலும் அவர் அங்கு பேசுகையில், "இந்த மக்கள் முகாம்களில் தங்க வைக்கப்பட்டிருந்த காலப்பகுதியில் ஒரு தடவையேனும் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன், அவர்களைச் சென்று பார்வையிட வில்லை. அதுமட்டுமின்றி இந்த மக்களின் மருத்துவ தேவைகளுக்காக நாடாளுமன்ற உறுப்பினர் சம்பந்தன் ஒரு டிஸ்பிரின் மருந்து வில்லையைத் தன்னும் வழங்கவில்லை. அனைத்து உதவிகளையும் படையினரே இந்த மக்களுக்குச் செய்தனர்" எனக் குறிப்பிட்டார்.

கௌரவ அமைச்சர் குணரட்ன அவர்களே! யார் உங்களுக்குச் சொன்னது தமது மக்களுக்கு சேவை புரியத்தான் இந்த தமிழ் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களை மக்கள் தெரிவு செய்தார்கள் என்று? அவர்கள் அமெரிக்காவுக்கும் பிரித்தானியாவுக்கும் இந்தியாவுக்கும் அரசாங்கம் வழங்கியுள்ள அதி விசேட பிரமுகர்களுக்கான கடவுச் சீட்டில் சுற்றுலா சென்று, அங்கு இலங்கை அரசாங்கம் இடம் பெயர்ந்த தமிழ் மக்களை சொந்த இடங்களில் குடியமர்த்தாமல், முள்கம்பி முகாம்களுக்குள் தடுத்து வைத்து கொடுமைப்



படுத்துகிறது என்று பிரசாரம் செய்வதற்கல்லவா அவர்களைத் தமிழ் மக்கள் தமது பிரதிநிதிகளாகத் தெரிவு செய்துள்ளார்கள்! அப்பிடியிருக்க இந்த இடம்பெயர்ந்த 'பரதேசி சனங்களை' மீள் குடியேற்றும் நிகழ்வில் அவர்களுக்குக் கலந்து கொள்ள நேரமேது?

அவர்களது இந்த "மக்கள் சேவைகளை"த் தமிழ் மக்கள் எப்பொழுது புரிந்துகொண்டு, மந்த புத்தியிலிருந்து விடுபடப் போகிறார்கள் என்பதுதான் தெரியவில்லை.

**- வி.பாலசிங்கம்,**
**12ஆம் கட்டை, விசுவமடு.**

# சுரேஷுக்கு ஆதரவான இணையதளத்தில் தமிழரசுக் கட்சிக் கூட்டம் பற்றி கிண்டல்!

தேரதல் அண்மையில வருதோ, இல்லயோ, கட்சிகளுக்காக ஆக்களச் சேக்கிற எங்கட ஆக்கள்ட வேலையள் அமோகமா நடக்குது கண்டியளே?

தமிழரசுக்கட்சிக்கு ஆக்களத் திரட்டுறதுக்கான வேலையள் மறைமுகமா நடந்து கொண்டே இருக்குது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில எலெக்சன் கேட்டு வெண்ட பிரதேச சபை உறுப்பினர்கள் இருக்கினம் எல்லே? அவையளத் தனித்தனியா சந்திச்சு மண்டையக் கழுவிக் கழுவிக் கடைசில பாருங்கோ கிளிநொச்சியில ஒரு கருத்தரங்கையும் நடத்தினவையாம்!

அந்தக் கருத்தரங்கு, அரசியல் கருத்தரங்கில்ல பாருங்கோ, தமிழரசுக்கட்சிக்குப் பின்னால நிக்கக்கூடிய ஆக்கள ஒண்டு திரட்டி சந்திப்பு நடத்திறதுதான் நோக்கம். ஆனால் பாருங்கோ, சந்திப்பின்ர நோக்கம் எல்லாம் மாறி, கடைசியில அங்க வில்லங்கம் நடந்திருக்குது கண்டியளே?

அங்க போன யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் சட்டத்துறை விரிவுரையாளர் குருபரன் 13ஆவது திருத்தச் சட்டத்தில உள்ள ஓட்டையள சுட்டிக்காட்டி இந்தத் திருத்தச்சட்டத்த நாங்கள் ஏற்கக் கூடாது எண்டு சொல்லியிருக்கிறார். அப்ப, சுமந்திரன் ஐயா அதச் சரி எண்டும், நான் 20 வருசமா சட்டத்துறையில பெரிய..(!) ஆளா இருக்கிறன் எனக்கு இதுகளப் பற்றி விளங்காதோ? எண்டு கேட்டிருக்கிறார்?.

அதேநேரம் சம்பந்தன் ஐயா இறையாண்மை தொடர்பா சொன்ன கருத்துக்களில தவறிருந்ததா தங்களுக்குத் தெரிஞ்சுது எண்டு நிகழ்ச்சியில இருந்த ஒண்டு ரண்டு பேர் சொல்லிச்சினம். இவையள் ஒவ்வொருவரும் பிடுங்குப்பட நிகழ்ச்சிய ஒழுங்கு செய்த சிறீதரன் ஐயா வந்து சரியா திக்குமுக்காடிப் போனாராம்!

ஐயாக்களும் குழம்பி, நிகழ்ச்சிக்கு வந்தவையளும் குழம்பினால் அந்த மனிசன் என்னதான் செய்யிறது? எல்லாரும் குழம்பிப் போய் இருக்க, மாவை ஐயா தான் பாருங்கோ உணர்ச்சி வயமா பேசி... ஆக்களத் திருப்திப்படுத்தினவராம்!

நிகழ்ச்சி தொடங்கின நேரம் முதலே நிகழ்ச்சியில பங்கெடுக்கப் போன எங்கட சனம் வந்து சந்தேகங்கள சரமாரியா கேட்டிருக்கினம்? தொடர்ந்து கேள்விக்கு மேல கேள்வியள் போக, சுமந்திரன் ஐயா திண்டாடிக் கொண்டிருக்க தலைவர் ஐயா கடுப்பாகியிட்டாராம். எழும்பி நிண்டு கதைக்க ஏலாது எண்டு கதிரையில இருந்து கதைச்ச சம்பந்தன் ஐயா கடுப்பில எழும்பி மேசயில ரண்டு குத்துக் குத்தி பதில் சொன்னவராம்.

கனடாவிலயும், லண்டனிலயும் சுமந்திரன் ஐயாவின்ர உரைக்கு பரவலான வரவேற்பு எண்டு சொல்லக் கேள்வி கண்டியளே? ஆனால் பாருங்கோ கிளிநொச்சியில எங்கட சனம் நல்ல தெளிவா இருக்குது எண்டத இவையள் புரிஞ்சு கொண்டிருப்பினம் எண்டு நினைக்கலாம் போல கிடக்குது.


ஆங்கிலத்தில யோசிச்சு தமிழில கதைக்கிற அந்தப் பெரிய சட்டத்தரணிய சில பேருக்கு மதிக்கத் தெரியேல்ல எண்டு நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் புறுபுறுத்தவையாம் எண்டும் கேள்வி.

# யுத்தம் முடிந்து மூன்று வருடங்கள்!

யாழ்ப்பாணத்திலிருந்து 113 கிலோமீற்றர் தூரத்தில் திருகோணமலை உள்ளது, நாட்டிலுள்ள அழகான கடற்கரையில் திருமலைக் கடற்கரையும் ஒன்றாகும். கணிசமான அளவு எண்ணிக்கையான இந்தியர்கள் ஆலயங்களைத் தரிசிக்க இங்கு வருகின்றனர்.

திருமலையின் நீலக்கடல் முன்னால் சாய்வு நாற்காலியில் பிரகாசம் (90 வயது) அமர்ந்திருந்தார். தனது இரண்டு வயது பூட்டப் பிள்ளையான சிறுமி சைக்கிள் ஓடுவதைப் பார்த்துக்கொண்டிருந்தார். இலங்கை ரயில்வே துறையில்





சுத்திகரிப்பாளராக இருந்த பிரகாசம் இப்போது 'பிரெஞ் கார்டன்' என்று அழைக்கப்படும் கடற்கரை விடுதியின் உரிமையாளர். அதன் பெறுமதி சில இலட்சம் டொலர்களாகும். இந்த இடம் அவரின் மூதாதையரின் நிலமாகும்.

ஆனால், யுத்தம் ஆரம்பிக்கப்பட்ட போது அவர் அந்த இடத்தை விட்டு வெளியேற வேண்டியிருந்தது. அவருடைய நிலம் புலிகளினால் கடற்கரைப் பதுங்கு குழியாகப் பயன்படுத்தப்பட்டது. 80 களில் இந்திய அமைதிகாக்கும் படையினரும் அங்கு தங்கியிருந்துள்ளனர். யுத்தம் முடிவடைந்த பின்னர் பிரகாசம் இந்த இடத்திற்குத் திரும்பி வந்து விடுதியை அமைத்துள்ளார். புதிய வசதிகளைக் கண்டுள்ள போதிலும் 30 வருட கால யுத்தத்தை மறப்பது அவருக்கு கடினமாக உள்ளது.

வடக்கில் ஐந்து நட்சத்திரங்கள் ஹோட்டல்கள் பற்றிய கதை காணப்படுகிறது. உப்பாலை மற்றும் ஆலைத் தொழிற்சாலைகள் பற்றியும் பேசப்படுகிறது. மேற்குலகிற்குப் புலம்பெயர்ந்தவர்கள் அதிகளவில் திரும்பிவந்துள்ளனர். அங்கு அவர்கள் பொருளாதாரப் பின்னடைவு ஏற்பட்டு பெருமளவானோர் திரும்பி வந்துள்ளனர்.

இல்லாவிடில் புலம்பெயர்ந்தவர்களிடமிருந்து வரும் பெருந்தொகை பணம் தெற்குடன் ஒப்பிடும் போது வடக்கில் அதிகளவு இருக்குமென்று ஏற்றுமதியாளர் ஒருவர் கூறுகிறார். 2011 இல் வெளிநாடுகளில் பணிபுரியும் இலங்கைத் தொழிலாளர்கள் அனுப்பிய பணம் 5.2 பில்லியன் பணம் என்று கப்ரால் கூறுகிறார். 2012 இல் இத்தொகை 6.5 பில்லியனாக அதிகரிக்குமென அவர் கூறுகிறார்.

வடக்கை மீளக் கட்டியெழுப்ப 31 திட்டங்களில் பில்லியன் டொலர்களுக்கும் மேல் முதலீடு செய்ய அரசாங்கம் திட்டமிடுகிறது. வீதி நிர்மாணத் திட்டங்களில் சீனக் கம்பனிகளின் பிரசன்னம் காணப்படுகிறது. புதிதாக நிர்மாணிக்கப்படும் வீடுகள் பாடசாலைகள், மருத்துவ மனைகளில் இந்தியர்கள் சம்பந்தப்பட்டுள்ளனர். தற்போது 2005 குடும்பங்களைத் தவிர ஏனையவர்கள் இடம்பெயர்ந்தோர் தங்கியிருந்த நிலையங்களை விட்டு திரும்பிச் சென்றுள்ளதாகக் கூறப்படுகிறது.

இப்போது முன்னாள் போராளிகள் பலர் ஆட்டோ சாரதிகளாகவும் கனரக வாகனம் ஓட்டுபவர்களாகவும் வீதி ஒப்பந்தக்காரர்களாகவும் பணிபுரிகின்றனர். நகரங்கள் கிராமங்களில் புலிகளைப் பார்க்கக்கூடிய எந்தவொரு அறிகுறியும் காணப்படவில்லை. எந்தவொரு சுவரொட்டிகளும் இருக்கவில்லை. பொதுமக்களின் ஞாபகத்திலிருந்து புலிகள் அழிக்கப்பட்டுவிட்டதாகத் தோன்றுகிறது.

தமிழர்களுக்கு எதிரான சமூக, பொருளாதார பாரபட்ச விவகாரம் இப்போது பேசப்படுவதில்லை. ஆயுதம் தரித்த படையினரை சகல இடங்களிலும் பார்க்கக்கூடியதாக இருக்கிறது. மக்களின் வாழ்வாதாரத்தை மீள ஏற்படுத்திக் கொடுப்பது அரசாங்கம் எதிர்நோக்கும் பாரிய சவாலாக இருக்கிறது. 2009 மேயில் நிலத்திற்கான யுத்தம் முடிவடைந்திருக்கக் கூடும். ஆனால், மனதில் உள்ள யுத்தமானது இல்லாமல் செய்யப்படுவதற்கு அதிகளவு செய்யப்பட வேண்டிய தேவைகள் காணப்படுகின்றன.

**- ரி.ஈ.நரசிம்மன் (பிஸ்னஸ் ஸ்ராண்டர்ட்)**

# தெரிந்து கொள்வோம்!

- அகப்பொருள் பற்றிய தனி நூல் "நம்பியகப்பொருள்"
- தமிழ்ப் புலவருக்குக் கவரி வீசிய மன்னர் சேரமான் தகடூர் எறிந்த பெருஞ்சேரலாதன் இரும்பொறை.
- மனுநீதிச் சோழனின் மகன் பெயர் வீதிவிடங்கன்.
- மாணிக்கவாசகருக்குப் பாண்டிய மன்னன் சூட்டிய பட்டப்பெயர் "தென்னவன் பிரம்மராயன்"
- தமிழின் "கதி" எனப் போற்றப்பெற்றவர்கள் கம்பர், திருவள்ளுவர்.
- பன்மொழிப் புலவர்கள் எனப் பாராட்டப் பெற்ற அறிஞர்கள்- தெ.பொ.மீனாட்சிசுந்தரம், கா.அப்பாதுரையார்.
- தமிழ் வேதம், சைவ வேதம் ஆகிய இரு பெயர்களும் திருவாசகத்திற்கு உரியவை.
- களிற்றியானை நிரை, மணிமிடைப்பவளம், நித்திலக்கோவை ஆகியவை அகநானூற்றின் மூன்று பிரிவுகளாகும்.
- ஔவையார், பாரதியார், பாரதிதாசன் ஆகியோர் தமிழில் ஆத்திசூடி பாடியுள்ளார்கள்.
- தேவாரத்தில் உள்ள மூன்று தமிழ்- கொஞ்சு தமிழ், கெஞ்சு தமிழ், மிஞ்சு தமிழ்.
- "முதலாழ்வார் மூவர்" என்று அழைக்கப்பட்டவர்கள் பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார்.
- இராசராச சோழனுக்குரிய பாராட்டுப் பட்டங்கள்- "திருமறை கண்ட சோழன்", "மும்முடிச் சோழன்", "சிவபாத சோழன்".

# இலங்கையின் சுதந்திரமும் சுயாதீனமும் பாதுகாக்கப்பட வேண்டும்

இலங்கையின் தேசிய சுதந்திரமும், இறைமையும், பிரதேச ஒருமைப்பாடும், ஸ்திரத்தன்மையும் முன்னொருபோதும் இல்லாத அளவுக்கு பெரும் சவால்களை எதிர்நோக்கி நிற்கிறது.

முன்னொருபோதும் இல்லாத அளவுக்கு என்று வர்ணிப்பதற்கு பொருத்தமான காரணிகள் இருப்பதால், தற்பொழுது ஏற்பட்டுள்ள நிலைமை மிகப் பாரதூரமானது என்றே சொல்லலாம்.


இலங்கையின் 2500 வருட வரலாற்றில் முன்னரும் பல தேசிய அபாயங்களும் நெருக்கடிகளும் ஏற்பட்டு வந்ததும்,. அவை எல்லாம் இலங்கை மக்களால் வெற்றிகரமாக முறியடிக்கப்பட்டன என்பதும் உண்மை என்ற போதிலும், தற்போதைய நெருக்கடியையும் நாம் மெத்தனமாக எடுத்துவிட முடியாது.

குறிப்பாக தென்னிந்திய மன்னர்களின் படையெடுப்புகளாலும், அதன்பின்னர் ஒல்லாந்து, போர்த்துக்கீசியர், ஆங்கிலேயர் ஆகிய வெள்ளைக் காலனித்துவ ஆட்சியாளர்களின் ஆக்கிரமிப்புகளாலும் இலங்கை தனது சுதந்திரத்தை இழந்து காரிருளில் தவித்த வரலாறு உண்டு. இருப்பினும் தனது இடையறாத முயற்சிகளின் காரணமாக, இறுதியாக தனது சுதந்திர ஆவலை அது 1948ஆம் ஆண்டு பெப்ரவரி 4ஆம் திகதி பூர்த்தி செய்து கொண்டது.

இந்த ஆண்டு பெப்ரவரி 4ஆம் திகதி இலங்கை தனது 64ஆவது சுதந்திர தினத்தை மகிழ்ச்சியுடனும் பெருமையுடனும் கொண்டாடியது. ஆனால் இதில் கவலைக்குரிய விடயமென்னவென்றால், சுதந்திரம் கிடைத்த 64 ஆண்டுகளில் சுமார் அரைவாசிக் காலத்தை, அதாவது ஏறத்தாழ 30 ஆண்டுகளை அது உள்நாட்டு யுத்தத்தில் செலவழிக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலையில் இருந்ததுதான்.

இந்த உள்நாட்டு யுத்தம் சகோதர இனங்களுக்கிடையில் ஏற்பட்டது தான் இன்னும் வேதனையானது. இலங்கையை இறுதியாக 250 வருடங்கள் ஆட்சி புரிந்த பிரித்தானிய ஏகாதிபத்தியம் திட்டமிட்டு சிங்கள - தமிழ் மக்களிடையே ஏற்படுத்திச் சென்ற இன முரண்பாடு காரணமாக, கொடிய உள்நாட்டுப் போர் உருவாகி பல்லாயிரக்கணக்கான மனித உயிர்களும், பல கோடி ரூபா சொத்துக்களும் அழிவுக்குள்ளாகின.

ஏகாதிபத்தியம் திட்டமிட்டு இன முரண்பாட்டை உருவாக்கிவிட்டுப் போனதுடன் நின்றுவிடாது, தொடர்ந்தும் இலங்கையை நிம்மதியாக இருக்கவிடாது சதி சூழ்ச்சிகளில் ஈடுபட்டது. ஒருபக்கத்தில் சிங்களப் பேரினவாதிகளைத் தூண்டிவிட்டு சிறுபான்மைத் தேசிய இனத்தவரின் உரிமைகளைப் புறக்கணிக்க வைத்தது. மறுபக்கத்தில் தமிழ் இனவாதிகளைத் தூண்டிவிட்டு பிரிவினைவாதக் கோரிக்கையைக் கிளப்ப வைத்தது. அதாவது 'தொட்டிலையும் ஆட்டிப் பிள்ளையையும் கிள்ளி' விட்டது.



பிரித்தானியா காலத்து கொழும்பு புகையிரத நிலையம் (1860 - 1880)

இறுதியாக இந்த சின்னஞ்சிறு நாட்டின் இன முரண்பாட்டை உள்நாட்டு யுத்தமாக மாற்றுவதில் சர்வதேச பிற்போக்கு சக்திகள் வெற்றிபெற்றன. அரச படைகளையும் தமிழ்ப் புலிகளின் படைகளையும் யுத்த களத்தில் நீண்டகாலம் மோத வைத்து, அவை தமது அரசியல், பொருளாதார, இராணுவ மேலாதிக்கத்தை குறிப்பாக இலங்கை மீதும், பொதுவாகத் தென்னாசியப் பிராந்தியம் மீதும் நிலைநாட்ட முயன்று வந்துள்ளன.

இந்த பிற்போக்கு சக்திகள் பிரிவினைவாத புலிகள் இயக்கத்தை பல வழிகளிலும் போசித்து வளர்த்து, அதை இலங்கைக்கு எதிரான இயக்கமாக மட்டுமின்றி, உலகின் அதி பயங்கரமான இயக்கமாகவும் மாற்றிவிட்டன. அதன் காரணமாக, அது இலங்கையில் கட்டுக்கடங்காத பயங்கரவாத செயல்களில் ஈடுபட்டதுடன், போட்டி அரசாங்கம் ஒன்றை நடாத்தும் அளவுக்கும் சென்றது. இந்தப் போட்டி அரசாங்கத்தை, இலங்கையின் சட்டபூர்வமான அரசாங்கத்துக்கு சமதையாக நடாத்தும் நிலைக்கும் கூட சர்வதேச பிற்போக்கு சக்திகள் சென்றன.

ஆனால் இலங்கை மக்களின் ஆதரவுடனும், சர்வதேச நேச சக்திகளின் உதவியுடனும் புலிகள் இயக்கம் 2009 மே மாதம் இராணுவ ரீதியாகத் தோற்கடிக்கப்பட்டு, நாடு எதிர்நோக்கிய பாரிய அழிவு தவிர்க்கப்பட்டது. புலிகளைத் தோற்கடிக்கும் முகமாக நடைபெற்ற இறுதி யுத்தத்தின் போது பல மக்கள் உயிர்களை இழக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலையும் ஏற்பட்டது.

அதற்கான முக்கியமான காரணம், புலிகள் தாம் இறுதி அழிவை அடைந்துவிட்டோம் என்று அறிந்த பின்னரும்கூட, தமது பாதுகாப்புக்காக ஆயிரக்கணக்கான அப்பாவிப் பொதுமக்களைப் பலவந்தமாக தம்முடன் அழைத்துச் சென்று, தமக்கு மனித கேடயங்களாக வைத்திருந்தமையே ஆகும்.

எது எப்படியிருந்த போதிலும், 30 வருடப் போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டு, தொடர்ந்த மனித உயிரழிவுகள் நிறுத்தப்பட்டன. தற்பொழுது யுத்தமும் வெடிகுண்டுத் தாக்குதல்களும், அதன் காரணமாக மனித உயிர்கள் அழியும் நிலைமையும் இடப்பெயர்வுகளும் எமது நாட்டில் இல்லை. இந்த அமைதிச் சூழல் ஏற்படுத்தப்பட்டிருப்பதைக் கணக்கிலெடுக்க மறுக்கும் சர்வதேச சமூகம் எனப்படும் மேற்கத்தைய முன்னாள் காலனித்துவ சக்திகள், இலங்கை மீது குற்றச்சாட்டுகளை அள்ளி வீசுகிறார்கள்.

இலங்கையில் இன முரண்பாட்டை உருவாக்கிய அவர்கள், அந்த இன முரண்பாட்டை உள்நாட்டுப் போராக மாற்றிய அவர்கள், இறுதி யுத்த நேரத்தில் புலிகள் தமது பாதுகாப்புக் கேடயமாகப் பலவந்தமாகப் பிடித்து வைத்திருந்த பொதுமக்களை விடுவிப்பதற்கு எவ்விதமான நடவடிக்கைகளையும் எடுக்காத அவர்கள், இப்பொழுது போர்க்குற்றச்சாட்டுகளையும், மனித உரிமை மீறல்களையும் சுமத்தி, இலங்கையின் சட்டபூர்வ, மக்கள் ஆதரவு பெற்ற அரசாங்கத்தை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் நிறுத்த முயல்கின்றன.

கொடிய உள்நாட்டுப் போரை முடிவுக்குக் கொண்டு வந்து, நாட்டை ஒருமைப்படுத்தி, நாட்டைப் பொருளாதார ரீதியில் சுபீட்சப் பாதையில் கொண்டு செல்வதற்கு முயன்று வரும் இன்றைய சூழலில், இந்த தேச விரோத சக்திகள் இலங்கையில் மீண்டும் பிரிவினைவாதத்தைத் தூண்டவும், குழப்பங்களை உருவாக்கவும் பல்வேறு சுலோகங்களின் கீழ் பிரயத்தனப்பட்டு வருகின்றன.

எனவே இந்த நெருக்கடியான நேரத்தில், இலங்கையை நிலைகுலைய வைப்பதற்கு அந்நிய சக்திகள் எடுத்து வரும் சகலவிதமான சதி சூழ்ச்சிகளையும், அதற்கு உதவிவரும் உள்நாட்டுத் துரோக சக்திகளின் நடவடிக்கைகளையும் முறியடிப்பதற்கு, தேசபக்தியும் ஜனநாயக நேசிப்பும் கொண்ட அனைத்து இலங்கையர்களும் இன, மொழி, மத பேதமின்றி அணிதிரள வேண்டும் என அறைகூவி அழைக்கின்றோம்.

**- நன்றி: வானவில் 14-02-2012**

# கனடிய தமிழ்க் குழந்தை கடற்கரையில் விளையாடுகிறது!

# வன்னிக் குழந்தை அனாதை இல்லத்தில் வாடுகிறது!!

# வாரம் ஒரு டொலரை இந்தக் குழந்தைக்குக் கொடுங்கள்!!!

'மஹாதேவா ஆச்சிரமம் - குழந்தைகள் இல்லம்' என்பது அதன் பெயர். அங்கு 296 குழந்தைகள் இருக்கிறார்கள். அவர்களில் 160 பேர் பெண் குழந்தைகள். ஆச்சிரமத்தில் தங்கியிருக்கும் குழந்தைகளில் சிலர் அனாதைகள் அல்ல. அவர்களுக்குப் பெற்றோர்கள் இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் எல்.ரி.ரி.ஈயில் இருந்தவர்கள் என்பதால், கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டிருக்கிறார்கள்.

"ஆச்சிரமத்தில் உள்ள குழந்தைகளுக்கு நாள் ஒன்றுக்கு தலா 16 ரூபா 66 சதங்களைத்தான் அரசாங்கம் ஒதுக்கி இருக்கிறது. (16 ரூபா 66 சதத்திற்கு கொழும்பு நகரில் ஒரு கோப்பைத் தேநீர் கூட வாங்க முடியாது). அரசு ஒதுக்கீடு செய்திருக்கிற இத்தொகையும் மிக மெதுவாகத்தான் வருகிறது. கருணை உள்ளம் கொண்ட வெளிநாடு வாழ் தமிழர் கள் சிலரிடம் இருந்து கொஞ்சம் நன்கொடைகள் கிடைக் கின்றன. ஆனால், அதுவும் கூட கடந்த மூன்று மாதங் களாக வற்றிப் போய்விட்டன" என்று ராஜநாயகம் குறிப்பிட்டார்.

ராஜநாயகம் கிளிநொச்சியின் அரசாங்க அதிகாரி யாக 16 வருடங்கள் பணியாற்றியவர்... இப்போது மஹாதேவ ஆச்சிரம குழந்தைகள் இல்லத்தின் மேலாளராக இருக்கிறார். மிகச் சிறிய் அளவிலான உதவிகள் கூட



ஆச்சிரமத்தில் தங்கியிருக்கும் குழந்தைகளுக்கு நன்மை பயக்கும் என்பது யதார்த்த நிலையாக இருக்கிறது. அப்படி நன்கொடை அளிக்க விரும்புவர்கள் மிகவும் நேர்மையான, குழந்தைகள் இல்லச் சேவையில் தன்னை முழுமையான அக்கறையுடன் ஈடுபடுத்திக் கொண்டிருக்கும் இந்த ஆச்சிரம நிர்வாகியைத் தொடர்பு கொள்ளலாம். அவரது தொலைபேசி எண்: 94770604950.

கனடா நாட்டில் இருந்து ஏராளமான குடும்பங்கள் சுற்றுலாப் பயணிகளாக மட்டக்களப்பு கடற்கரையில் வந்து குவிகிறார்கள். அந்தக் குடும்பங்களைச் சார்ந்த கடற்கரையில் விளையாடிக் கொண்டு இருக்கும் ஒரு குழந்தை, யாழ்ப்பாணத்தில் உள்ள தனது மூதாதையர் வீட்டிற்கு வந்திருக்கிறது.

அந்தக் குழந்தையின் தந்தை, 'பாதுகாக்கப்பட்ட பகுதி' என்ற பெயரால் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் வைக்கப்பட்டிருக்கும், தனது குடும்பத்தின் விளைநிலத்தை மீட்கும் ஏற்பாடுகளைச் செய்வதற்காக வந்திருக்கிறார். கனடாவிலிருந்து வந்த குழந்தை கவலையற்று விளையாடிக் கொண்டிருக் கிறது. அனாதையாக ஆச்சிரமத்தில் தங்கி இருக்கும் குழந்தைகள் அரசாங்க மான்யத்தையும், வெளி நாடுகளில் வாழும் தமிழர்களின் நன்கொடையையுமே சார்ந்து இருக்கின்றன....

- இந்தியப் பத்திரிகையாளர் பகவான் சிங் சமீபத்தில் இலங்கை சென்று வந்த பின்னர் (தமிழர்களுக்கு எதிரானது என தமிழ் தேசிய தீவிரவாதிகளால் வர்ணிக்கப்படும்) 'துக்ளக்' இதழில் தொடராக எழுதிவரும் கட்டுரையின் ஒரு பகுதியே மேலே பிரசுரிக்கப்பட்டுள்ளது.

அகிம்சை பேசும் தமிழ் இனவாத சக்திகளால் ஆரம்பிக்கப்பட்டு, புலிகளால் முன்னெடுத்துச் செல்லப்பட்ட 'தமிழீழ' தனிநாட்டுப் போராட்டம் எத்தகைய கொடூரங்களை ஈழத்து மண்ணில் உருவாக்கியிருக்கிறது என்பதின் ஒரு சிறு அடையாளமே மகாதேவ ஆச்சிரம குழந்தைகள்.

தமிழ் மக்களை இந்நிலைக்கு ஆளாக்கிய புலிகள் இப்பொழுது இல்லையெனினும், அவர்களது பெயரால வயிறு வளர்க்கும், டசின் கணக்கான அமைப்புகள் புலம்பெயர் தமிழர் சமூகத்தில் இயங்கி வருகின்றன. அதில் ஒன்று 'நாடு கடந்த தமிழீழ அரசாங்கம்'. அது இப்பொழுது வாரம் ஒரு டொலர் கேட்டு புலம்பெயர் தமிழர்களிடத்தில் உண்டியல் குலுக்க ஆரம்பித்திருக்கிறது.


உண்மையில் புலம்பெயர் தமிழர்கள் தாயகத் தமிழர்களுக்கு ஏதாவது நன்மைகள் செய்ய விரும்பினால், அந்த வாரம் ஒரு டொலரை இந்த மகாதேவா ஆச்சிரமம் போன்ற இடங்களில் பரிதவிக்கும் அனாதைக குழந்தைகளுக்கு வழங்குவதே சரியாகவும் புண்ணியமாவும் இருக்கும்.

புலம் பெயர் தமிழர்களே இதுபற்றி சற்று மனம் விட்டுச் சிந்தியுங்கள்.

**- வானவில் மாசி இதழ்**

# இலங்கை மனித உரிமை விவகாரங்களில் வெளிச்சக்திகளின் தலையீடு தேவையற்றது

## ரஷ்யா அறிவிப்பு



(கொழும்பு)


இலங்கை மனித உரிமை விவகாரங்களில் வெளிச்சக்திகள் தலையீடு செய்ய வேண்டியதில்லை என ரஷ்யா அறிவித்துள்ளது.

இறையாண்மையுடைய நாடொன்றின் உள்விவகாரங்களில் எவரும் தலையீடு செய்ய வேண்டியதில்லை என இலங்கைக்கான ரஷ்யத் தூதுவர் விளாடிமீர் பீ மிகொய்லா தெரிவித்துள்ளார்.

ஒரு நாட்டில் ஆட்சி செய்யும் அரசாங்கத்தை தீர்மானிக்கும் பொறுப்பு பலம்பொருந்திய நாடுகளுக்குக் கிடையாது. நாட்டு மக்களே இவ்வாறான தீர்மானங்களை எடுக்க வேண்டும்.

ஜனநாயக ரீதியாக நியமிக்கப்பட்ட அரசாங்கமொன்றின் நடவடிக்கைகளை எவரும் விமர்சனம் செய்யக் கூடாது. இலங்கையில் பாரியளவில் மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றிருக்கும் என நம்பவில்லை. இலங்கை அரசாங்கத்தின் கொள்கைகளுக்கு ரஷ்யா தொடர்ச்சியாக ஆதரவளிக்கும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.


## அநீதிக்கு எதிராக இணையத்தளம் உருவாக்கம்



(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் அநீதிக்கு எதிரான தேசிய இயக்கத்தினால் நேற்றுமுன்தினம் இணையத்தளமொன்று ஆரம்பித்து வைக்கப்பட்டது. கட்சியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க இந்த இணையத்தளத்தை ஆரம்பித்து வைத்தார். இந்நிகழ்வில் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியல்ல ஆகியோரும் கலந்துகொண்டனர்.

## தங்கக் கட்டிகளை கடத்திய தம்பதியினர் கைது



(கொழும்பு)

சட்டவிரோதமான முறையில் இந்தியாவிலிருந்து தங்கக் கட்டிகளைக் கொண்டு வந்த தம்பதயினரைக் கட்டுநாயக்க விமான நிலைய சுங்க அதிகாரிகள் கைது செய்துள்ளதாக சுங்கப் பிரதிப் பணிப்பாளர் சட்டத்தரணி ராஜ் மோகன் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்ட குறித்த தம்பதியினரிடம் 11 இலட்சத்து 41 ஆயிரம் ரூபா பெறுமதியான மூன்று தங்கக் கட்டிகள் இருந்ததாகவும் அவர் கூறினார்.

சென்னையிலிருந்து நேற்று முன்தினம் காலை 9.35 மணியளவில் இலங்கை வந்த ஐ.எக்ஸ் 672 எயார் இந்தியா விமானத்திலேயே குறித்த தம்பதியினர் வந்துள்ளனர்.

கணவன், மனைவியரின் குறித்த பயணப் பொதிகளை சோதனையிட்ட சுங்க அதிகாரிகள் பெண்ணின் உள்ளங்கையில் ஏதோவொன்றை மறைத்து வைத்திருப்பதை அவதானித்துள்ளனர்.

அதன் பின்னர் அப்பெண்ணின கையிலிருந்த பொதிகளைச் சோதனையிட்ட போது காபன் கடதாசியில் சுற்றிய நிலையில் மூன்று தங்கக் கட்டிகள் இருந்துள்ளன.

சுங்க அதிகாரிகளின் பிடியில் சிக்கிய அத்தம்பதியினர் கண்டிப் பகுதியைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்படுவதுடன் மேலதிக விசாரணையை பிரதிப் பணிப்பாளர் தலைமையிலான குழுவினர் மேற்கொண்டு வருகின்றனர்.

## பொன்சேகா மீதான சட்ட நடவடிக்கை; தொடர்ந்தும் அவதானிக்கிறது அமெரிக்கா



(கொழும்பு)

ஜனநாயக தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சரத் பொன்சேகா தொடர்பில் முன்னெடுக்கப்படும் சட்ட நடவடிக்கைகளை அமெரிக்கா தொடர்ந்து அவதானித்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் ஜனநாயகச் செயற்பாடுகள் திணைக்களத்தின் மேலதிக செயலாளர் மைக்கல் எச்.பொஸ்னர் இதனைத் தெரிவித்துள்ளார்.

சரத் பொன்சேகாவை விடுதலை செய்ய வேண்டும் என அமெரிக்க வெள்ளை மாளிகையின் இணையத்தளத்தில் வெளியான அறிக்கை ஒன்று தொடர்பில் கருத்து வெளியிடும் போதே இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

சரத் பொன்சேகா கைது செய்யப்பட்டமை மற்றும் அவருக்கு எதிரான சட்ட நடவடிக்கைகள் என்பன, இலங்கையின் கருத்துச் சுதந்திரம் மற்றும் நீதிக் கட்டமைப்பை சவாலுக்கு உட்படுத்தி இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## மூன்று அரபு இளைஞர்கள் கைது

(கொழும்பு)

ஐக்கிய அரபு இராஜ்ஜியத்தில் சேவையாற்றிய இலங்கையைச் சேர்ந்த பெண் ஒருவரை பாலியல் வன்முறைக்கு உட்படுத்த முயற்சி செய்த சம்பவத்துடன் தொடர்புடைய அந்நாட்டைச் சேர்ந்த மூன்று இளைஞர்கள் சாஜா பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதாக தூதுவராலய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

குறிப்பிட்ட பெண் பணிபுரிந்த வீட்டில் பொருட்களைத் திருடிச் செல்வதற்காக வருகை தந்த இநத இளைஞர்கள் அப்பெண்ணை பாலியல் வன்முறைக்கு உட்படுத்த முயற்சி செய்தது தொடர்பாகக் கிடைத்த முறைப்பாட்டைக் கொண்டு அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அப்பெண் பணிபுரிந்த வீட்டில் யாருமில்லை என அறிந்து கொணடு அந்த மூன்று இளைஞர்கள் புகுந்து பலாத்காரம் புரிந்துள்ளதாக வீட்டு உரிமையாளர் விளக்கமளித்துள்ளதுடன் அவர் அது பற்றி பொலிஸில் முறைப்பாடு தெரிவித்துள்ளார்.

தம் வீட்டுக்கு வருகை தந்த போது பணிப்பெண் கதிகலங்கி நின்றதாகவும் அது குறித்து விசாரணை செய்த போது அறிமுகமற்ற மூன்று நபர்கள் வருகை தந்து தன்னை பலாத்காரம் செய்ய முயற்சி செய்துள்ளதாக வீட்டு உரிமையாளர் சாஜா பொலிஸில் முறைபாடு தெரிவித்துள்ளாதாக மேலும் தெரிவிக்கப்படுகிறது.

## இலங்கை வரும் ஹொலிவூட் நடிகர்



(கொழும்பு)

இந்திய ஹொலிவூட் நடிகர் ஜோன் ஆபிரஹாம், நாட்டின் அரசியல் நிலைமைகள் குறித்து ஆராயும் முகமாக இலங்கை வரவுள்ளார்.

ஜோன் ஆபிரஹாமினால் தயாரிக்கப்படும் 'யாழ்ப்பாணம்' என்ற திரைப்படத்திற்காகவே ஜோன் ஆபிரஹாம் இலங்கை வருவதாக இந்தியச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இலங்கை வரும் அவர், குறிப்பாக யுத்தம் இடம்பெற்ற காலப் பகுதியில் புலிகள் மேற்கொண்ட நடவடிக்கைகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்துவார் என்று தெரிவிக்கப்படுகிறது.

## உலகின் நம்பிக்கையைப் பெற அரசாங்கம் தவறிவிட்டது



(கொழும்பு)

ஜெனீவா மனித உரிமைகள் ஆணைக்குழுவில் ஏற்பட்டுள்ள சவால்கள் தொடர்பில் அரசாங்கம் எதிர்க்கட்சிகளின் நம்பிக்கையைப் பெறத் தவறிவிட்டது. மறுபக்கத்தில் அரசாங்கத்தின் சில பங்காளிக் கட்சிகள் மனித உரிமை விவகாரம் முழுவதையும், மேற்கத்தைய நாடுகளின் சதி என்று குரல் எழுப்பத் தொடங்கிவிட்டன. அரசாங்கத்திற்கு இருக்கும் கடைசி ஆயுதம், கற்றுக்கொண்ட பாடங்கள் ஆணைக்குழுவின் அறிக்கைதான் என ஜனநாயக மக்கள் முன்னணித் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஐ.நா.செயலாளரின் அறிக்கைக்குப் பதிலடியாகக் கற்றுக்கொண்ட பாடங்கள் ஆணைக்குழுவை இந்த அரசாங்கம்தான் நியமித்தது. இன்று அரசாங்கத்தில் இருக்கும் சில தீவிரவாதிகளுக்கு இந்த உண்மை மறந்துவிட்டது. இந்த ஆணைக் குழுவையும், அதன் அறிக்கையையும் எதிர்க்கட்சிகள் நியமித்து தயாரித்ததைபோல் இவர்கள் இன்று கூப்பாடு போடுகிறார்கள் அதேபோல ஐ.நா. மனித உரிமை ஆணைக் குழுவை புலம்பெயர்ந்த தமிழர்கள் நடத்தி வருவதைப் போல் சிங்கள மக்களுக்குக் காட்டுவதற்கும் இவர்கள் முயல்கிறார்கள்.

கற்றுக்கொண்ட பாடங்கள் ஆணைக்குழு அறிக்கையில் நாம் எதிர்பார்க்கும் மனித உரிமைகள் தொடர்பிலான அனைத்துக் கேள்விகளுக்கும் பதில் கிடையாது. சுதந்திரக் காவலன் என்ற மனித உரிமை விருதைப் பெற்றவன் என்ற முறையில் நான் இதை மிகவும் பொறுப்புடன் கூறுகிறேன். ஆனால் உத்தரவாதம் அளிப்பதற்கு முடியாமல் அரசாங்கத்தை தர்மசங்கடத்திற்குள் தள்ளியுள்ள சில விடயங்கள் தொடரபில் அந்த அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கின்றது.

பொதுமக்களுக்கு மரணம், காயம் ஏற்படுத்தப்பட்டமை, சரண் அடைந்ததன் பின்னர் காணாமற் போனமை தொடர்பில் இராணுவத்தின் மீது சாட்டப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள், சனல் நான்கு தொலைக் காட்சித் தொடர், நாடு முழுக்க காணாமல் போனோர் விவகாரம் ஆகியவை தொடர்பில் விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது.

தடுத்து வைக்கப்பட்டோர் பற்றிய விபரங்கள் குடும்ப அங்கத்தவர்களுக்கு வழங்கப்பட வேண்டும் எனவும், அரசு ஆதரவு ஆயுதக்குழுக்கள் கலைக்கப்பட்டு விசாரணை செய்யப்பட வேண்டும் எனவும் கூறப்பட்டுள்ளது. காணி பற்றிய கொள்கைமூலம் மாகாணங்களின் குடிப்பரம்பல் மாற்றி அமைக்கப்படக் கூடாது எனவும், அனைத்து அரசியல் கட்சிகளும், அதிகாரப்பரவலாக்கல் மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டும் எனவும், வட-கிழக்கில் சிவில் நடவடிக்கைகளில் இராணுவத் தலையீடு குறைக்கப்பட வேண்டும் எனவும் கூறப்பட்டுள்ளது என்றார்.

## மதன மோதகத்துடன் இரு இளைஞர்கள் கைது

(கொழும்பு)

கஞ்சா போதைப் பொருள் கலக்கப்பட்ட மதனமோதகத்துடன் சிவனொளிபாத மலைக்குச் செல்வதற்கு எத்தனித்த இரண்டு இளைஞர்களை ஹட்டன் பொலிஸார், ஹட்டன் ரயில் நிலையத்துக்கு அருகில் வைத்து சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ளனர்.

ஹட்டன் நகரூடாக சிவனொளி பாத மலைக்குச் செல்கின்ற யாத்திரிகர்களிடத்தில் பொலிஸார் தீவிர பரிசோதனைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதன் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனை ஒன்றின் போதே கொழும்பு தெமட்டகொடைப் பகுதியிலிருந்து சிவனொளிபாத மலைக்குச் செல்ல வந்த இரண்டு இளைஞர்களிடமிருந்து கஞ்சா போதைப் பொருள கலந்து மதனமோதகத்தினைக் கைப்பற்றினர். இளைஞர்களை பொலிஸார் கைது செய்துள்ளனர். இவர்களை நீதிமன்றில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கைகளில் ஹட்டன் பொலிஸார் ஈடுபட்டனர்.

## இலங்கைக்கு எதிரான சக்திகளை எதிர்கொள்ள மக்கள் ஒத்துழைப்பு இயக்கம் உருவாக்கம்

### லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன



(கொழும்பு)


இலங்கைக்கு எதிரான சக்திகளை தேசிய ரீதியில் எதிர்கொள்வதற்காக பொது மக்கள் ஒத்துழைப்பு இயக்கம் ஒன்றை ஆரம்பிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து வெளியிட்ட அமைச்சரவை பதில் பேச்சாளரும் அமைச்சருமான லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார்.

ஜெனீவாவில் நடைபெறும் ஐ.நா.வின் மனித உரிமை மீறல்கள் தொடர்பான மாநாட்டில் இலங்கைக்கு எதிரான நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் நோக்கில் இந்த மக்கள் இயக்கம் எதிர்வரும் 27ஆம் திகதி ஆரம்பிக்கப்படும் என அமைச்சர் கூறியுள்ளார்.

அரசுக்கு ஆதரவான சகல அரசியல் கட்சிகளும் தனியார் அமைப்புக்களும் பொது மக்களும் அரசாங்கத்தின் இந்த நடவடிக்கைக்கு ஆதரவு வழங்கவுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

# நாட்டின் பாரிய அபிவிருத்திகளுக்கு சர்வதேச நிதிக் கூட்டுத்தாபனம் உதவும்

## ஜனாதிபதியிடம் உறுதியளிப்பு



(கொழும்பு)

நாட்டில் பாரிய அபிவிருத்திகளை மேற்கொள்வதற்கு தாம் எப்போதும் ஒத்துழைப்பு வழங்குவதாக சர்வதேச நிதிக் கூட்டுத்தாபனத்தின் உப தலைவர் லாஸ் ஹென்ரிக் துனெல் குறிப்பிட்டுள்ளார்.

அலரிமாளிகையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை நேற்று முன்தினம் முற்பகல் சந்தித்தபோதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

சர்வதேச நிதிக்கூட்டுத்தாபனத்தின் உப தலைவர் லாஸ் ஹென்ரிக் துனெல் குறுகியகால விஜயமொன்றை மேற்கொண்டு இலங்கைக்கு வருகை தந்திருந்தார்.

இதன்போது அவர் நாட்டின் பல பகுதிகளையும் சென்று பார்வையிட்டதோடு இலங்கையில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி நடவடிக்கைகள் குறித்து தெளிவான விளக்கத்தைப் பெற்றுகொண்டதாக அவர் ஜனாதிபதியிடம் குறிப்பிட்டுள்ளார்.

மகிந்த சிந்தனை ரன்தொர செயற்திட்டத்தின் கீழ் முன்னெடுக்கப்படும் பாரிய அபிவிருத்தி நடவடிக்கைகள் குறித்து ஜனாதிபதி இதன்போது லாஸ் ஹென்ரிக் துனெலுக்கு எடுத்துக் கூறியதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# கணவனை இழந்த பெண்களுக்கு மன்னாரில் சத்துணவுப் பொதிகள்



(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் கணவனை இழந்த குடும்பப் பெண்களுக்கு தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தினால் நேற்று முன்தினம் காலை சத்துணவுப் பொருட்கள் அடங்கிய பொதிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

மன்னார் மாவட்டத்தில் இருந்து தெரிவு செய்யப்பட்ட கணவனை இழந்து, குடும்பத்தைப் பராமரித்து வரும் 40 பெண்களுக்கே மேற்படி பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன. நேற்றுமுன்தினம் காலை 9 மணியளவில் மன்னார் திருமறைக்காலாமன்றத்தில் குறித்த நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது தேசிய மீனவர் ஒத்துழைப்பு பேரவையின் வட-கிழக்கு மாவட்டங்களுக்கான இணைப்பாளர் ஏ.ஜேசுதாசன், தேசிய மீனவர் ஒத்துழைப்பு பேரவையின் பெண்கள் திட்ட இணைப்பாளர் லவன்யா, தேசிய மீனவர் ஒத்துழைப்பு பேரவையின் மன்னார் மாவட்ட ஆலோசகர் ஏ.டியூக், தேசிய மீனவ ஒத்துழைப்பு பேரவையின் மன்னார் மாவட்ட பிரதிநிதி அ.சுனேஸ் சோசை ஆகியோர் கலந்து கொண்டனர்.

## ஒன்றுகூடல் நிகழ்வு

(பருத்தித்துறை)

கல்வி அமைச்சின் ஆதரவுடன் ஆறுதல் நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் வடமராட்சிப் பகுதியிலுள்ள முன்பள்ளி ஆசிரியர்களுக்குப் பயிற்சி வகுப்புக்கள் யாழ். வேலாயுதம் மகா வித்தியாலயத்தில் ஒரு வருட காலமாக நடத்தப்பட்டு வருகின்றது.

இப்பயிற்சி வகுப்பில் பங்குபற்றி பயிற்சி பெற்று வரும் ஆசிரியர்கள் ஒன்றிணைந்து கலை மற்றும் ஒன்றுகூடல் நிகழ்வொன்றை நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணியளவில் நடத்தவுள்ளனர்.

இந்நிகழ்வில் வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர், முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் ஆகியோரைக் கலந்துகொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அழைப்பு விடுத்துள்ளனர். (109)

# மனித உரிமை அமுல்படுத்தலுக்கு அரசியலமைப்பைத் திருத்தத் தயார்

(கொழும்பு)



அரசாங்கம் தயாரித்துள்ள மனித உரிமை தொடர்பான செயற்பாட்டுத் திட்டத்தை முழுமையாக அமுல்படுத்துவதற்காக தேவைப்பட்டால் அரசியலமைப்பு ரீதியான திருத்தம் மேற்கொள்ள அரசாங்கம் தயாராக இருப்பதாக ஆளும் தரப்பு பிரதம கொரடா அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

இது குறித்து, அமைச்சர் மேலும் தெரிவிக்கையில், மக்களின் மனித உரிமைகளைப் பாதுகாக்கவும் மேம்படுத்தவுமென தேசிய செயற்பாட்டுத் திட்டமொன்றைத் தயாரிக்க நடவடிக்கை எடுத்தது. மனித உரிமை தொடர்பான பிரகடனத்தில் கைச்சாத்திட்டுள்ள நாடுகள் தேசிய திட்டமொன்றைத் தயாரிக்க இணங்கியுள்ளன.

இதன்படி சகல விடயங்களும், பகுதிகளும் உள்ளடங்கும் வகையில் மனித உரிமை தொடர்பான தேசியத் திட்டம் தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. இந்தத் தேசிய செயற்திட்டத்தை முன்னெடுக்க அமைச்சரவை உபகுழுவொன்றும் நியமிக்கப்பட்டது. பேச்சுக்கள், விவாதிப்பு, கலந்துரையாடல் என்பவற்றின் பின் இந்தத் திட்டம் 2011 செப்டம்பர் மாதம் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டு அனுமதி பெறப்பட்டது. இந்தத் திட்டத்தை விமர்சிக்காது எதிர்க்கட்சித் தலைவர் இதனைப் பாராட்டியிருக்க வேண்டும். இலங்கைக்கு சர்வதேச மட்டத்தில் பாதிப்பு ஏற்படுத்தாது அண்டை நாட்டு எதிர்க்கட்சித் தலைவர்களைப் போன்று நம்நாட்டு எதிர்க்கட்சித் தலைவர் முன்மாதிரியாக நடக்க வேண்டும். அரசாங்கத்துடன் இணைந்து செயற்பட்டு நாட்டின் ஆட்புல ஒருமைப்பாட்டைப் பாதுகாக்க முன்வர வேண்டும்.

ஜெனீவாவில் நாம் வாக்குறுதியளித்தவற்றை மீள ஜெனீவாவுக்குக் கொண்டு செல்ல வேண்டும். நாட்டு மக்களுக்காகவே இந்த வாக்குறுதி அளிக்கப்பட்டது. அதன் பிரதிபலன்களும் மக்களையே சென்றடைய வேண்டும். மனித உரிமை தொடர்பான செயற்பாட்டுத் திட்டம் குறித்து சபையில் பல தடவை பேசப்பட்டது. சர்வதேச உடன்பாடுகளின் அடிப்படையிலே இது தயாரிக்கப்பட்டுள்ளது என்றார். எதிர்க்கட்சித் தலைவர் வெளிநாடுகளின் பிரதிநிதி போன்று செயற்படுகிறார். சர்வதேச விவகாரங்களின்போது அரசாங்கத்துடன் இணைந்து நாட்டின் இறைமையை பாதுகாக்கும் வகையில் செயற்படுகின்றனர் என்றார்.

## மனைவியை கொன்றவர் கைது

(கொழும்பு)

அவுஸ்ரேலியாவின் பேர்த் நகரில் தமது மனைவியைக் கொலை செய்ததாகக் கூறப்பட்டு இலங்கையர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொலை செய்யப்பட்டவரின் சடலம் நேற்றுமுன்தினம் மீட்கப்பட்டுள்ளது. பேர்த் நீதவான் நீதிமன்றத்தில் அவர் முன்னிலைப்படுத்தப்பட்டார். நான்கு வருடங்களுக்கு முன்னர் அவர்கள் அவுஸ்ரேலியாவுக்குக் குடிபெயர்ந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

## பாணின் விலை ஐந்து ரூபாவினால் அதிகரிப்பு

(கொழும்பு)

பாணின் விலை நேற்று நள்ளிரவு முதல் ஐந்து ரூபாவினால் அதிகரிக்கப்பட்டுள்ளதாக பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. எரிபொருள் விலை ஏற்றத்தைத் தொடர்ந்து பாணின் விலையை அதிகரிப்பது குறித்து இறுதி முடிவு எடுக்கப்படும் என ஏற்கனவே அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்திருந்தது.

எரிபொருள் விலையேற்றத்தைத் தொடர்ந்து, அத்தியாவசியப் பொருட்கள் மற்றும் போக்குவரத்துக் கட்டணங்கள் படிப்படியாக உயர்ந்து செல்வதால் பாரிய நெருக்கடிகளைச் சந்தித்து வருவதாக மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

# அதிபரின் இடமாற்றத்தைக் கண்டித்து மாணவர்கள் ஆர்ப்பாட்டம்

(மட்டக்களப்பு)

அக்கரைப்பற்று தொழில்நுட்பக் கல்லூரி அதிபரின் இடமாற்றத்தைக கண்டித்து நேற்று வெள்ளிக்கிழமை காலை 9 மணியளவில் தொழில்நுட்பக் கல்லூரியின் முன்னால் இரண்டாவது நாளாகவும் கல்லூரி மாணவர்கள் வீதியில் இறங்கி ரயர்கள் எரித்து, சுலோகங்கள் ஏந்தியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுவருகின்றனர்.

அக்கரைப்பற்று தொழில்நுட்பக் கல்லூரியின் அதிபராக இருந்த ஏ.ஜி.எம். தவூத் என்பவர் இடமாற்றம் செய்யப்பட்டு அவ்விடத்திற்கு எம்.எம்.ஹசன் என்பவரை அதிபராக நியமனம் செய்யப்பட்டு உடன் கடமைப் பொறுப்பை ஏற்குமாறு வாழ்க்கைத்திறன் தொழிற்பயிற்சி அமைச்சினால் நியமனம் வழங்கப்பட்டதையடுத்து இதற்கு எதிர்ப்புத் தெரிவித்த கல்லூரி மாணவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த இடமாற்றத்தைக் கண்டித்து நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை காலை முதல் கல்லூரி மாணவர்களால் ஆரம்பிக்கப்பட்ட இந்த ஆர்ப்பாட்டம் நேற்று வெள்ளிக்கிழமையும் தொடர்ந்து நடைபெற்றது. இதன் காரணமாக கடந்த இரண்டு தினங்களாக கல்லூரியின் கற்றல் நடவடிக்கைகள் முற்றாகச் செயலிழந்துள்ளது.

ஆர்ப்பாட்டத்தின் போது மாணவர்களால் ரயர்கள் போட்டு எரிக்கப்பட்டதனால் கல்லூரியின் வாசல் கதவு சேதமாகியுள்ளதுடன் அவ்வீதியினூடான போக்குவரத்தும் தடைப்பட்டுள்ளது. இதனையடுத்து ஆர்ப்பாட்ட இடத்திற்கு கலகமடக்கும் பொலிஸாரும் இராணுவத்தினரும் குவிக்கப்பட்டு, பலத்த பாதுகாப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

# முல்லைத்தீவில் தேர்தல் கலந்துரையாடலில் ஐ.ம.சு.கூட்டமைப்பின் வேட்பாளர்கள் புறக்கணிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் மார்ச் மாதம் முல்லைத்தீவில் நடைபெறவுள்ள புதுக்குடியிருப்பு, கரைதுறைப்பற்று பிரதேச சபைகளுக்கான தேர்தல் தொடர்பாக வேட்பாளர்கள் மற்றும் அங்கீகாரமளிக்கப்பட்ட கட்சிகளின் அதிகாரிகளுக்கான கலந்துரையாடல் கூட்டத்திற்கு ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் சார்பில் போட்டியிடும் எந்தவொரு வேட்பாளருக்கும் அழைப்புக் கடிதங்கள் கிடைக்கவில்லை என ஆளும் கட்சி வேட்பாளர்கள் அதிருப்தி வெளியிட்டுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் கடந்த புதன்கிழமை இக்கூட்டம் நடைபெற்றது. இதற்கு கொழும்பிலிருந்து உதவி தேர்தல் ஆணையாளர் எம். முஹம்மதும் வருகைத் தந்திருந்தார்.

கூட்டம் நடைபெறுவதாகவும் தங்களுக்கு அழைப்புக் கடிதங்கள் அனுப்பப்படாமை குறித்து ஐ.ம.சு.கூ. கட்சி வேட்பாளர்கள், ஜனாதிபதியின் முல்லைத்தீவு மாவட்ட இணைப்பாளர் சதாசிவம் கனகரத்தினத்திடம் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து உடனடியாக முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் வேதநாயகத்துடன் தொடர்பு கொண்டதாகவும் என்ன நடந்தது என்பது பற்றி அறிந்து கூறுவதாகவும் அரசாங்க அதிபர் தம்மிடம் கூறியதாக கனகரத்தினம் தெரிவித்தார்.

## டிப்ளோமா பயிற்சிநெறிக்கு விண்ணப்பம் கோரல்

(பருத்தித்துறை)

வடமராட்சி கல்வி வலயத்தினால் 2012/2013 காலப்பகுதிக்கான முன்பள்ளி டிப்ளோமா பயிற்சி நெறிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

இதில் முன்பள்ளி ஆசிரியர்களில் டிப்ளோமாப் பயிற்சியைப் பெறவிரும்புபவர்களும் படித்துவிட்டு வேலையற்றிருக்கும் இளைஞர், யுவதிகளும் விண்ணப்பிக்க முடியும்.


விண்ணப்பங்களை வடமராட்சி வலயப் பணிமனையில் புதன்கிழமைகளில் பெற்றுக்கொள்ள முடியும் என வடமராட்சி வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் இ.தில்லைநாதன் அறிவித்துள்ளார். (109)

# பொன் அணிகளின் போர் வலுவான நிலையில் பற்றிக்ஸ்



ஆரம்ப நிகழ்வின்போது விருந்தினர்கள், வீரர்கள் அழைத்துவரப்படுகின்றனர்





படங்கள் : சுரேஸ்

(யாழ்ப்பாணம்)

பொன் அணிகளின் போர் என வர்ணிக்கப்படுகின்ற இரண்டு நாள் இனிங்ஸ் போட்டியில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி வலுவான நிலையில் உள்ளது.

சென். பற்றிக்ஸ் கல்லூரி அணிக்கும், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணிக்குமிடையில் வரலாற்று புகழ்மிக்கதாக இடம்பெற்று வரும் 95ஆவது பொன் அணிகளின் போர் நேற்றைய தினம் சென் பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமானது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி முதலில் துடுப்பாடத் தீர்மானித்தது. இதற்கமைய முதல் இனிங்ஸிற்காக களமிறங்கிய சென். பற்றிக்ஸ் கல்லூரி அணிக்கு ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாகக் களமிறங்கிய ஜக்ஸன், ரியூடர் இணை வலுவான அடித்தளத்தை அணிக்குப் பெற்றுக் கொடுத்தனர். முதலாவது விக்கெட்டுக்காக இந்த இணை 73 ஓட்டங்களைப் பகிர்ந்துகொண்டது. இதனைத் தொடர்ந்து சம இடைவெளியில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணியின் விக்கெட்டுக்கள் வீழ்த்தப்பட்டது. இருப்பினும் எட்டாவது விக்கெட்டுக்காக இணைந்த நோபேட் அஜித்டர்வின் ஆகியோர் சிறப்பான இணைப்பாட்டத்தை வெளிப்படுத்தி 67 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பெற்றனர். இறுதியில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 226 ஓட்டங்களைப் பெற்றது. இதில் நோபேட் 46, ஜக்ஸன் 34, ரியூடர் 36, குகபாலா 32 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் நிலக்ஷன், கஜிந்திரன் தலா மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு முதல் இனிங்ஸிற்காக களமிறங்கிய வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணி ஆரம்பம் முதலே சீரான இடைவெளியில் விக்கெட்டுக்களைப் பறிகொடுத்து வந்தது. நேற்றைய முதல் நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்தவேளை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணி ஆறு விக்கெட்டுக்களை இழந்து 95 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இதில் நிமலேந்திரா 21, மதுசன் 28 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தனர். ஆட்டமிழக்காது கஜேந்திரன் 27 ஓட்டங்களுடனும், மாத்வரூபன் ஒரு ஓட்டத்துடனும் களத்தில் உள்ளனர். பந்துவீச்சில் சிறப்பான முறையில் செயற்பட்ட லிவிங்ரன் 12 ஓட்டங்களைக் கொடுத்து நான்கு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி போலோனைத் தவிர்க்க இன்னும் 32 ஓட்டங்களைப் பெறவேண்டியுள்ளது. இன்று போட்டியின் இறுதி நாளாகும்.

## நெருக்கடியிலிருந்து மீள்வோம்

### யாழ்ப்பாணக் கல்லூரி அணித் தலைவர்



(யாழ்ப்பாணம்)

நெருக்கடியான நிலையில் இருந்து மீள்வோம் என்ற நம்பிக்கை எமக்கு உள்ளது என வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணியின் தலைவர் வி. சோபிநாத்சுவான் தெரிவித்துள்ளார்.

பொன் அணிகளின் போர் இரண்டு நாள் இனிங்ஸ் கிரிக்கெட் போட்டியின் முதல் நாள் ஆட்டம் குறித்து எமது செய்தியாளருக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், சென் பற்றிக்ஸ் கல்லூரி அணியின் முதல் நிலை வீரர்களின் சில பிடிகளை நாம் தவறவிட்டுவிட்டோம். இந்தப்பிடிகளை நாம் தவறவிடாமல் இருந்திருந்தால் குறைந்த பட்சம் 40 முதல் 50 ஓட்டங்களைக் கட்டுப்படுத்தியிருக்க முடியும்.

மேலும், எமது ஆரம்ப விக்கெட்டுக்களை நாம் எதிர்பார்த்ததை விட விரைவாக இழந்துவிட்டோம். இருப்பினும் சகலதுறை வீரர்கள் இன்னும் ஆடவேண்டியிருப்பதால் இந்த நெருக்கடி நிலையிலிருந்து மீள்வோம் என்ற நம்பிக்கை உள்ளது. அதற்காக அனைவரும் ஒருங்கிணைந்து செயற்படுவோம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## தொடர்ந்து தக்கவைப்போம்

### சென். பற்றிக்ஸ் கல்லூரி அணித் தலைவர்

(யாழ்ப்பாணம்)

முதல் நாள் ஆட்டம் முடிவில் சிறப்பான நிலையைப் பெற்றுள்ளோம். தொடர்ந்தும் இதே நிலையைத் தக்க வைத்துக்கொள்வோம் என சென். பற்றிக்ஸ் கல்லூரி அணியின் தலைவர் கிளிங்ரன் தெரிவித்தார்.

பொன் அணிகளின் போர் இரண்டு நாள் இனிங்ஸ் கிரிக்கெட் போட்டியின் முதல் நாள் ஆட்டம் குறித்து எமது செய்தியாளருக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களான ரியூடர், ஜக்சன் சிறப்பான தொடக்கத்தை எமக்கு ஏற்படுத்தித் தந்தனர். அத்துடன் இக்கட்டானதொரு சூழ் நிலையில் நோபேட்டின் அதிரடியான ஆட்டம் வலுவான ஓட்ட எண்ணிக்கையை நாம் பெற உதவியது.

அத்துடன் பந்து வீச்சில் லிவிங்ரன் சிறப்பாக பந்து வீசி எதிரணிக்கு கடும் நெருக்கடி கொடுத்தார். ஒட்டுமொத்தத்தில்



நாம் அனைவரும் முதல் நாள் ஆட்டத்தில் ஒருங்கிணைந்து செயற்பட்டிருக்கின்றோம். இது எதிரணிக்கு சவாலானதாகவே அமையும். எனவே, இன்றைய தினமும் சிறப்பாகச் செயற்பட்டு எதிரணிக்கு கடும் நெருக்கடி கொடுப்போம் என்ற நம்பிக்கை உள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## 3 விக்கெட்டுக்களால் இலங்கை அபார வெற்றி



சி.பீ. கிண்ண கிரிக்கெட் தொடரில் நேற்று நடைபெற்ற அவுஸ்ரேலிய அணியுடனான போட்டியில் இலங்கை அணி 3 விக்கெட்டுகளால் வெற்றியீட்டியுள்ளது.

ஹோபார்ட் நகரில் நடைபெற்ற இப்போட்டியில் அவுஸ்ரேலிய அணி 50 ஓவர்களில் 6 விக்கெட் இழப்பிற்கு 280 ஓட்டங்களைப் பெற்றது. பீட்டர் பொரெஸ்ட் 104 ஓட்டங்களைக் குவித்தார். தனது 4 ஆவது சர்வதேச ஒருநாள் போட்டியில் விளையாடும் பீட்டர் பொரெஸ்ட்டின் முதலாவது சதம் இதுவாகும். அணித்தலைவர் மைக்கல் கிளார்க் 72 ஓட்டங்களைப் பெற்றார்.


பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 49.2 ஓவர்களில் 7 விக்கெட்டுகளை மாத்திரம் இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

ஆரம்பத் துடுப்பாட்ட வீரராக களமிறங்கிய அணித்தலைவர் மஹேல ஜெயவர்தன 81 பந்துகளில் 85 ஓட்டங்களைக் குவித்தார். தினேஷ் சந்திமால் 80 ஓட்டங்களைப் பெற்றார். பின்வரிசை வீரர் திசேர பெரேரா 11 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 21 ஓட்டங்களைப் பெற்றார்.

இத்தொடரில் இலங்கை அணி இறுதியாக பங்குபற்றிய 3 போட்டிகளிலும் வென்றுள்ளதுடன் அவுஸ்ரேலியாவை தொடர்ச்சியாக இரு போட்டிகளில் தோற்கடித்துள்ளது.

தற்போது மூன்று அணிகளும் தலா 6 போட்டிகளில் விளையாடியுள்ள நிலையில் இலங்கை அணி 15 புள்ளிகளுடன் முதலிடத்தில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. அவுஸ்ரேலியா 14 புள்ளிகளையும்,இந்தியா 10 புள்ளிகளையும் பெற்றுள்ளன. போட்டியின் நாயகனாக மஹேல தெரிவானார்.

# கணேஸ்வரா மகாவித்தியாலய இல்ல மெய்வல்லுநர் போட்டி



(வவுனியா)

வவுனியா - பாவற்குளம்கணேஸ்வரா மகாவித்தியாலயத்தில் இல்ல மெய்வல்லுநர் போட்டி அண்மையில் நடைபெற்றது.

கணேஸ்வரா மகா வித்தியாலயத்தில மைதானத்தில் அதிபர் கெங்காதரன் தலைமையில் நடைபெற்றது.

வவுனியா காஞ்சனா ஜுவலரி உரிமையாளர் செல்வராசா பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

இந்த விளையாட்டுப் போட்டியில் பாடசாலை மாணவர்களின் விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்று வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்பட்டது.

இதில் மாணவர்கள் ஆசிரியர்கள் பொது மக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

விளையாட்டுப்போட்டிக்கான அனுசரணையை வவுனியா காஞ்சனா ஜுவலர்ஸ் ஸ்தாபனத்தார் வழங்கியதும் குறிப்பிடத்தக்கது. (125)

# தேசிய மட்ட கூடைப்பந்து; போராடித் தோற்றது யாழ்.மாவட்டம்

(அளவெட்டி)

49 ஆவது சிரேஷ்ட தேசிய மட்ட பெண்களுக்கான கூடைப் பந்தாட்டப் போட்டியில் யாழ் மாவட்ட அணி இறுதிவரை போராடி தோல்வியைத் தழுவியது.

கொழும்பிலுள்ள இலங்கை விமானப்படை மைதானத்தில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற இறுதிப் பேட்டியில் யாழ்.மாவட்ட அணி, இலங்கை பல்கலைக்கழக அணியுடன் மோதியது.

ஆரம்பம் முதலே இரு அணிகளும் தமது ஆதிக்கத்தை செலுத்துவதில் கடும் போட்டியிட்டன. இதனால் வெல்லப் போகும் அணிகுறித்து பரபரப்பு பார்வையாளர்களிடையே எழுந்தது. எனினும் இலங்கை பல்கலைக்கழக அணி வீரர்களின் சிறப்பான ஆட்டதால் யாழ்.மாவட்ட அணி இறுதிவரை போராடித் தோல்வியைத் தழுவியது.

இலங்கை பல்கலைக்கழக அணி யாழ். மாவட்ட அணியை 64:49 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி கொண்டது. யாழ் மாவட்ட அணியின் பயிற்றுநராக செ.ரமணன் உள்ளாரென்பதுவும் குறிப்பிடத்தக்கது. (93)

# பெண்கள் உதைபந்தாட்டம் விக்னேஸ்வராக் கல்லூரி சம்பியன்

(அளவெட்டி)

வடமராட்சிக் கோட்டப் பாடசாலை மாணவிகளுக்கிடையிலான பெண்கள் கால்பந்தாட்டப் போட்டியின் 19 வயதுப் பிரிவில் விக்னேஸ்வராக் கல்லூரி முதலிடத்தைத் தட்டிச் சென்றது.

இந்தப் போட்டியில் இரண்டாம் இடத்தை சென்.தோமஸ் பாடசாலையும், மூன்றாம் இடத்தை வட இந்து மகளிர் கல்லூரியும் பெற்றுக் கொண்டன. (93)

# தேசிய மட்ட கூடைப்பந்து; சாதித்தது கிளிநொச்சி

(அளவெட்டி)

49 ஆவது தேசியமட்ட கூடைப்பந்தாட்டப்போட்டியின் “சி” பிரிவில் முதன்முறையாகப் பங்குபற்றிய கிளிநொச்சி மாவட்ட அணி அசத்தலான வெற்றியைப் பெற்று சம்பியனானது.

கடந்தகால அசாதாரண சூழ்நிலை காரணமாக தேசிய மட்டக் கூடைப்பந்தாட்டப் போட்டிகளில் கிளிநொச்சி மாவட்ட அணி பங்குபற்றவில்லை இருந்த போதிலும், பல்வேறு வளப்பற்றாக் குறைகளுடனிருந்த இந்த அணி இந்த வருட தேசிய மட்ட கூடைப்பந்தாட்டப் போட்டியில் பல்வேறு அணிகளையும் வெற்றி கொண்டு சம்பியனானதை விளையாட்டு ஆர்வலர்கள் வரவேற்றுள்ளனர்.

கொழும்பிலுள்ள இலங்கை விமானப்படை மைதானத்தில் கடந்த 22ஆம் திகதி நடைபெற்ற இறுதிப் போட்டியில் கிளிநொச்சி மாவட்ட அணி இரத்தினபுரி அணியை எதிர்கொண்டது.

மிகவும் விறுவிறுப்பாக ஆரம்பம் முதல் இறுதிவரை நடை பெற்ற இந்தப் போட்டி, பார்வையாளரைக் கவர்ந்தது. எந்த அணி வெற்றி பெறுமென்ற விறுவிறுப்பான ஆட்டத்தில் கிளிநொச்சி வீரர்களின் சிறப்பான ஆட்டத்தில் 65:54 என்ற புள்ளிகள் அடிப் படையில் இரத்தினபுரி அணியைத் தோற்கடித்து சம்பியனானது.

இதேவேளை ‘சி’ பிரிவுக்கான மூன்றாவது இடத்துக்கான ஆட்டத்தில் வவுனியா மாவட்டம் மாத்தளை மாவட்டத்தை 47:17 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி கொண்டது. (93)

# இல்ல மெய்வல்லுநர் போட்டி

(பருத்தித்துறை)

வல்வை சிவகுரு வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு வல்வெட்டித் துறை கீருவில் விளையாட்டு மைதானத்தில் வித்தியாலய அதிபர் ஆ.சிவநாதன் தலைமையில் நடைபெறும்.

இந்த நிகழ்வுக்கு பழைய மாணவரும் ஓய்வுபெற்ற விரிவுரையாளருமான சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழக ஓய்வுபெற்ற விரிவுரையாளர் எஸ். இராஜேந்திரன், வடமராட்சி வலய உடற்கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் ச.செந்தில்குமரன் கலந்து கொள்ளவுள்ளார். (109)

# 13 வயது துடுப்பாட்டம் மகாஜனா - கந்தளாய் ம.வி.மோதல்

(அளவெட்டி)

இலங்கை பாடசாலைகளுக்கிடையே நடத்தப்பட்டு வரும் துடுப்பாட்டப் போட்டியில் 13 வயதுப் பிரிவில் தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி, திருகோணமலை கந்தளாய் மகாவித்தியாலய அணியுடன் மோதவுள்ளது.

எதிர்வரும் 27ஆம் திகதி கந்தளாய் மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ள ஐம்பது ஓவர்களைக்கொண்ட இந்தப்போட்டியில் பங்குபற்றுவதற்காக, தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி வீரர்கள் நாளை மறுதினம் சொல்லவுள்ளனர். (93)

# வடமராட்சி வலய கரப்பந்தாட்டம்

(அளவெட்டி)


வடமராட்சி கல்வி வலயப் பாடசாலைகளுக் கிடையிலான கரப்பந்தாட்டப் போட்டிககள் இன்று முதல் நடைபெறவுள்ளன.

இதில் 15,17,19 வயதுப் பிரிவு ஆண்களுக்கான போட்டிகள் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. பெண்களுக்கான போட்டிகள் நாளைமறுதினம் மேற்படி பாடசாலையில் நடைபெறவுள்ளது.

இதேவேளை 15,19 வயதுப் பிரிவு ஆண்,பெண்களுக்கான கரம் போட்டிகள் எதிர்வரும் 28, 29 ஆம் திகதிகளில் வட மத்திய மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது. (93)

# சமரச முயற்சியில் இந்திய கிரிக்கெட் வாரியம்





இந்திய கிரிக்கெட் அணி வீரர்களான டோனி, ஷேவாக் இடையேயான மோதலை முடிவுக்குக் கொண்டு வரும் தீவிர முயற்சியில் இந்திய கிரிக்கெட் வாரியம் இறங்கியுள்ளது.

இந்திய கிரிக்கெட் அணியில் எந்தப் பிளவும் இல்லை, எனவே அதுபற்றிக் கவலைப்பட வேண்டிய தேவையில்லை என்று கூறிக்கொண்டிருந்த இந்திய கிரிக்கெட் வாரியம், தற்போது வீரர்களிடையே சமரசம் ஏற்படுத்தும் நடவடிக்கையில் இறங்கியுள்ளது.

இந்த விவகாரம் தொடர்பாக அணித்தலைவர் டோனி, ஷேவாக், பயிற்சியாளர் டங்கன் பிளெட்சர் ஆகியோரிடம் இந்திய கிரிக்கெட் வாரியச்செயலர் சஞ்சய் ஜகதேல் பேசியுள்ளார். அப்போது அனைவரும் ஒற்றுமையோடு அணியாக இணைந்து செயற்படுமாறு அவர் கூறியதாகத் தெரிகிறது.

மேலும் ஷேவாக், டோனி இருவரும் இணைந்து செய்தியாளர்களைச் சந்தித்து மூத்த வீரர்களிடையே பிளவு ஏதும் இல்லை. எல்லோரும் ஒற்றுமையாகவே உள்ளோம் என்று தெரிவிக்கவுள்ளதாக இந்திய கிரிக்கெட் வாரிய வட்டாரங்கள் தெரிவித்தன.

# தாச்சிச் சங்க நிர்வாகிகள் தெரிவு

(அளவெட்டி)

யாழ்.மாவட்ட தாச்சிச் சங்க நிர்வாகிகள் தெரிவு அண்மையில் இடம்பெற்றது.

சுன்னாகம் கண்ணகி விளையாட்டுக்கழக மைதானத்தில் இந்தத் தெரிவுகள் இடம்பெறறன.

தலைவராக செ.சண்முகலிங்கம், செயலாளராக க.ஜினதாஸ் பொருளாளராக வை.ஆனந்த ஜெஸ்கரன் ஆகியோருடன் 17 பேர் கொண்ட நிர்வாக உறுப்பினர்களும் தெரிவு செய்யப் பட்டனர். (93)

# ஆசிய கோப்பை கிரிக்கெட்; இந்திய அணி தேர்வு

இந்திய கிரிக்கெட் அணி தற்போது அவுஸ்ரேலியாவில் 3 நாடுகள் போட்டியில் விளையாடி வருகிறது. இந்தப் போட்டிக்குப் பிறகு இந்திய அணி வங்களாதேசத்தில் நடைபெறும் ஆசிய கோப்பைப் போட்டியில் பங்கேற்கிறது. இந்தியா, இலங்கை, பாகிஸ்தான், வங்களா தேசம் ஆகிய 4 நாடுகள் பங்கேற்கும் ஆசிய கோப்பை கிரிக்கெட்ப் போட்டி மார்ச் 11ஆம் திகதி முதல் 22ஆம் திகதிவரை வங்களா தேசத்தில் நடக்கிறது.

இதில் ஒவ்வொரு அணியும், மற்ற அணிகளுடன் தலா ஒரு முறை மோதும். புள்ளிகள் அடிப்படையில் முதல் இரண்டு இடங்களைப் பிடிக்கும் அணிகள் இறுதிப்போட்டிக்குத் தகுதி பெறும். ஆசிய கோப்பை போட்டிக்கான இந்திய அணித் தேர்வு வருகிற 1ஆம் திகதி மும்பையில் நடக்கிறது.

3 நாடுகள் போட்டியில் இந்திய அணி ஆட்டம் சிறப்பாக இல்லை என்பதால் பல வீரர்கள் கழற்றி விடப்படலாம். சிறந்த வீரர்களை தேர்வு செய்ய வேண்டிய நெருக்கடியில் தேர்வுக் குழுவினர் உள்ளனர்.

ACC Asia Cup 2012

# தெல்லிப்பளைக் கோட்ட வலைப் பந்தாட்டப் போட்டி

(அளவெட்டி)

தெல்லிப்பளை கல்விக் கோட்ட வலைப்பந்தாட்டப் போட்டி தெல்லிப்பளை யூனியன் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் 5ஆம், 6ஆம் திகதிகளில் இந்தப் போட்டிகள் இடம்பெறவுள்ளன.

15 வயதுப் பிரிவு 17 வயதுப் பிரிவு, 19 வயதுப்பிரிவினருக்கு இந்தப் போட்டிகள் நடத்தப்பட வுள்ளன. (93)

# காஷ்மீர் மாநிலத்தில் பனிப் பொழிவு; 19 இராணுவ வீரர்கள் பலி



(ஸ்ரீநகர்)

காஷ்மீர் மாநிலத்தில் 2 இடங்களில் ஏற்பட்ட பனிச்சரிவில் சிக்கி 19 இராணுவ வீரர்கள் பலியாகினர். காஷ்மீர் மாநிலத்தில் கடந்த சில நாட்களாக கடுமையான பனிப்பொழிவு நிலவுகிறது.


பண்டிபோரா மாவட்டம் குரெஸ் மற்றும் காஷ்மீர் பள்ளத்தாக்கில் சோனாமார்க் பகுதிகளில் பனிப்பொழிவு கடுமையாக இருந்தது. குரெஸ் பகுதியில் ப்னிப்பொழிவால் போக்குவரத்து பாதிக்கப்பட்டு மாநிலத்தின் பிற பகுதிகளிலிருந்து ஏற்கனவே துண்டிக்கப்பட்டுள்ளது.

குரெஸ் பகுதியில் தவார் என்ற இடத்தில் நேற்று முன்தினம் இரவு ஏற்பட்ட கடுமையான பனிப்பொழிவில் இராணுவ பிரிகேட் தலைமையக முகாம் ஒன்று பனிச்சரிவில் சிக்கி புதைந்தது. அதில் இருந்த 15 இராணுவ வீரர்கள் பனியில் புதைந்தனர்.

இவர்களில் 12 பேர் இறந்தனர். மற்றவர்கள் மீட்கப்பட்டனர். இதேபோல், சோனா மார்க் பகுதியில் ஏற்பட்ட பனிச்சரிவில் சிக்கிய வீரர்களில் 8 பேர் மீட்கப்பட்டனர்.

7 பேரைக் காணவில்லை என்றும் அவர்கள் பிழைக்க வாய்ப்பில்லை என்பதால் இறந்திருக்கலாம் என்று அஞ்சப்படுவதாகவும் அதிகாரிகள் கூறினர். 2 இடங்களிலும் ஏற்பட்ட பனிச்சரிவில் 10 இற்கும் மேற்பட்ட வீரர்கள் காயமடைந்தனர். அவர்கள் சிகிச்சைக்காக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

பனிச்சரிவில் 19 வீரர்கள் பலியான சம்பவத்துக்கு இராணுவ அமைச்சர் அந்தோனி இரங்கல் தெரிவித்துள்ளார். பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு அரசு தேவையான எல்லா உதவிகளையும் செய்யும் என்று அவர் உறுதியளித்துள்ளார்.




# 'கொலவெறி'க்கு விளக்கம் கேட்ட பீகார் முதல்வர்

(புதுடில்லி)

'கொலவெறிடிக்கு' என்ன அர்த்தம் என்று பீகார முதல்வர் நிதிஷ் குமார் ஆர்வமாக கேட்டறிந்தார். நடிகர் தனுஷ் பாடியுள்ள "ஒய் திஸ் கொல வெறிடி" பாடல் மிகப்பெரிய ஹிட் ஆகியுள்ளது.

உத்தரப் பிரதேச சட்டப்பேரவை தேர்தல் பிரசாரத்துக்கு இந்த பாடலை காங்கிரஸ் பயன்படுத்தி வருகிறது. இந்த நிலையில், பீகார் முதல்வர் நிதிஷ்குமாரை நேற்று முன்தினம் மதிய உணவு இடைவெளியின்போது பத்திரிகையாளர் சிலர் சென்று சந்தித்தனர். அப்போது, ஜாலி மூடில் இருந்த நிதிஷ் சினிமாப் பாடல்கள் பற்றி ஆர்வமாக பேசினார்.

சல்மான் கான் நடித்துள்ள "தபாங்" படத்தில் இடம் பெற்றுள்ள "முன்னி பத்னம் ஹய்" பாட்டு நன்றாக இருக்கிறது. அதேபோல், கொலவெறிடி பாட்டையும் கேட்டேன் என்று கூறியவர், அருகில் நின்றிருந்த தனது உதவியாளரை திடீரென பார்த்து, ஆமா... கொலவெறிடி என்றால் என்ன அர்த்தம்? என்று கேட்டார். அதற்கு உதவியாளர், அது தமிழ் வார்த்தை. அதற்கு கொலை செய்யக்கூடிய அளவுக்கு வெறி என்று அர்த்தம் என்று விளக்கினார். அதை கேட்ட நிதிஷ்', ஓஹோ... அப்படியா! என்றார்.

# சினிமாவுக்கு வந்ததால் மணவாழ்வு கிடைக்கவில்லை

(சென்னை)



சினிமாவுக்கு வந்ததால் மணவாழ்வு கிடைக்கவில்லை என்று பத்மபரியா கூறியுள்ளார். இதுகுறித்து அவர் கூறியதாவது,

என் அப்பா இராணுவ அதிகாரி. அடிக்கடி இடம்மாற வேண்டியிருக்கும். இதனால் எனக்கு நண்பர்கள் குறைவு. புத்தகங்கள்தான் எனக்கு நண்பர்கள். சினிமாவுககு வரும் முன்பு மல்ட்டி நேஷனல் கம்பெனியில் வேலை பார்த்தேன். கை நிறையச் சம்பளம். அங்கேயே வேலை பார்த்திருந்தால், இத்தனை நேரம் நல்ல இடத்தில் மாப்பிள்ளை கிடைத்து திருமணமாகி செட்டில் ஆகியிருப்பேன்.

சினிமாவுக்கு வந்த பிறகு, வெளியுலக தொடர்பு குறைந்து விட்டது. பெரும்பாலான நேரம் ஹூட்டிங் லொக் கேஷன்களிலும் மற்ற நேரம் விடுதி அறைகளிலுமே கழிகிறது. சினிமாவைப் பொறுத்த வரை மம்மூட்டி, மோகன்லால், திலிப், பிருத்விராஜ், ஜெயராம் போன்றவர்களுடன் நடிக்கிறேன். எல்லோருமே திருமணம் ஆனவர்கள். சினிமாவில் எனக்கு பொருத்தமான மாப்பிள்ளை யாரும் இல்லை. பொருளாதார சுதந்திரம் மட்டுமே எல்லா சுதந்திரத்தையும், முழு மகிழ்ச்சியையும் கொடுத்துவிடாது என்று தெரிவித்தார்.

# முதல்வர் பதவி வேண்டும்; அடம் பிடிக்கும் எடியூரப்பா



(பெங்களூர்)

இழந்த கர்நாடக முதலமைச்சர் பதவியை மீண்டும் தனக்கு வழங்குமாறு எடியூரப்பா வலியுறுத்தி உள்ளதாகவும் இதுதொடர்பாக பாரதீய ஜனதா தலைவர் நிதின் கட்கரியை நேற்று சந்தித்துள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

எதிர்வரும் 27 ஆம் திகதி தனது 70 ஆவது பிறந்த நாளைக் கொண்டாட இருக்கும் எடியூரப்பா நேற்று முன்தினம் தனது ஆதரவாளர்களுடன் முக்கிய ஆலோசனை நடத்தியுள்ளார். அப்போது தன்னை மீண்டும் முதலமைச்சராக்குமாறு அவர் வலியுறுத்திப் பேசியதாக தகவல் வெளியாகியுள்ளது.

இதனையடுத்து, பெங்களூரில் கட்சி நிகழ்ச்சியில் பங்கேற்பதற்காக வந்த நிதின் கட்கரியிடம், 27 ஆம் திகதி முன்னர் மீண்டும் தனக்கு முதலமைச்சர் பதவியை வழங்க வேண்டும் என எடியூரப்பா வலியுறுத்தியதாகவும், செய்யாத தவறுக்காக சிறைக்கு சென்று பதவியை இழக்க நேரிட்டதாகவும் கட்கரியிடம் எடியூரப்பா கூறியுள்ளார்.

மேலும், முதலமைச்சர் சதானந்த கவுடாவின் செயற்பாட்டில் தனக்கு திருப்தியில்லை என்றும் அவர் புகார் தெரிவித்ததாக தெரிகிறது. இதேபோன்று சதானந்த கவுடா வும் நிதின் கட்கரியை தனியாக சந்தித்து ஆலோசனை நடத்தியிருக்கிறார் என்பது குறிப்பிடதக்கது.

# முல்லைப் பெரியாறு அணை விவகாரம்

## மத்திய அரசு பதிலளிக்க உத்தரவு

(மதுரை)

முல்லைப் பெரியாறு அணைக்கு மத்திய படை பாதுகாப்பு வழங்க வேண்டும் என்ற கோரிக்கை மனு தொடர்பாக தமிழக அரசு பதில் அளிக்க மதுரை உயர் நீதிமன்றக் கிளை நேற்றுமுன்தினம் உத்தரவிட்டது.

தமிழக பொதுப்பணித்துறை மூத்த பொறியியலாளர் சங்கத்தின் மாநில துணைத் தலைவரும், முன்னாள் தலைமை பொறியியலாளருமான விஜயகுமார், மதுரை உயர்நீதிமன்றக் கிளையில் தாக்கல் செய்த மனு, தென் தமிழகத்தின் வாழ்வாதாரமாக விளங்கும் முல்லைப் பெரியாறு அணையின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. எனவே மத்திய பொலிஸ் பாதுகாப்பு வழங்க வேண்டும். அணையின் நீர் தேக்கப்பகுதியில் கேரள அரசின் ஆதரவுடன் ஆக்கிரமிப்புகள் செய்யப்பட்டுள்ளன. இந்த ஆக்கிரமிப்புகளை அகற்ற உத்தரவிட வேண்டும்.

அணையில் பராமரிப்பு பணி மேற்கொண்டு வரும் தமிழக பொதுப்பணித் துறை பொறியாளர்கள், அவர்களின் குடும்பத்தினருக்கு உரிய பாதுகாப்பு அளிக்க உத்தரவிட வேண்டும். இவ்வாறு மனுவில் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

இதனையடுத்து இவ்வழக்கு நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இந்த வழக்கில் மத்திய அரசும், கேரள அரசும் ஏற்கனவே பதில் மனுக்களை தாக்கல் செய்துவிட்டன. இந்நிலையில், தமிழக அரசு சார்பில் பதில் மனு தாக்கல் செய்ய நீதிபதிகள் உத்தரவிட்டனர். வழக்கு விசா ரணை ஏப்ரல் 2 இற்கு ஒத்தி வைக்கப்பட்டது.

## துவக்காலச் சிந்தனை



### விடுதலை தரும் சிலுவை

சிலுவையானது இயேசு தரும் விடுதலையின் முழுமையான சரணடைவைக் குறிக்கிறது. தமது தந்தை மீதும், அவரது மக்கள் மீதும் வைத்த மட்டற்ற அன்பின் காரணமாகவே அவர் இவ்வாறு செய்தார். இது அவர்தாமே தேர்ந்துகொண்டது. மரண ஆதிக்கத்தில் இருப்போரிடம் தாமும் ஒன்றித்து தனதுயிரைக் கையளிக்க இயேசு சுயமாகத் தீர்மானிக்கின்றார். அவரது சுதந்திரம் ஆபத்தானது. அதன் விளைவே சிலுவை மரணம்.

நற்செய்தியில் இயேசுவை ஒப்புயர்வற்ற விடுதலையின் மனிதனாக சந்திக்கின்றோம். அவரது விடுதலையின் ஊற்றாக விளங்கியது தன் தந்தையையும் அவரது அரசையும் அனுபவித்தமையே ஆகும். மட்டுமீறிய பாசமும் அவரிடம் இருக்கவில்லை. அர்த்தமற்ற அச்சங்களும் அவரிடம் இருக்கவில்லை. பிறர் என்ன சொல்வார்கள், என்ன நினைப்பார்கள் என்பது பற்றி அவர் அஞ்சவில்லை.

இயேசுவோ விளைவுகள் பற்றி அஞ்சவில்லை, போற்றுவார் போற்றட்டும், தெருப்புழுதிவாரி தூற்றுவார் தூற்றட்டும்... ஏற்றது என் கொள்கை என்றால் துணிந்து செல்வேன்., தொடர்ந்து செல்வேன் என்றார்.

நாம் இன்று நற்செயல்களைச் செய்வதற்குப் பின்னிற்கிறோம். அவர்கள் என்ன நினைப்பார்கள், கதைப்பார்கள் என எண்ணி வாழ்கின்றோம். சிந்திப்போம்...

அருட்தந்தை மா.றேஜிஸ் இராசநாயகம்

# கலாம், ஹசாரே உட்பட 27 பேருக்கு 'ஜிண்டால்' அறக்கட்டளை விருது

(புதுடில்லி)

சமுதாய மேன்மையில் பங்களித்ததற்காக முன்னாள் குடியரசுத் தலைவர் அப்துல் கலாம், சமூக ஆர்வலர் அன்னா ஹசாரே மற்றும் முன்னாள் கர்நாடக மாநிலம் லோக் ஆயுக்தா சந்தோஷ் ஹெக்டே உள்ளிட்ட 27 பேர் ஜிண்டால் மற்றும் எஸ்.ஆர். ஜிண்டால் விருதுகளைப் பெற்றுள்ளனர்.

கிராமப்புற வளர்ச்சி மற்றும் வறுமை ஒழிப்பிற்காக விருதைப் பெற்ற அன்னா ஹசாரே செய்தியாளர்களிடம் கூறியதாவது, தனக்கு கிடைத்த பரிசுத் தொகையான 25 இலட்ச ரூபாயை தனது தலைமையில் இயங்கும் அறக் கட்டளை ஒன்றிற்கு நன்கொடையாகக் கொடுத்தார்.

விஞ்ஞானம் மற்றும் தொழில் நுட்பத் துறையில் சிறந்த பங்களித்ததற்காக அப்துல் கலாமுக்கும், லோக் ஆயுக்தாவாக இருந்து கர்நாடக மக்களின் வாழ்கையில் உண்மையான மாற்றத்தை கொண்டு வந்ததிற்காக ஹெக்டேக்கும் விருதுகள் வழங்கப்பட்டன. தனக்கு கிடைத்த ஒரு கோடி ரூபாய் பரிசுத் தொகையை மூன்று தொண்டு நிறுவனங்களுக்கும் தான் பிறந்த இராம நாதபுர மாவட்ட பொது நூலகத்திற்கும் கலாம் நன்கொடையாக வழங்கினார்.

ஹெக்டே, தனக்கு கிடைத்த ஒரு கோடி ரூபாய் பரிசுத் தொகையை மத்திய இராணுவ நல நிதிக்கு நன்கொடையாக வழங்கினார்.

இந்த எஸ்.ஆர். ஜிண்டால் அறக்கட்டளை அனைவருக்கும் கொடுத்துள்ள பரிசுத் தொகையின் மொத்த மதிப்பு 7 கோடி ரூபா என்பது குறிப்பிடத்தக்கது.

# வானில் ஹெலிகொப்டர்கள் மோதல்; ஏழு அமெரிக்கப் படையினர் பலி!



(வொஷிங்டன்)

அமெரிக்காவில் இரு இராணுவ ஹெலிகொப்டர்கள் வானில் மோதி வெடித்துச் சிதறியதில் 7 அமெரிக்க வீரர்கள் உயிரிழந்துள்ளனர். அமெரிக்காவில் உள்ள யுமா என்ற இடத்தில் கடற்படையில் பங்குபற்றும் விமானப் படையினர் பயிற்சியில் ஈடுபட்டு இருந்தனர்.

அதில் கோப்ரா வகை ஹெலிகொப்டர்கள் பயிற்சி செய்து கொண்டிருந்தபோது நடுவானில் 2 ஹெலிகொப்டர்கள் ஒன்றோடு ஒன்று மோதி நொறுங்கி விழுந்தன. இதில் 7 வீரர்கள் உயிரிழந்தனர். வானிலை மோசமாக இருந்த காரணத்தால்தான் இந்த விபத்து ஏற்பட்டதாக அறிவிக்கபட்டுள்ளது. கடந்த செப்டம்பர் மாதம் கலிபோர்னியாவில் இதே போன்று பயிற்சியில் ஈடுபட்டிருந்த ஹெலிகொப்டர் ஒன்று விழுந்து நொறுங்கி 2 வீரர்கள் பலியானார்கள். அதன் பிறகு இப்போது இந்த விபத்து நடந்து உள்ளது.

## உலகச் செய்திகள்


# சிரியாவுக்கு எதிரான நடவடிக்கை; துனிஷியாவில் உலக மாநாடு

சிரியாவின் தற்போதைய நிலைமை குறித்து விவாதிப்பதற்காக உலக நாடுகளின் தலைவர்கள் பங்கேற்கும் 'உலக மாநாடு' துனிஷியாவில் நடைபெறவுள்ளது.

இந்த கூட்டத்தில் அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள் மற்றும் அரபு கூட்டமைப்பு நாடுகள் உட்பட 70 நாடுகளின் தலைவர்கள் கலந்து கொள்கின்றனர்.

இதில் தாக்குதல்களில் பாதிக்கப்பட்ட மக்களுக்கும், சேதமடைந்த பகுதிகளுக்கும் மனிதாபிமான அடிப்படையில் உதவிகள் செய்வது குறித்து விவாதிக்கப்படும்.

மேலும் சிரியாவுக்கு எதிராக பல்வேறு தடைகளை விதிப்பது குறித்தும் விவாதிக்கப்படும் எனத் தெரிகிறது. இந்த கூட்டத்தில் கோபி அனான் சிரியாவின் தூதுவராக நியமிக்கப்படுவார். இவர் ஐ.நா பொதுச் செயலாளராக பணியாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.



இதுகுறித்து ஐ.நா வெளியிட்டுள்ள அறிக்கையில், சிரியாவில் தற்போது நடைபெற்றுவரும் வன்முறைத் தாக்குதல்களை முடிவுக்கு கொண்டுவரவும், அமைதியை நிலைநாட்டவும் இந்த மாநாடு வழிவகுக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, நேற்றுமுன்தினம் நடந்த தாக்குதலில் ஒரே நாளில் மட்டும் 50லிருந்து 60 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

# பொலிவியாவில் கடும் மழை ஆறு உடைப்பு; 50 பேர் பலி



பொலிவியா நாட்டின் ஆறு உடைத்து ஏற்பட்ட வெள்ளத்தில் சிக்கி 50பேர் உயிரிழந்துள்ளனர். தென்அமெரிக்காவில் உள்ள பொலிவியா நாட்டில் கடும் மழை பெய்து வருகிறது. இதனால் வெள்ளம் ஏற்பட்டுள்ளது. அமேசன் ஆற்றின் துணை நதியான அக்ரே ஆறு உடைத்து கிராமங்களுக்குள் வெள்ளம் புகுந்துள்ளது.

இதனால் நாட்டின் பெரும்பாலான பகுதிகள் வெள்ளத்தில் மிதக்கின்றன். இதில் 9 ஆயிரம் வீடுகள் வெள்ளத்தால் சூழப்பட்டுள்ளன. 50 பேருக்கும் மேற்பட்டோர் வெள்ளத்தில் சிக்கி பலியாகியுள்ளனர்.

வெள்ள நிலைமை தொடர்ந்து மோசமாக உள்ளது. இதனால் நாட்டில் அவசர நிலை பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது. பக்கத்தில் உள்ள பெரு, பிரேசில் நாட்டிலும் வெள்ள நிலைமை மோசமாக உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# முபாரக் ஒரு அப்பாவி



நான் ஒரு அப்பாவி, எந்த தவறும் செய்யவில்லை என எகிப்தின் ஜனாதிபதி ஹோஸ்னி முபாரக் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

எகிப்தில் கடந்தாண்டு பெப்ரவரி மாதம் மக்கள் புரட்சி ஏற்பட்டது. இதனால் இராணுவத்தினர் போராட்டக்காரர்களை தாக்கியதில் 900இற்கும் மேற்பட்டோர் இறந்தனர்.

இந்தப் போராட்டம் தீவிரம் அடைந்ததால் முபாரக் பதவி விலகினார். அதன் பின் இவர் மீது ஊழல், கொலை மற்றும் போர்க் குற்ற வழக்குகள் தொடரப்பட்டு கெய்ரோ நீதிமன்றத்தில் விசாரணை நடந்து வருகிறது.

நேற்று முன்தினம் நடந்த விசாரணையில் ஜனாதிபதியின் சார்பில் அவரது வக்கீல் மனுவொன்றைத் தாக்கல் செய்தார்.

அதில், என் மீதான குற்றச்சாட்டுகள் ஆதாரமற்றவை. நான் ஒரு அப்பாவி. எகிப்து நீதித்துறை மீது எனக்கு நம்பிக்கை உள்ளது. நான் நிரபராதி என்பதை நிரூபிப்பேன் என்று முபாரக் தெரிவித்துள்ளார்.

# ஜாக்சன் இறப்பிற்கு கடன் சுமையே காரணம்



இசைப் பாடகர் மைக்கேல் ஜாக்சன் அதிக கடன் சுமை காரணமாக போதை மருந்து உட்கொண்டு இறந்தார் என அவருடைய மருத்துவர் கொன்ராட் முர்ரே தெரிவித்துள்ளார்.


உலகத்தில் உள்ள அனைவரையும் தன் பொப் இசைப் பாடல்களால் கவர்ந்த மைக்கேல் ஜாக்சன் கடந்த 2009ஆம் ஆண்டு ஜூன் மாதம் 25ஆம் திகதி இறந்தார். ஜாக்சனின் மரணத்திற்கு அதிக போதை மருந்துதான் காரணம் எனக் கருதி, அவரது மருத்துவர் கொன்ராட் முர்ரேவுக்கு கடந்தாண்டு நவம்பர் மாதம் நான்கு ஆண்டு சிறை தண்டனை அறிவிக்கப்பட்டது.

இந்த தண்டனையை எதிர்த்து லாஸ் ஏஞ்சல்ஸ் நீதிமன்ற நீதிபதியிடம் கொன்ராட் முர்ரே குறிப்பிடுகையில், மைக்கேல் ஜாக்சனை நான் கொலை செய்யவில்லை. அவருக்கு 440 மில்லியன் அமெரிக்க டொலர் அளவுக்கு கடன் சுமை இருந்தது.

இதன் காரணமாக தன்னுடைய எஸ்டேட் உட்பட பல்வேறு சொத்துகள் பறிபோவதை பொறுக்க முடியாமல் தானாகவே அவர் அதிக அளவு போதை மருந்து உட்கொண்டு இறந்தார். இதை விசாரணையின் போது நீதிமன்றம் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று தெரிவித்தார்.

# மெய்தான் பாருங்கோ...

## வெக்கங்கெட்டகதை!



நீங்கள் எங்களைப் பற்றி அதாவது பாருங்கோ எங்கட சனத்தைப் பற்றி என்ன நினைக்கிறியள்...?

தமிழன் என்றொரு இனமுண்டு; தனியே அவர்க்கொரு குணமுண்டு எண்டு பாரதிதாசனோ அல்லது நாமக்கல் கவிஞரோ ஆரோ சொல்லியிருக்கிறாரல்லோ! ஞாபகமிருக்கே உங்களுக்கு?

தமிழனை நினைச்சு அவர் என்ன எண்ணப்பாட்டில எழுதினாரோ? பாடினாரோ? கடவுள் சத்தியமா எனக்குத் தெரியாது பாருங்கோ!

ஆனா இஞ்சை வன்னியிலயிருக்கிற அதுவும் புதுக்குடியிருப்பிலயிருக்கிற ஒரு சில 'தமிழரின்' சில செய்கை காரியங்களை நேரில பாத்தாப்பிறகு தான் கவிஞர் அப்பிடிப் பாடினாரோ...? எண்டு யோசிக்க வேண்டிக்கிடக்குது.

என்னெண்டு கேட்கிறியளே?

ஹி...ஹி...ஹி... ஹி... வெக்கங்கெட்டகதை வெளியில சொல்லிப் போடாதையுங்கோ.

வன்னிப் போருக்குள்ள சொத்து சுகம்... சொந்த பந்தம்... அங்கம்; ஆவணங்கள்... எண்டு எல்லாத்தையும் துலைச்சுப் போட்டு உடுத்த துணியோட ஒண்டுமில்லாமல் ஆமியிட்டை ஓடிப்போன சனங்கள் இன்னமும் திருந்தின மாதிரியில்லை.

இப்பவும் தானும் தன்ர குடும்பமும் நல்லாயிருந்தால் காணும் மற்றவை எக்கேடு கெட்டுப்போகட்டும் எண்ட சுயநலமான சிந்தனைகள்... கொள்கைப்பாடுகள் தமிழனுக்கு இருக்கும் வரைக்கும் தமிழன் எந்தக்காலத்திலும், எந்த நாட்டிலும் உருப்படவே மாட்டான்.

இது உண்மையிலும் உண்மைதான் பாருங்கோ.

சிங்களவன் அடிக்கேக்கைதான் தமிழனுக்கு இன உணர்வும் இரத்தோட்டமும் ஒண்டாச் சேருதேயொழிய, மற்றப்படி அவன் தனக்குள்ள வெட்டுப்பட்டு; குத்துப்பட்டு ஆருடைய சொத்துப் பத்துக்களை அம்பாளிச்சு ஆனந்தமாச் சீவிக்கலாம் எண்டுதான் சிந்திக்கிறான்.

உதாரணத்துக்கு ஒரு சம்பவம் சொல்லுறன் கேளுங்கோவன்!

செட்டிகுளம் முகாமிலயிருந்து மீள்குடியேற்றமெண்டு புதுக்குடியிருப்புக்கு வந்தாப்பிறகு அவரவர் வீட்டை போக இருட்டுப்பட்டுப்போச்சுது கண்டியளே. அடுத்த நாள் காலமை எங்கட சனங்களில பெரும்பாலான ஆட்கள்... அதுவும் டிரைக்டர், லாண்ட்மாஸ்டர் மிசினுகள் கொண்டுவந்தவை; வைச்சிருந்தவை என்ன செய்தவையெண்டு தெரியுமே?

வெக்கங்கெட்டகதை வெளியில சொல்லிப்போடாதையுங்கோ! டிரைக்டர் பெட்டியில ஏத்திக் கொண்டு வந்த தங்கட சாமானுகளை வீட்டுவாசலில கொட்டிப் போட்டு, தன்ர வீடு எப்படிக்கிடக்குது எண்டு உள்ளுக்கை போய் பாக்கிறதை விட்டிட்டு, அதே டிரைக்டரைக்கொண்டு அடுத்தவன்ர தென்னங்காணிக்குள்ள போய் ரண்டு வருசமாய்விழுந்து கிடந்த தேங்காய் ஒண்டும் விடாமல் பொறுக்கிப் பெட்டியில போட்டுக்கொண்டு வந்திச்சினம்.

அதோடை அந்தத் தென்னந்தோட்ட வளவுக்குள்ள கிடந்த நிலை, யன்னல், அம்மி, குழவி, உரல், உலக்கையெண்டு கண்ணில அம்பிட்ட தெல்லாத்தையும் பெட்டியில அள்ளிப் போட்டுக்கொண்டு வந்த பிற்பாடுதான் பிறகு தங்கடவீட்டைப் போய் பாத்தினம்.

அந்தக் காலங்காத்தால, முகங்கூடக்கழுவாமல் பூளை சாறின கண்ணுகளோடை சிலசனங்கள் ஒழுங்கை வழிய அடுத்தவையின்ர பொருளுகளை அள்ள ஆத்துப் பறந்து ஓடித்திரிஞ்சதைப் பாக்க நானும் ஒருதமிழன் எண்டு சொல்லவெட்கமாக் கிடந்துது.

இதுவொரு வெக்கங்கெட்ட கதை தயவு செய்து வெளியில சொல்லிப் போடாதையுங்கோ.

தங்கட இருப்புகளுக்காக உணர்ச்சியளுக்கு உசுப்பேத்துற கதையளைக்கேட்டு, நாங்கள் வெளிப்பார்வைக்கு சும்மா இன உணர்வெண்டு காட்டுறதேயொழிய, எங்களுக்குள்ள அப்படியொரு உணர்வுமில்லை; ஒற்றுமையுமில்லை. இருந்திந்தால் என்னப்போலதானே பக்கத்து வீட்டுக்காரனும் போரால பாதிக்கப்பட்டவன்... அவன்ர பொருளைத் தொடக்கூடாது. அவன் வரும் வரைக்கும் அவனது வீட்டையும், பொருள் பண்டங்களையும் பாதுகாத்துக் குடுக்க வேணும்... எண்டல்லோ சிந்திச்சிருக்கவேணும்.

இன உணர்வு... இனஒற்றுமை... எண்ட போர்வைக்குள்ள எல்லாம் பொசிஞ்சிருக்கிறது சுயநலம். போராட்டம் தோத்துப் போனதுக்கு பல காரணங்களில, சனங்களுக்கு இருந்த இந்தச் சுயநலமும் ஒண்டுதானெண்டதை மறுக்கேலாது.

சுயமாய் சிந்திக்கிறதை விட, சுயநலமாய் சிந்திஞ்சு அடுத்த வீட்டுக்காரன்ர தேங்காய்க்கும்; மாங்காய்க்கும் ஆசைப்படுகிற சனங்கள் இருக்கும் வரைக்கும் ஆயிரம் பொடியள்மார் செத்தென்ன! ஆயிரம் தமிழினத்தின் தலைவர்மார் உருவாகியென்ன? இதுவொருவெக்கங்கெட்ட கதை! வெளியில சொல்லிப்போடாதையுங்கோ!.

- சின்னக்குட்டி சின்னச்சாமி.

# ஜெனிவா கவன ஈர்ப்பு போராட்டம்; தொடர்கிறது புலிகளின் நீதிக்கு உரிமைகோரும் பிரிவுகளுக்குள் மோதல்!



புலம்பெயர் தேசத்தில் காலத்துக்கு காலம் தாயகத்துக்கு மக்களுக்காய் மாய்ந்து மாய்ந்து குரல் எழுப்பும் புலதது புலிகள் கடந்த நவம்பர் மாதத்தில் மாவீரருக்காய் இரண்டுபட்டு விழா எடுத்தார்கள்.

தற்போது தாயகத்து மக்களாய் நீதி கேட்டு ஐ.நா. நோக்கிய நடைப் பயணத்தில் போட்டா போட்டிகளின் மத்தியில் நீ முந்தி நான் முந்தி என்று ஒருவரையொருவர் மாறி மாறி புலத்து மக்களுக்கு அழைப்புக்களும் அறிக்கைகளும் ஒவ்வொரு அணிக்கும் ஒவ்வொரு இணையத்தளங்களுமாய் நாம் இங்கு காணும் காட்சிகளை என்னவென்று சொல்லுவது...?

மே 19 க்காய் புலத்தில் நடத்திய வீண் ஆவேசப் போராட்டங்களின் தொடர்ச்சியாகவே இவற்றையும் காணகின்றோம். ஆனால் இப்போது அணி பிரிந்து போராடுகின்றார்கள். மே 19 க்காய் நடத்திய போராட்டங்களின் கதியே இப்போதும் நிகழலாம்.

கடந்த மாதம் 28 ஆம் திகதி லண்டனிலிருந்து உருத்திரகுமாரனால் ஆரம்பிக்கப்பட்ட நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் அணியினர் ஐ.நா. நோக்கிய நடைப்பயணத்தை ஆரம்பித்திருந்தனர். திட்டமிட்டபடி இவர்களது நடைப்பயணம் பெப்ரவரி 27 இல் ஐ.நா. ஜெனீவா தலைமையகத்தை வந்தடையும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை இந்த அணியினர் பிரான்ஸ் நகரை வந்தடைந்த வேளையில் இவர்களுடன் பிரான்சிலுள்ள நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் அணியினர் இணைந்து நடைப்பயணத்தை மேற்கொள்வதாக திட்டமிட்டிருந்ததாம். லண்டன் நடைப்பயணம் பிரான்சை வந்தடைவதற்குள் பிரான்ஸிலுள்ள நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் அணியினருக்குள் கருத்து வேறுபாடு ஏற்பட்டு விட்டதாகத் தகவல்.

இதனால் அவர்கள் லண்டன் அணியினருடன் இணைந்து நடைப்பயணத்தை தொடரவில்லையாம். இதனால உற்சாகம் குன்றியிருந்த நடைப்பயணதில் ஈடுபட்ட லண்டன் நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் அணியினருக்கு உற்சாகம் அளிப்பதற்காக லண்டனிலிருந்து ஒரு குழுவினர் வந்து அவர்களுடன் பிரான்சிலிருந்து நடைபயணத்தில் இணைந்துள்ளனராம்.

நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்திற்குள்ளேயே நாட்டுக்கு நாடு நிமிடத்திற்கு நிமிடம் பிளவுகள் உருவாகிக் கொண்டுள்ள நிலையில் எந்த நீதியை யாரிடம் கேட்பதோ?

ஐ. நா. நோக்கிய நீதி கேட்கும் நடைப்பயணத்தின் மற்றைய புலம்பெயர் அணியான தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவினர் தமது நடைப்பயணத்தை பெப்ரவரி மாதம் 5 ஆம் திகதி பெல்ஜியம் நாட்டில் ஐரோப்பிய நாடாளுமன்ற முன்றலில் ஆரம்பித்து நடைப்பயணத்தை தொடர்கின்றார்கள். இவர்களது நடைப்பயணம் திட்டமிட்டபடி மார்ச் 5 ஆம் திகதி ஜெனிவாவை வந்தடையும்.

இந்தப் பயணத்தில் மக்களை பங்கெடுக்கும்படி பிரான்சிலிருந்து ஜெனிவா நோக்கி அதிவேக விரைவு ரயில் ஒன்று கூட வாடகைக்கு அமர்த்தப்பட்டுள்ளது. பிரான்ஸ் அரசுக்கு சொந்தமான அந்த ரயிலின் முகப்புப் பகுதியில் தமிழீழ வரைபடம், புலிக்கொடி, புலித்தலைவரின் படம் ஆகியவற்றை உள்ளடக்கிய கண்கவர் விளம்பரங்கள் இணையத்தளங்களில் உலாவருகின்றன.

ரயில் பயணத்தின் போது இருக்கைகள் நிரம்பாவிட்டாலும் கஜானா நிரம்பினால் போதும் என்ற நன்னோக்கில் இந்தப் பயணச்சீட்டுக்கள் தலா ஒருவருக்கு 65 யூரோவுக்கு புலம்பெயர் தமிழர்களுக்கு விற்கப்பட்டாயிற்றாம்.

இந்த நடைப்பயணத்தில் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவினர் புலம்பெயர் தமிழர்களுக்கு உசுப்பேற்றி தம்முடன் ஒருங்கிணைத்து ஜென்வாவுக்கு அழைத்துச் செல்லும் நோக்கில் இன்று தமது சார்பு இணையத்தளங்களில் ஒரு செய்தியை பதிவிட்டிருந்தார்கள்.

அதாவது ஜெனீவாவில் தமிழர்கள் நடத்த இருக்கும் கவனஈர்ப்பு போராட்டத்தை முறியடிக்க , இலங்கை அரசானது பல வழிகளில் முனைப்புக்காட்டி வருகிறது. தற்போது கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில், பிரித்தானியாவில் உள்ள இலங்கைத் துணைத்தூதுவர் அம்சா இத்தாலியில் இருந்தும், மற்றும் லண்டனில் இருந்தும் பேருந்துகளை ஒழுங்குசெய்யவுள்ளார் என அறியப்படுகிறது. இப் பேருந்துகளில் சிங்களவர்களை ஏற்றி ஜெனீவாவுக்கு கொண்டுசென்று அங்கே நடக்கவிருக்கும் தமிழர்களின் கவனயீர்ப்புப் போராட்டங்களை, குழப்பி அதனை முறியடிக்க அம்ஸா திட்டம் தீட்டியுள்ளாராம்.

பிரித்தானியாவில் மட்டும் சுமார் 3 இலட்சத்துக்கு மேல் தமிழர்கள் வாழ்கிறார்கள். மற்றும் ஏனைய ஐரோப்பிய நாடுகளில் ஆயிரக்கணக்கில் தமிழர்கள் வாழ்கிறார்கள். ஆனால் சில ஆயிரம் சிங்களவர்களே ஐரோப்பிய நாடுகள் அனைத்திலும் வசித்து வருகின்றனர். இவர்களை ஒன்று திரட்டி தமிழர்களின் போராட்டத்தை முடக்க திட்டமாம். இவ்வாறாக அந்த செய்தி பரவ விடபபட்டிருந்தது.

இந்தச் செய்தி பதிவிடப்பட்ட மறுகணத்தில் நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் நாதம் ஊடக சேவை இந்தச் செய்தியை திட்டமிடப்பட்ட சதி - உண்மைக்குப் புறம்பான செய்தி என்று ஒரு அறிக்கையை வெளியிட்டு இணையத்தளங்கள் வாயிலாக பதிவிட்டுள்ளது. நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்திற்கு மாத்திரமே ஜென்வாவில் ஒன்று கூடுவதற்கு சுவிஸ் பொலிஸாரின் அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் சிங்களவர்கள் ஆர்ப்பாட்டம் எதுவும் நடத்தப் போவதில்லை என்றும் அவர்களது அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த அறிக்கைகள் எந்த நோக்கததில் வெளியிடப்படுகின்றன, இவற்றின் உண்மைத்தன்மைகள் தாயக மக்களின் நலன்கள் பொதிந்தவையாக இருக்கின்றனவா என்பதை சிந்தித்துப் பார்க்காது சிந்தை கலங்கியவனாக புலம்பெயர் தமிழர்கள் எடுப்பார் கைப்பிள்ளைகளாக இருப்பதும் இயங்குவதும் வழமையானதொன்றே.

தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவினர் குறிப்பிட்டபடி சிங்களவர்கள் ஜென்வாவில் எதுவித எதிர்ப்பு நடவடிக்கைகளிலும் ஈடுபடஉள்ளதாக தகவல்கள் இல்லை. அவர்கள் குறிப்பிட்டபடி பிரித்தானியாவில் பணியாற்றிய பிரித்தானியாவுக்கான இலங்கைத் துணைத தூதுவர் அம்சா தனது பணிக்காலம் முடிவடைந்து திரும்பிவிட்டார் என்பதையே அறியாமல் தங்களது பரப்புரைகளை முடுக்கிவிட்டுள்ளார்கள்.

தாயக மக்களுக்காய் நீதி கோரும் போராட்டத்தில் ஒருங்கிணைந்து நீதி கேட்பதற்கு திராணியற்ற புலம்பெயர் வீண் ஆவேசத் தமிழர்கள் இப்போதும் எதனைச் சாதிக்கப் போகின்றார்கள்?

- நன்றி: தேனீ

# ஜெனீவாவில் ஸ்ரீலங்கா: தமிழ் மக்களுக்கு என்ன கிடைக்கும்?

சுதந்திரத்தின் பின்பு இலங்கையில் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்ட மனித உரிமை மீறல்கள் சர்வதேச சமூகததிற்கும் அதன் கருத்தியல் வடிவமான ஐக்கிய நாடுகள் (ஐ.நா.) சபைக்கும் புதிய விஷயம் அல்ல.

இலங்கை அரசின் மனித உரிமை மீறல்கள் தொடர்பான முதல் விவாதம் 1986 இல் ஐ.நா. சபையின் மனித உரிமைகளுக்கான ஆணைக்குழுவின் கூட்டத்தில் நடைபெற்றது. இதற்கான தீர்மானத்தை ஆணைக்குழுவின் கூட்டத்தில் கொண்டுவந்த நாடு ஆர்ஜென்டீனா. தீர்மானத்தை கொண்டு வருவதில் பின்னணியில் தீவிரமாக இயங்கிய நாடான இந்தியா தீர்மானத்தை ஆதரித்து வாக்களிததது.

அப்போதைய இலங்கையின் ஜனாதிபதியான ஜே.ஆர். ஜெயவர்தனாவின் நண்பர்களாகவிருந்த அமெரிக்காவும், மேற்கு ஐரோப்பிய நாடுகளும் அவர்களுடைய சொல் கேட்ட பல ஆபிரிக்க நாடுகளும் தீர்மானத்தை எதிர்த்து வாக்களித்தன.

வன்னி இறுதி யுத்தத்தின் போது, சர்வதேச ரீதியாக ஏற்றுக் கொள்ளப்பட்ட மனித உரிமைகள் பற்றிய சட்ட விதிகளும், மானிட நலன் தொடர்பான சட்ட விதிகளும் மீறப்பட்டனவா என்ற உண்மையை கண்டறிவதற்கான பகிரங்க விசாரணை தேவை என 2009 இல் மனித உரிமை கவுன்சிலில் கொண்டுவரப்பட்ட தீர்மானம் நிறைவேற்றப் படுவதற்கு பதிலாக பயங்கரவாதத்தை தோற்கடித்ததற்காக இலங்கையை பாராட்டும் தீர்மானம் உறுப்பு நாடுகளால நிறைவேற்றப்பட்டது.

இதற்கு சீனா, ரஷ்யாவுடன், இந்தியாவும் முழுமனதுடன் பாடுபட்டது. இத்தீர்மானம் நிறைவேறுவதற்கு மனித உரிமை கவுன்சிலுக்கு இலங்கை அளித்த வாக்குறுதிகள் முதன்மையான காரணமாக அமைந்தன.

முப்பது வருடங்களுக்கு மேலாக அனுபவித்த பயங்கரவாதத்தின் கொடுமையை இப்போதுதான் முடிவுக்கு கொண்டு வந்ததாயும், உண்மையான ஜனநாயகமும், சுபீட்சமான பொருளாதாரமும் கட்டியெழுப்பப்படுவதற்கான கால அவகாசத்தை இலங்கைக்கு வழங்க வேண்டும் எனவும் இலங்கை கோரியது சரியென ஏற்றுக் கொள்ளப்பட்டது.

பெப்ரவரி 27, 2012 இல் ஆரம்பமாகவுள்ள ஐ.நா. மனித உரிமைக் கவுன்சிலின் 19ஆவது அமர்வில், சம்பவங்களுக்கான விளக்கம் அல்லது பதில் கூறும் தன்மை (accountability), விசாரணைகளில் நம்பகமான வெளிப்படைத்தன்மை (transparency) என்பவற்றுடன் இனங்களுக கிடையேயான நல்லிணக்கத்தை (reconciliation) மேற்கொள்வதற்காக இலங்கை அரசானது மேலும் பலன் தரக்கூடிய நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டுமெனக் கேட்டுக்கொள்ளும் தீர்மானம் கொண்டுவரப்படும் எனவும், அத்தகைய ஒரு தீர்மானம் கொண்டுவரப்பட்டால், அதற்கு தாம் ஆதரவளிக்கப் போவதாக அமெரிக்கா தெரிவித்துள்ளதாகவும் ஊடகங்கள் தெரிவிக்கின்றன...

ஐக்கிய நாடுகள் சபையில் உள்ளடங்கியுள்ள அமைப்புக்களில் ஒன்றான மனித உரிமைகள் கவுன்சில் ஒரு வருடத்தில் இரு அமர்வுகளை மார்ச் மற்றும் ஜூலை மாதங்களில் மேற்கொள்கிறது. மார்ச்சில் நடைபெறும் அமர்வு ஜெனீவாவிலும், ஜூலை அமர்வு நியூயோர்க்கிலும் ஒவ்வொரு வருடமும் நடைபெறும்.

ஒரு நாட்டில் மனித உரிமைகள் மீறப்படுவதாக கிடைக்கும் குற்றச்சாட்டுக்களை விசேட குழுவொன்றின் மூலம் விசாரித்து பின்னர் உறுப்பு நாடுகளின் தீர்மானத்திற்கு அந்த அறிக்கை சமர்ப்பிக்கப்படுகிறது. உறுப்பு நாடுகள் குறிப்பிட்ட ஒரு நாட்டில் நடைபெறும் மனித உரிமை மீறலகள் விசாரிக்கப்பட வேண்டும் என ஏற்றுக்கொண்டால், அத்தீர்மானம் ஐ. நா. பொதுச்சபையின் விவாதத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

பொதுச்சபையில் அநேகமாக உலகில் அங்கீகரிக்கப்பட்ட அனைத்து நாடுகளும் அங்கத்தவர்களாக உள்ளன. பொதுச்சபையும் விவாதத்தின் முடிவில் அத்தீர்மானத்தை ஏற்றுக்கொண்டால் அத்தீர்மானம் ஐ. நா. வின் பாதுகாப்பு



- ஜெயன் தேவா

சபை என்ற அமைப்பின் விவாதத்திற்கு விடப்படும்.

இம்மூன்று அமைப்புக்களிலும் பாதுகாப்பு சபையே தனது தீர்மானங்களை செயலுருவமாக்கக் கூடிய அதிகாரத்தை கொண்டது. பாதுகாப்பு சபையில் நிறைவேற்றப்படும் தீர்மானமே சர்வதேச குற்ற நீதிமன்றத்திற்கு பாரப்படுத்தப்பட முடியும். மனித உரிமை கவுன்சில் அல்லது ஐ.நா. பொதுச்சபை ஒரு நாட்டின் நடவடிக்கைகள் பற்றிய அபிப்பிராயங்களை தெரிவிக்கும் அமைப்புக்களே தவிர, ஒரு நாட்டின் நடவடிக்கைகளின் மீது எவ்வித கட்டுப்பாடு களையும் பிரயோகிக்கும் சட்ட ஆளுமையற்றவை என்பது இங்கே கவனிக்கப்பட வேண்டும்.

இஸ்ரேல் மீது பாதுகாப்பு சபை நிறைவேற்றிய தீர்மானங்கள் பலவற்றின் மீது இன்னமும் நடவடிக்கை எடுக்கப்படாமல் அவை கிடப்பிலேலேயே கிடக்கின்றன. அதே போல், சிரியாவில் நடைபெறும் போர்க்குற்றங்கள் விசாரிக்கப்பட வேண்டும் என மனித உரிமை கவுன்சிலும், பொதுச்சபையும் நிறைவேற்றிய தீர்மானம் பாதுகாப்பு சபையில் நிறைவேற்றப்பட முடியாமல் சீனாவும், ரஷ்யாவும் தமது வீட்டோ அதிகாரத்தின் மூலம் தடுத்தன.

எனவே, மனித உரிமைகள் கவுன்சிலில் நிறைவேற்றப்படும் தீர்மானம் அடுத்த நாளே இலங்கை அரசையும், மகிந்த ராஜபக்ஷவையும் குற்றவாளிக் கூண்டில் நிறுத்திவிடப் போவதில்லை. இத்தீர்மானம் நாட்டின் ஆட்சியாளரை சர்வதேச அரங்குகளில் வெட்கித் தலைகுனிய வைப்பதற்கான ஒரு கருவியாக அமையலாம்.

அதையும் விட, உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம், ஆசிய அபிவிருத்தி வங்கி போன்ற கடன் வழங்கும் அமைப்புக்களிலிருந்து கடன்களைப் பெற்றுக் கொள்வது சிரமமான காரியமாக அமையலாம். தனிப்பட்ட நாடுகளும் கூட தமது பொருளாதார உதவிகளை நிறுத்திக் கொள்ளலாம். தன்னார்வ அமைப்புக்கள் இலங்கையை பகிஷ்கரிககுமாறு பிரசாரங்களை மேற்கொள்ளலாம். இலங்கைக்கு உல்லாசப் பயணம் செல்ல வேண்டாம் எனவும், இலங்கையின் ஏற்றுமதிப் பொருட்களை கடைகளில் வாங்க வேண்டாம் எனவும் அவை மக்களை கேட்டு பிரசாரம் செய்யலாம். மிக அண்மைக்காலம் வரை பர்மா மீது இத்தகைய பிரசாரம் முன்னெடுக்கப்பட்டது.

அதிகாரத்தின் பெயரால் ஒரு உயிர் பறிக்கப்பட்டதற்கும், ஒரு நபர் காணாமல் போனதற்கும் காரணமாயமைந்தது எது அல்லது யார் என்ற வினாவிற்கு விடை சொல்ல வேண்டிய கடப்பாடு அரசுக்கு உண்டு. இறுதி யுத்ததின் முடிவில், தமது பிள்ளைகள் அல்லது உறவினர் இராணுவத்தால் தேர்ந்தெடுக்கப்பட்டு பஸ் வண்டிகளில் ஏற்றப்பட்டதை நேரில் கண்டவர்கள், இன்றுவரை அவர்கள் ஏன் திரும்பி வரவில்லை என்ற கேள்விக்கு விடைதேடி காத்திருக்கிறார்கள். அதேபோல், ஓயாத அலைகளின் போது கைதிகளாகப் பிடிக்கப்பட்ட இராணுவ உறுப்பினர்களுக்கு என்ன நடந்தது என்பதற்கு பதில் கூற வேண்டிய பொறுப்பு தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் உண்டு.

பிரிவும், உயிரிழப்பும் தருகின்ற துயரத்திலிருந்து மீண்டெழுந்து, தமது வாழ்க்கையை முன்னோக்கி சீரமைத்துக் கொள்வதற்கான மனரீதியான மற்றும் பொருளியல் ரீதியான உதவிகளை வழங்குவது அரசாங்கத்தின் முக்கியமான கடமை. அதற்கும் ஒருபடி மேலே சென்று இனங்களுக்கிடையேயான சுமுக உறவையும், நல்லிணக்கத்தையும் மேம்படுத்துவதற்கான முன்னெடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதும் அரசின் மிக முக்கிய பொறுப்பு.

நாட்டு மக்கள் அனைவரினதும் சுமுகமான எதிர்காலத்தை மனதில் கொண்டு, ஐ. நா. தீர்மானம் தரக்கூடிய அழுத்தங்கள் எதிர்நோக்கப்பட வேண்டும். ஏற்கனவே கற்றுக் கொண்ட அனுபவப் பாடங்கள், இத்தகைய பெருந்துயர் கொண்ட பேரழிவு மீண்டும் ஏற்படாமல் இருப்பதற்கும், சமூகங்களுக்கிடையேயான நட்பும், புரிந்துணர்வும் வளர்வதற்கான காரணியாகவும் அமைய வேண்டும். தீர்மானத்தினால் ஏற்படக்கூடிய விளைவுகளைவிட மக்களின் எதிர்காலம் குறித்த அக்கறை முன்னிறுத்தப்பட வேண்டும்.

மனித உரிமை கவுன்சிலில் இலங்கை மீதான தீர்மானம் ஒரு வேண்டுகோளாகத்தான் வெளிப்படுத்தப்படுகிறது. அத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டால் புலம்பெயர்ந்த தமிழர்கள் அதை தமது மாபெரும் வெற்றியாக கொண்டாடுவதன் மூலம் நாட்டிலுள்ள தமிழ் மக்களின் உயிர் மற்றும் உடமைகள் மீதான பாதுகாப்பு மேலும் குறைவடையச் செய்வதோ அல்லது தோற்கடிக்கப் பட்டால், அந்த வெற்றி தரக்கூடிய மமதையில் ஸ்ரீலங்கா அரசு நாட்டிலுள்ள மற்றைய இனங்களின் நியாயமான உரிமைகளை வழங்க மறுப்பதோ தவிர்க்கப்பட வேண்டும். வெற்றியடைந்தாலும், தோல்வியடைந்தாலும் தீர்மானம் இலங்கைத்தீவின் மக்களுக்கு நன்மையளிக்கக் கூடியதாக அமைய வேண்டும்.

# சவேந்திர சில்வா நியமனம் நிராகரிப்பு சரியான தீர்மானமே என்கிறார் ஐ.நா. அதிகாரி



ஐக்கிய நாடுகளின் அமைதி காப்புக்கான பான் கீ மூனின் ஆலோசனைக்குழுவில் இருந்து இலங்கையின் பிரதி வதிவிடப் பிரதிநிதி சவேந்திர சில்வா நீக்கம்செய்யப்பட்டமை சரியான தீர்மானம் என்று ஐக்கிய நடுகளின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

எனினும், ஐக்கிய நாடுகள் செயலாளரின் பேச்சாளர் Herve Ladsous இது தொடர்பில் எவ்வித கருத்துக்களையும் வெளியிடவில்லை. ஆலோசனைக்குழுவின் தீர்மானம் மற்றும் சவேந்திர சில்வாவின் நிலைப்பாடு ஆகியவை தொடர்பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின் போது, இன்னர் சிட்டி பிரஸ் செய்தியாளர் ஐக்கிய நாடுகளின் பேச்சாளரிடம் கேள்வி எழுப்பினார். எனினும், அவர் அதற்கு பதில் எதனையும் வழங்கவில்லை.

சவேந்திர சில்வா ஆலோசனைக் குழுவில் இருந்து தடை செய்யப்பட்டமை தொடர்பில் ஐக்கிய நாடுகளின் செயலாளர் பான் கீ மூன் கவனம் செலுத்தியுள்ளதாக பேச்சாளர் குறிப்பிட்டார்.

இந்நிலையில், சவேந்திர சில்வாவின் விடயம் இன்னும் உறுப்பு நாடுகளின் கைகளிலேயே தங்கியுள்ளது என்று அவர் தெரிவித்தார். இதேவேளை, மாலை நேர செய்தியாளர் சந்திப்புக்காக வந்திருந்த ஐக்கிய நாடுகளின் பாலியல் வன்முறை தொடர்பான நிபுணர் மார்கட் லோஸ்ரோமிடம், சவேந்திர சில்வாவின் தடை பற்றி இன்னர் சிட்டி பிரஸ் கேள்வி எழுப்பியது.

இதன்போது பதிலளித்த வோல்ஸ்ரோம், சவேந்திர சில்வா குறித்த ஆலோசனைக்குழுவில் இருந்து தடை செய்யப்பட்டுள்ளார் என்று குறிப்பிட்டார். இது சரியான தீர்மானமாகவே இருக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.



நேற்று மாலை கந்தர்மடம், பலாலி வீதியில் இரண்டு முச்சக்கர வண்டிகள் மோதி விபத்துக்குள்ளானதில் அவற்றில் ஒன்று பலத்த சேதமடைந்து காணப்படுவதைக் காணலாம். (137)

# உரிமைகளுக்கு மதிப்பளியுங்கள் அரசிடம் கோருகிறது அமெரிக்கா

(கொழும்பு)

சுதந்திரமாக கருத்துக்களை தெரிவிப்பதற்கு நாட்டிலுள்ள அனைத்துப் பிரஜைகளுக்கும் உள்ள உரிமைகளுக்கு மதிப்பளிக்குமாறு வெள்ளை மாளிகை இலங்கை அரசாங்கத்தை கேட்டுக்கொண்டுள்ளது. முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவை விடுவிக்குமாறு கோரி முன்வைக்கப்பட்ட மனுவுக்கு பதிலளிக்கும் வகையில் வெள்ளை மாளிகை இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளது.

வெளிப்படைத்தன்மை நீதி, ஜனநாயகம், சுயாதீன அரச நிறுவனங்கள் மற்றும் நல்லாட்சி என்பவற்றை உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் வெள்ளை மாளிகை இலங்கை அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடுத்துள்ளது. 2010 ஆம் ஆண்டு அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் வெளியிட்ட மனித உரிமைகள் அறிக்கையில், சரத் பொன்சேகா ஒரு அரசியல் கைதியாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளதாக வெள்ளை மாளிகையின் அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

முன்னாள் இராணுவத் தளபதியின் வழிகாட்டலில் அவரது அரசியல் தலைமைத்துவம் புலிகளுக்கு எதிராக மேற்கொண்ட படை நடவடிக்கைகள் தொடர்பில் பிரச்சினைகள் நிலவுவதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. இருந்த போதிலும் சரத் பொன்சேகாவை குற்றவாளியாக அடையாளப்படுத்தி அவருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதன் ஊடாக இலங்கையின் சட்டம் மற்றும் கருத்துச் சுதந்திரத்திற்கு ஏற்பட்டுள்ள அழுத்தங்கள் தொடர்பில் கவனம் செலுத்தியுள்ளதாக வெள்ளை மாளிகையின் அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## ஐ.நா.வுடன்...

ஐ.நா. நிபுணர்குழுவின் அறிக்கையில் எழுப்பப்பட்ட பல கேள்விகளை நல்லிணக்க ஆணைக்குழு பெருமளவில் புறக்கணித்திருப்பது வருத்தத்துக்குரியது.

ஆனாலும், நல்லிணக்க ஆணைக்குழு, படையினராலும் விடுதலைப் புலிகளாலும் இழைத்திருக்கக்கூடிய குற்றங்கள் குறித்து விசாரணை நடத்த அழைப்பு விடுத்துள்ளது.

## அரசியல் கட்சிக்கான...

சித்தார்த்தன் பதிலளிக்கும் போது,

என்னைப் பொறுத்தமட்டில் எதுவுமே சாத்தியப்படக்கூடிய கூற்றுக்கள்தான். ஏனென்றால் சம்பந்தன் அண்ணர் கூட்டமைப்பின் தலைவராக இருக்கின்றார். அவர் தலைமைவகித்துச் செல்ல வேண்டும். அவருடன் சேர்ந்து சங்கரி அண்ணர் அவர்களும் முன்னெடுத்துச் செல்லவேண்டும் என்பதுதான் எனது தனிப்பட்ட விருப்பமாக இருக்கின்றது. இன்று இருக்கக்கூடிய மூத்த தலைவர்கள் இருவர் அவர்கள்தான். மிகவும் நீண்ட காலமாக தமிழ்மக்களுடைய இந்த போராட்டத்தில் பங்குபற்றியவர்களாக இருந்தவர்கள். அத்துடன் அவர்கள் சாத்வீகப் போராட்டத்தில் நம்பிக்கை வைத்து நீண்டகாலம் இயங்கிவந்தவர்கள்.

ஆகவே அவர்களுடைய தலைமையில் அதாவது சம்பந்தன் அண்ணரோ அல்லது சங்கரி அண்ணரோ தலைமையிலே கூட்டமைப்பு செல்வதிலே எந்தத் தவறும் இல்லை.

கூட்டமைப்பின் முடிவு எடுக்கும் அதிகாரம் யாவும் அதன் நாடாளுமன்றக் குழுவில் தங்கியிருக்கிறது. அப்படி இருக்கும்பொழுது உங்களையும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்த சங்கரியையும் இணைத்துக்கொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் செயற்பாடுகள் எப்போது ஆரம்பமாகும் என்று கேட்டபோது அதற்குப் பதிலளிக்கும்போது,

இப்போது கூட்டமைப்புக்கு ஒரு வடிவம் அதாவது அதற்கான ஒரு மத்தியகுழு அல்லது அதற்கான ஒரு அமைப்பு வடிவம் கொடுக்கப்படவில்லை என்பது கசப்பான உண்மை. இன்று நாடாளுமன்றக் குழுதான் அதனுடைய முடிவெடுக்கின்ற ஒரு குழுவாக இருக்கின்றது. அது முற்றிலும் தவறானது என்றே நினைக்கின்றேன். கட்சிகளின் பிரதிநிதிகள் ஒரு குழுவாக இயங்குவதற்கும், நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒரு குழுவாக இயங்குவதற்கும் எவ்வளவோ வித்தியாசம் இருக்கின்றது. ஆகவே முதலிலே ஒரு சரியான அமைப்பைக் கொண்டுவர வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

# பாதிக்கப்பட்ட பளை மாணவனுக்கு பராமரிப்புத் தந்தையாக பிரிட்டிஷ் பிரஜை

யாழ் பாதுகாப்புப் படைகளின் கட்டளைத் தலைமையகம் மேற்கொண்டுள்ள நலன்புரி திட்டத்தின் மேலுமொரு திட்டமாக குறைந்த வருமானமுடைய குடும்பங்களில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு பராமரிப்புப் பெற்றோரை ஏற்படுத்திக் கொடுக்கும் செயற்திட்டமொன்று கடந்த வருடம் ஆரம்பிக்கப்பட்டது.

இதனடிப்படையில் தமது கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக உதவி தேவைப்பட்டிருக்கும் மாணவர்களின் பெயர்ப் பட்டியல் www.cimicjaffna.lk என்ற இணையத்தளத்தில் பிரசுரிக்கப்பட்டதுடன் அதன் பிரதிபலனாக அம் மர்ணவர்களுக்கு உதவி வழங்க கொடையாளர்களுடன் நிறுவனங்களும் முன்வந்துள்ளன.

இராணுவத்தினரின் இந்த முயற்சி பற்றி மகிழ்வுற்ற பிரித்தானியப் பிரஜையொருவர் தனது சுற்றுலாவின் மத்தியில் www.cimicjaffna.lk இணையத் தளத்தின் மூலம் இந்த தகவலையறிந்து பளைப் பிரதேசத்தின் கல்வி கற்கும் மாணவரொருவருக்கு பராமரிப்புத் தந்தையாக கடந்த வெள்ளியன்று இவர் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

பிரித்தானிய பிரஜையான டேவிட் விலியம் என்பவரால் பளை மத்திய மகா வித்தியாலயத்தில் 10ஆம் ஆண்டு கல்வி கற்கும் 16 வயதுடைய அழகரத்தினம் நிஷாந்தன் என்ற மாணவனுக்கு உதவி புரிய தெரிவு செய்யப்பட்டதுடன், யாழ்ப்பாணம் சிவில் இணைப்பதிகாரி அலுவலத்தினால் இந்த மாணவனின் இல்லத்திற்குச் சென்று மேலதிக விபரங்களைப் பெற்று பளை இலங்கை வங்கிக் கிளையில் மாணவனின் பெயரில் சேமிப்புக் கணக்கு ஆரம்பிக்கப்பட்டு மாணவனின் கல்வித் தேவைக்காக மாதாந்தம் பணம் வைப்பிலிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பளை தர்மங்கேணி பிரதேசத்தில் வசிக்கும் அழகரத்தினம் நிஷாந்தனின் தந்தை நோய் வாய்ப்பட்டு 1998 ஆம் ஆண்டு இறந்துள்ளதுடன், அவருடைய குடும்பத்தில் தாய், மூத்த இரு சகோதாரிகள், மூத்த சகோதரர்கள் இருவர் மற்றும் இளைய சகோதரரொருவர் அடங்குவர். 552 ஆவது படையணித் தலைமையகத்தின் தளபதி கேணல் வன்னிஆராச்சி மற்றும் அத்தலைமையகத்தின் சிவில் இணைப்பதிகாரி கேணல் ஆர்.ஆர்.எஸ் ஜயசேகர ஆகியோர் இந்நிகழ்வை ஒருக்கிணைத்தனர்.

## அடையாளம் காட்டி பெற்றுக்கொள்ளலாம்

(யாழ்ப்பாணம்)

யாழ். நீதவான் நீதிமன்றத்தில் கோப்பாய் பொலிஸாரினால் உரிமை கோரப்படாத 3 துவிச்சக்கர வண்டிகள் பாரப்படுத்தப்பட்டிருப்பதாக யாழ். நீதவான் நீதிமன்ற பதிவாளர் தெரிவித்துள்ளார்.

உரியவர்கள் குறித்த துவிச்சக்கர வண்டிகளை யாழ். நீதவான் நீதிமன்றத்தில் உரிய ஆவணங்களுடன் உறுதிப்படுத்தி பெற்றுக்கொள்ள முடியும் என்று பதிவாளர் தெரிவித்துள்ளார். (பா)

## அதிகாரப்...

முன்வைப்பதற்கு தாம் தயங்கவில்லை எனக் குறிப்பிட்ட அவர், அரசாங்கம் அதிகாரப் பகிர்வு மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு ஆகிய விடயங்கள் தொடர்பில் நேர்மையுடன் கலந்துரையாட தயார் எனில் அந்தப் பேச்சுவார்த்தையில் பங்கேற்பதற்கு ஐ.தே.க. தயாராக இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

## பால்மா விலை...

கூறினார். 6 பால் மா இறக்குமதியாளர்களும் டொலருக்கு எதிரான ரூபாவின் பெறுமதி வீழ்ச்சி காரணமாக ஒவ்வொரு கிலோகிராம் பால்மாவுக்கும் 37 ரூபா நட்டத்தை எதிர்கொண்டுள்ளனர் என அவர் கூறினார்.

இவ் விலை அதிகரிப்பு கோரிக்கைக்கு மேற்படி இரு காரணங்களைத் தவிர, உலக சந்தையில் விலை அல்லது வேறு காரணங்கள் எதனுடன் தொடர்பில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

# எரிபொருள் விலை உயர்வு போராடுவோம் வாருங்கள்

## ஷிராந்திக்கு பெண்கள் அமைப்புக்கள் அழைப்பு

(கொழும்பு)

எரிபொருள் விலை அதிகரிப்பு மற்றும் வாழ்க்கைச் செலவு உயர்வு ஆகியவற்றுக்கு எதிரான தமது போராட்டத்தில் முதல் பெண்மணியான ஷிராந்தி ராஜபக்ஷவை இணையுமாறு பெண்கள் அமைப்புக்கள் அழைப்பு விடுத்துள்ளது.

இப்பெண்கள் அமைப்பானது நாடாளுமன்ற உறுப்பினர் ரோஸி சேனநாயக்க, முன்னாள் இராணுவ தளபதி சரத் பொன்சேகாவின் மனைவி அனோமா பொன்சேகா, காணாமல் போயுள்ள ஊடகவியலாளர் பிரகீத் எக்னலிகொடவின் மனைவி சந்தியா எக்னலிகொட ஆகியோருடன் இன்னும் பல பெண்கள் இணைந்து உருவாக்கப்பட்டுள்ளது.

பெண்கள் அமைப்பு, எரிபொருள் விலை அதிகரிப்பு மற்றும் வாழ்க்கைச் செலவு உயர்வு ஆகியவற்றுக்கு ஏதிரான தமது போராட்டத்தில் முதல் பெண்மணியான ஷிராந்தி ராஜபக்ஷவை இணையுமாறு அழைப்பு விடுத்துள்ளது.

தமது அரசியல், சமயம், இனம் என்பவற்றுக்கு அப்பால் ஒவ்வொரு பெண்ணும் இந்த இயக்கத்தில் சேரவேண்டுமென இந்த இயக்கத்தின் தலைவியான வசாக தர்மதாஸ அழைப்பு விடுததுள்ளார்.

சடுதியான இந்த விலை அதிகரிப்புகள் மக்கள் வயிற்றிலடிப்பதாகும் என அனோமா பொன்சேகா கூறினார். தனது கணவனின் ஓய்வூதியம் பறிக்கப்பட்டுள்ளதால் தனக்கு வருமானம் ஏதும் இல்லையெனவும் இதனால் வாழ்கைச் செலவு அதிகரிப்பின் நெருக்குவாரத்தை தன்னால் விளங்க முடிகின்றது என அவர் கூறினார்.

மண்ணெண்ணெய் விலையேற்றம் பற்றி கடற்றொழிலாளர்களின் மனைவியர்கள் என்னிடம் கூறியபோது அவர்களின் சோகத்தை என்னால் காணமுடிந்தது. நாம் ஏன் அமைதியாக இருக்கின்றோம். நாம் துணிந்து பேச வேண்டிய காலம் வந்துவிட்டது என அவர் கூறினார்.

## அழகியல் வளாகம்...

வடபகுதியில் மேற்கொள்ளப்பட்டுவரும் புனரமைப்புப் பணிகளுக்கு இராணுவத்தினரின் மனிதவளம் அதிகளவில் பயன்படுத்தப்படுகிறது. அதுபோன்று தெல்லிப்பளை பிரதேசத்தில் மீளக்குடியமர்ந்துள்ள மக்களுக்கும், பிரதேசத்திற்கும் இராணுவத்தினர் அதிக சேவைகளைச் செய்து வருகின்றனர் எனவும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ, திருமதி கோத்தாபய, தேசமான்ய கே.பாலேந்திரா, திருமதி பாலேந்திரா, ஜனாதிபதி ஆலோசகர் மிலிந்த மொறகொட, வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி, யாழ்.மாவட்ட கட்டளைத் தளபதி ஹத்துருசிங்க,பாடசாலையின் அதிபர் வேல் சிவானந்தன் மற்றும் பெற்றோர்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

# முதலாவது தேசிய கண் வங்கி கொழும்பில் நேற்றுத் திறப்பு

(கொழும்பு)

இலங்கையில் முதல் முறையாக அமைக்கப்படும் தேசிய கண வங்கி நேற்று மாலை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் திறந்து வைக்கப்பட்டது. சிங்கப்பூரின் உயர் தொழில்நுட்பத்தின் கீழ் அமையும் தேசிய கண் வங்கியின் மூலம் நோயாளர்களுக்கு கோர்னியா விழிவெண்படலம் பொருத்தப்படும்.

இலங்கையில் உள்ள நோயாளர்களுக்கு மட்டுமன்றி முழு உலகத்திலும் உள்ள கண் நோயாளர்களுக்கு உதவும் இந்த கண் வங்கி ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலின் கீழ் தேசிய கண் வைத்தியசாலையில் அமைக்கப்பட்டுள்ளது.

சர்வதேச மட்டத்தில் அமையும் தேசிய கண் வங்கிக்காக சிங்கப்பூர் அரசாங்கம் மூன்று கோடி ரூபா நிதியை வழங்கியுள்ளது. ஐந்து வருட திட்டத்தின் கீழ் செயற்படும் தேசிய கண் வங்கியின் எதிர்கால அபிவிருத்தி மற்றும் மேம்படுத்தலுக்கு சிங்கப்பூர் அரசாங்கம் உதவி ஒத்தாசை வழங்கவும் இணக்கம் தெரிவித்துள்ளது.

தேசிய வைத்தியசாலையில் திடீரென உயிரிழக்கும் நோயாளர்களின் கண்கள் புதிய கண் வங்கியின் மூலம் பெற்றுக் கொள்ளப்படும் என்று சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளர் பாலித மஹிபால தெரிவித்துள்ளார். 6 மணி நேரத்துக்குள் இந்த கண் வில்லைகளை பெற்றுக் கொள்ள வேண்டியிருப்பதால் இவ்வாறான திட்டத்தை முன்னெடுத்திருப்பதாக அவர் மேலும் கூறினார.

கண்ணின் வெண் படலத்தில் குறை ஏற்பட்டால் சத்திர சிகிச்சை மூலம் வெண் படலத்தை அகற்றி அதனை மாற்றியமைக்கும் சிகிச்சை மேற்கொள்ளப்பட வேண்டும். இதனை இலகுவாக்கும் வகையில் அவசியமான படலத்தை பெற உதவுவதே இதன நோக்கமாகும் என்று அவர் மேலும் கூறினார்.

## மின் வெட்டு அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

உயரழுத்த மின்விநியோக மார்க்கங்களில் பராமரிப்பு வேலைகள் செய்யும் பொருட்டும், வீதி அகலிப்புப் பணிகளுக்காக உயர் அழுத்த மின்விநியோக மார்க்கங்களை இடமாற்றம் செய்யவேண்டியிருப்பதாலும் 27.02.2012 திங்கட்கிழமை, 29.02.2012 புதன்கிழமை மற்றும் 02.03.2012 வெள்ளிக்கிழமை ஆகிய தினங்களில் காலை 8.30 மணியிலிருந்து மாலை 6.00 மணிவரை புன்னாலைக்கட்டுவன், அச்செழு, புத்தூர், ஆவரங்கால், அச்சுவேலி, இடைக்காடு, வடமராட்சிப் பிரதேசம் ஆகிய இடங்களிலும்,

28.02.2012 செவ்வாய்க்கிழமை, 01.03.2012 வியாழக்கிழமை மற்றும் 03.03.2012 சனிக்கிழமை ஆகிய தினங்களில் காலை 8.30 மணியிலிருந்து மாலை 6.00 மணிவரை கரந்தன், நீர்வேலி, சிறுப்பிட்டி, கோப்பாய், இருபாலை, முடமாவடிப் பகுதி, பாற்பண்ணைப் பகுதி, திருநெல்வேலி நகரம், மருத்துவபீடப் பிரதேசம், ஆடியபாதம் வீதி கொக்குவில் சந்தி வரையான பிரதேசம், கல்வியங்காடு, நல்லூர்,அரியாலை, தென்மராட்சிப் பிரதேசம், சுன்னாகம், மல்லாகம், ஏழாலை, தெல்லிப்பளை, அளவெட்டி, பன்னாலை, சிறுவிளான், குப்பிளான், மயிலங்காடு, காங்கேசன்துறை உயர்பாதுகாப்பு வலயப்பகுதி ஆகிய இடங்களிலும்,

04.03.2012 ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 6.00 மணிவரை கொட்டடி,நாவாந்துறை, மீனாட்சிபுரம், காக்கைதீவு, யாழ். பிரதான வீதியில் பண்ணை முதல் பஸ்ரியன் சந்திவரையான பிரதேசம் ஆகிய இடங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

# காணிகளுக்கு உரிமம் வழங்கப்படவில்லை விவசாய நடவடிக்கைகள் பாதிப்பு

ஜெயபுரம் பிரதேசத்திலுள்ள விவசாயிகளுக்கு அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட காணிகளுக்கு உரிமங்கள் வழங்கப்படாததால் விவசாய நடவடிக்கைகள் மேற்கொள்ள முடியாத நிலை காணப்படுவதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

இப்பிரதேசத்தில் தெய்வன் கட்டுக் குளத்திற்கு அருகிலுள்ள 548 ஏக்கர் காணி 1986 ஆம் ஆண்டு அரசாங்கத்தால் இப்பிரதேச விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது.

இதன் பின்னர் கடந்த கால போர்ச் சூழல்நிலையால் மக்கள் இடம்பெயர்ந்து தற்போது மீள குடியமர்ந்து இரண்டு வருடங்கள கழிந்துள்ள நிலையில் விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு உரிமங்கள் இல்லாததால் தாம் காலபோக நெற்செய்கையை மேற்கொள்ள முடியாது இருப்பதாகத் தெரிவிக்கின்றனர்.

இதனால் நாம் வாழ்வாதார ரீதியில் பாதிக்கப்படுவதாகவும் உதவிகளைப் பெற்றுக்கொள்ள முடியாது தாம் சிரமங்களுக்குள்ளாவதாக கவலை தெரிவிக்கின்றனர். இது குறித்து கமக்கார அமைப்புக்கள் அரச அதிபர் மற்றும் அரச அதிகாரிகள், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குத தெரியப்படுத்தியதாகவும் எனினும இதுவரை எந்தவித நடவடிக்கையும் முன்னெடுக்கப்படவில்லை என சுட்டிக்காட்டுகின்றனர். வேறு தொழில் எதுவும் தெரியாத நிலையில் விவசாயத்தை நம்பி வாழும் தமக்கு இக்காணிகளுக்கான உரிமங்கள் கிடைக்கப்பெற்றால் தாம் இலகுவாக விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ளக் கூடியதாக இருக்கும் என விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

## பருத்தித்துறையில் நடமாடும் சேவை

பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலயத்தில் இன்று பருத்தித்துறை பொலிஸாரின் நடமாடும் சேவை இடம்பெறும். காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகும் இச்சேவையில் அடையாள அட்டை மற்றும் பிறப்பு இறப்புச் சான்றிதழ் தொடர்பான பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண முடியும். மேலும் இலவச வைத்திய சேவையும் இடம்பெறும். (116)

# கடத்தப்பட்ட சிறுமி பொலிஸாரால் மீட்பு

(கொழும்பு)

புத்தளம், முந்தல் பிரதேச பாலர் பாடசாலையில் கல்வி பயின்று கொண்டிருந்த நிலையில் கடத்திச் செல்லப்பட்ட மூன்றரை வயதுச் சிறுமி நேற்று பொலிஸாரின் அதிரடி நடவடிக்கையை அடுத்து மீட்கப்பட்டுள்ளார்.



அத்துடன், மேற்படி சிறுமியைக் கடத்திச் சென்று சிறுமியின் பெற்றோரிடம் கப்பம் பெற்றார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் அச்சிறுமியின் உறவுமுறை அண்ணன் ஒருவரும் 45 வயதான பெண்ணொருவருமாக இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று முந்தல் பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் தொடர்பில் மேலும தெரியவருவதாவது, கடந்த புதன கிழமை கடத்தப்பட்டிருந்த மேற்படி சிறுமியை விடுவிக்க வேண்டுமாயின் 50 இலட்சம் ரூபாவைக் கப்பமாக கொடுக்கவேண்டும் என்று அச்சிறுமியின் தாயாரிடம் கடத்தல்காரர்கள் தொலைபேசி மூலம அறிவித்துள்ளனர். இருப்பினும் அத்தொகைப் பணம் தன்னிடம் இல்லாததால் அதனைக் குறைத்துக்கொள்ளுமாறு சிறுமியின் தாயார் வேண்டிக்கொண்டதை அடுத்து 15 இலட்சம் ரூபாவினை வழங்குமாறு மேற்படி கடத்தல்காரர்கள் குறிப்பிட்டுள்ளனர். அததுடன், அத்தொகைப் பணத்தை எடுத்துக்கொண்டு சிறுமியின் தாயார் மாத்திரம் பஸ்ஸில் வர வேண்டும் என்றும் அவர்கள் அச்சுறுத்தியுள்ளனர்.

இவ்விடயம் தொடர்பில் நடவடிக்கை எடுத்த பொலிஸார், சுமார 200 பேர் அடங்கிய 5 விசேட பொலிஸ் குழுக்களை சிவில் மற்றும் சீருடையில் முந்தல் மற்றும் ஆரச்சிகட்டுவ பிரதேசங்களில் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபடுத்தியிருந்தனர். இந்நிலையில், ஆரச்சிகட்டுவ பிரதேசத்துக்கு சிறுமியையும் அழைத்துக்கொண்டு மோட்டார் சைக்கிளில் வந்த பிரதான சந்தேகநபரும் பெண்ணும், சிறுமியின் தாயிடம் பணத்தைப் பெற்றுக்கொண்டதுடன் அப்பகுதியில் பொலிஸ் நடமாட்டம் இருப்பதைக் கண்டு சிறுமியை கையளிக்காமல் மோட்டார் சைக்கிளில் மிக வேகமாகப் பயணித்துள்ளனர.

இதனையடுத்து அவர்களைப் பின்தொடர்ந்து சென்ற பொலிஸார், வழிமறித்து சிறுமியை மீட்டுள்ளதுடன் சந்தேகநபர்கள் இருவரையும் கைது செய்துள்ளனர். அத்துடன் சந்தேகநபர்களால் கபபமாகப் பெற்றுக்கொள்ளப்பட்ட 15 இலட்சம் ரூபா பணத்தையும கைப்பற்றியுள்ளனர். இந்நிலையில், பொலிஸாரால் மீட்கப்பட்ட சிறுமி, இத்தாலியிலிருந்து நேற்று காலை நாடு திரும்பிய சிறுமியின் தந்தையிடம் கையளிக்கப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களிடம் முந்தல் பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# இரத்தினக்கல் காணி ஏலம் 270 மில்லியன் வருமானம்

(கொழும்பு)

கதிர்காமத்தில் அண்மையில் இரத்தினக்கற்கள் கண்டுபிடிக்கப்பட்ட காணியை இரத்தினக்கல் அகழ்வு நடவடிக்கைக்காக தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபையினால் ஏலத்தில் விடப்பட்டது. 29 காணித்துண்டுகளை ஒருவருடகாலத்திற்கு அகழ்வு நடவடிக்கைக்காக பயன்படுத்துவதற்கான இந்த ஏலத்தின் மூலம் இச்சபைக்கு 270.9 மில்லியன் ரூபா வருமானம் கிடைத்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த ஏலத்தில் ஆர்வம் கொண்ட 500 அங்கத்தவர்கள் பங்குபற்றியதாக தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபையின் தலைவர் பிரசாத் கல்ஹேன கூறினார்.

# எவருக்கும் அநீதி இழைக்காமல் பயிலுனர் பட்டதாரி நியமனங்கள்

(கொழும்பு)

எவ்வித முறைகேடும் இல்லாமல் எவருக்கும் அநீதி இழைக்கப்படாத வகையில் பயிலுனர் பட்டதாரி நியமனங்கள் வழங்கப்படும் என அரச நிருவாக உளநாட்டு அலுவல்கள் அமைச்சர் டி.ஜே. செனவிரத்ன நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் அநுர குமார திஸாநாயக்க நிலையியல் கட்டளை 23 - 2 இன் கீழ் ஆற்றிய உரையில் கேட்கப்பட்ட கேள்விக்கு பதில் அளித்துப் பேசுகையிலேயே அமைச்சர் இதனைத் தெரிவித்தார். பயிலுனர் பட்டதாரி நியமனங்கள் வழங்கப்படுவதில் முறைகேடுகள் இடம்பெற்றுள்ளதாக அநுர குமார திஸாநாயக்க தமது உரையில் சுட்டிக்காட்டினார்.

எமது அரசு பதவிக்கு வந்தது முதல் போட்டிப் பரீட்சை மூலம் அரச துறைகளில் பட்டதாரிகளுக்கு நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன. அதன்படி 5000 இற்கும் மேறபட்ட பட்டதாரிகளுக்கு நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன. இந்த முறைக்கு மேலதிகமாக பயிலுனர் பட்டதாரி நியமனங்களை வழங்க அமைச்சரவை முடிவுக்கு ஏற்பட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. அதற்காக 2012 பெப்ரவரி 16 இல் விண்ணபங்கள் கோரப்பட்டதுடன் மார்ச் 30 இல் முடிவு திகதி அறிவிக்கப்பட்டது. அதன்படி யாருக்கும் அநீதி ஏற்படாத வகையில் முறையாக தெரிவுகள் நடத்தப்பட்டு நியமனங்கள் வழங்கப்படும் என்றார்.

# கையடக்கத் தொலைபேசி விவகாரம் 10 வயதுச் சிறுவன் தற்கொலை முயற்சி

சிறுவன் ஒருவன் மண்ணெண்ணெய் ஊற்றி தன்னைத்தானே எரித்துத் தற்கொலை முயற்சியில் ஈடுபட்டுள்ளான். பொலிகண்டிப் பகுதியில் நேற்று 2.00 மணிக்கு இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. இச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த செல்வராசா தேவகுலராஜா (வயது - 10) என்ற சிறுவனே உடல் கருகிய நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பாகத் தெரியவருவதாவது,

சகோதரியின் கையடக்கத் தொலைபேசியை எடுத்துவைத்து விளையாடிக்கொண்டிருந்த சிறுவன் கையடக்கத் தொலைபேசியினை எடுத்துத் தண்ணீரில் போட்டுள்ளார். சகோதரி கையடக்கத் தொலைபேசி எங்கே என கேட்டதைத் தொடர்ந்து சிறுவன் மண்ணெண்ணெய் ஊற்றி எரிந்துள்ளார். சிறுவர் ஊறனி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (எஸ்)

## தேவை

புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள வாரப்பத்திரிகையில் கடமையாற்றுவதற்கு உதவி ஆசிரியர், அலுவலகச் செய்தியாளர்கள், ஒப்புநோக்குனர்கள் ஆகிய பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. க.பொ.த (சா.த), க.பொ.த உயர்தரத்தில் தமிழ்ப் பாடத்தில் திறமைச்சித்தியுடன் எழுத்தாற்றல் உள்ளவர்கள் விண்ணப்பிக்கவும். பத்திரிகைத் துறையில் முன் அனுபவம் விரும்பப்படும். கடித உறையின் மீது விண்ணப்பிக்கும் பதவிப்பெயரை குறிப்பிட்டு இல.127, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு 25 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்கவும்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2012 பெப்ரவரி 25 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.